இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 86 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 18 – சனிக்கிழமை 04 நவம்பர் 2023 – மதுரை 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 86: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 18- Saturday 04 November 2023 - Madurai 16 Pages ₹ 5.00



## தமிழ்நாட்டில் 38 மாவட்டங்களிலும் தொடங்கப்படுகிறது!

# சென்னையில் ‘நடப்போம் - நலம் பெறுவோம்’ திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - இன்று தொடங்கி வைக்கிறார்!

**சென்னை, நவ.4-**

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இந்தாண்டு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, மானியக் கோரிக்கையில், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ‘நடப்போம்; நலம் பெறுவோம்’ எனும் நோக்கில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் 8 கிலோ மீட்டர் (10,000 அடிகள்) தூரம் நடக்கும் நடைப்பயிற்சி Health Walk நடைபாதைகள் உருவாக்கப்படும் - என்று வெளியிட்ட அறிவிப்பின்படி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று (4.11.2023 - சனிக்கிழமை) காலை 6.00 மணி அளவில் சென்னை - அடையாறு முத்துலட்சுமி ரெட்டி பூங்கா அருகில் துவங்கி 2 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று, பெசன்ட் நகர் கடற்கரை சாலையில் இத்திட்டத்தைத் துவக்கி வைக்கிறார்.**

**மற்ற 37 மாவட்டங்களிலும் ‘நடப்போம் - நலம் பெறுவோம் Health Walk திட்டம் காணொலி வாயிலாகத் துவக்கி வைக்கப்பட உள்ளது.**

**முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்படும், “நடப்போம்; நலம் பெறுவோம்” Health Walk நிகழ்வில் அனைவரும் பங்கேற்றுச் சிறப்பிக்குமாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

அதன் விபரம் வருமாறு:-

சட்டப்பேரவையில், கடந்த ஆண்டு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மானியக் கோரிக்கையின் போது, அமைச்சர் மா.சுப்பிரமணியன்;

“உலக சுகாதார அமைப்பின் தரவுகள்படி உடற்பயிற்சி செய்வது நீரிழிவு மற்றும் இரத்த அழுத்த நோய்களின் தாக்கத்தை 27 சதவீதமும், இதய நோயின் தாக்கத்தை 30 சதவீதமும் குறைக்கின்றது என்று அறியப்படுகிறது.

**மன அழுத்தத்தைக் குறைக்கும்!**

நடைபயிற்சியானது மக்களை சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமான எடையுடன் இருக்கவும் நாள்பட்ட உடல் பிரச்சினைகள் மற்றும் மன அழுத்தத்தை குறைக்கவும் உதவுகிறது.



ஆகவே ‘நடப்போம்; நலம் பெறுவோம்’ என்பதற்கிணங்க பொதுமக்களின் நலன் மற்றும் ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு, அனைத்து மாவட்டங்களிலும் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து 8 கி.மீ. தூரம் கொண்ட நடைபாதையைக் கண்டறிந்து, ஆரோக்கியமான நடைபயிற்சி மேற்கொள்வதற்கான நடைபாதைகள் ஏற்படுத்தப்படும்.

**ஆரோக்கியமான வாழ்க்கை!**

இதன் அடிப்படையில் அனைவரும் தினந்தோறும் நடைபயிற்சி மேற்கொள்ள ஊக்குவிக்கப்படுவதோடு ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை உள்ளூர் மக்களுடன் இணைந்து மாவட்ட அலுவலர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகிய அனைவரும் “சுகாதார நடைபயிற்சியில்” பங்கேற்பார்கள்.

நடைபயிற்சியின் முடிவில் ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் நல்வாழ்வு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்.”

- என்று அறிவித்தார்.

சட்டப்பேரவையில் வெளியிடப்பட்ட இந்த அறிவிப்பின்படி, மாவட்டந்தோறும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்று, இத்திட்டம் நிறைவேற்றப்படுவதைக் கண்காணித்தும், செம்மையுற அப்பணி நிறைவுற வழிகாட்டியும் விரைவுபடுத்தி வந்தார்.

மக்கள் நலம் பேணும் இந்த மகத்தான திட்டம் தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களிலும் சிறப்புற நிறைவுற்று, அதன் தொடக்க விழா இன்று (4.11.2023 - சனிக்கிழமை) காலை நடைபெறுகிறது.

இந்நிகழ்வு குறித்து - அமைச்சர் மா.சுப்பிரமணியன் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

‘நடப்போம்; நலம் பெறுவோம்’ எனும் நோக்கில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் 8 கிலோ மீட்டர் (10,000 அடிகள்) தூரம் நடக்கும் நடைப்பயிற்சி Health Walk நடைபாதைகள் உருவாக்கப்படும் - என்று வெளியிட்ட அறிவிப்பின்படி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று (4.11.2023 - சனிக்கிழமை) காலை 6.00 மணியளவில் சென்னை - அடையாறு முத்துலட்சுமி ரெட்டி பூங்கா (ஆவின் பூங்கா) அருகில் துவங்கி 2 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று, பெசன்ட் நகர் கடற்கரை சாலையில் இத்திட்டத்தைத் துவக்கி வைக்கிறார்.

மற்ற 37 மாவட்டங்களிலும் ‘நடப்போம் - நலம் பெறுவோம் Health Walk திட்டம் காணொலி வாயிலாகத் துவக்கி வைக்கப்பட உள்ளது.

முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்படும், “நடப்போம்; நலம் பெறுவோம்” Health Walk நிகழ்வில் அனைவரும் பங்கேற்றுச் சிறப்பிக்குமாறு - அமைச்சர் மா.சுப்பிரமணியன் அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



‘நீட் விலக்கு நம் இலக்கு’ என்ற குறிக்கோளுடன் 50 லட்சம் கையெழுத்து பெறுவதன் ஒரு பகுதியாக, கழக இளைஞரணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று சத்தியமூர்த்தி பவனுக்குச் சென்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ்.அழகிரி அவர்களிடம் கையெழுத்துப் பெற்றார். சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் செல்வப் பெருந்தகை மற்றும் கே.வி.தங்கபாலு, கிருஷ்ணசாமி, பீட்டர் அல்போன்ஸ் உள்ளிட்ட காங்கிரஸ் முன்னணித் தலைவர்களும் அதற்கான அட்டையில் கையெழுத்திட்டனர்.

## நீட் விலக்கு நம் இலக்கு: சென்னையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ்.அழகிரி மற்றும் முன்னணித் தலைவர்களிடம் கையெழுத்து!

# மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தலைவர்களிடம் கையெழுத்து!

### இளைஞரணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

சென்னை, நவ.4-

சென்னையில், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ்.அழகிரி மற்றும் காங்கிரஸ் மூத்த நிர்வாகிகளிடம் நீட் தேர்வுக்கு எதிராக சத்தியமூர்த்தி பவனில் கையெழுத்துகளைப் பெற்றார்.

பின்னர், செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறியதாவது:-

“நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்கக் கோரி 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துகளைப் பெற்று, சேலம் இளைஞரணி மாநாட்டில் அதை சமர்ப்பித்து, குடியரசுத் தலைவருக்கு அதை அனுப்பி வைப்பதுதான் எங்களுடைய இலக்கு. ஆன்லைன் வழியாக தங்களது கையெழுத்தைப் பதிவு செய்யலாம். இதுவரை, 3 லட்சம் கையெழுத்துகளைப் பெற்றுள்ளோம்.

அதுபோல், 10 லட்சம் அஞ்சல் அட்டைகள் அச்சிடப்பட்டு, இதுவரை 8 லட்சம் அஞ்சல் அட்டைகளில் கையெழுத்துப் பெற்றுள்ளோம்.

இன்று கூட்டணிக் கட்சித் தலைவர்களான காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி, சட்டமன்றக் குழுத் தலைவர் செல்வப்பெருந்தகை உள்ளிட்டோர் மற்றும் காங்கிரஸ் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கையெழுத்திட்டுள்ளனர். தொடர்ந்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் அனைத்து தலைவர்களையும் சந்திக்க இருக்கிறேன்”

இது தி.மு.க.வின் தனிப்பட்ட பிரச்சினை கிடையாது. ஒட்டு மொத்த மாணவர்களின் கல்வி உரிமை; மருத்துவ உரிமை. நீட் தேர்வு நுழைவால் இதுவரை 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது அமைச்சர் எ.வ.வேலுவுக்குச் சொந்தமான இடங்களில் நடைபெற்று வரும் வருமான வரித்துறை சோதனை குறித்து அவரிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு, “அது வழக்கமாக நடப்பதுதான். இப்போது காங்கிரஸ் கட்சியில் பல்வேறு அணிகள் இருக்கின்றன. மாணவர் அணி, இளைஞர் அணி, மருத்துவர் அணி என்று பல அணிகள் உள்ளன. அதுபோல பா.ஜ.க.வின் ஒரு அணிதான் வருமான வரித் துறை. ஐடி, அமலாக்கத்துறை இவையெல்லாம் பா.ஜ.க.வினுடைய அணிகள். அவர்கள் பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதை சட்டப்படி சந்திப்போம்”

“தேர்தல் நெருங்குவதால் மிரட்டும் வகையில் இதுபோன்ற சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா?” என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர், “கடந்த இரண்டு மூன்று மாதங்களாகவே, பா.ஜ.க. அணிகளின் இதுபோன்ற செயல்பாடுகள் அதிகமாக இருக்கின்றன” என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

## 4 ஆண்டுகள் ஆகியும் பணிகள் தொடங்கவில்லை - ஆனால்

# மதுரை எய்ம்ஸ் பேராசிரியர்களுக்கு நேர்முகத் தேர்வு!

*மதுரை, நவ.4-*


*பிரதமர் மோடி அடிக்கல் நாட்டி 4 ஆண்டுகள் ஆகி பணிகள் தொடங்கப்படாமல் சுற்றுச்சுவர் மட்டுமே கட்டப்பட்ட மதுரை எய்ம்ஸ்க்கு பேராசிரியர்கள், விரிவுரையாளர்களுக்கான நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டுள்ளது.*

*மதுரை தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டப்படும் என கடந்த 2018 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். 2023 ஆம் ஆண்டு எய்ம்ஸ் மருத்துவமனை திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டு 4 ஆண்டுகளுக்கு மேலாகியும் கட்டுமானப் பணிகள் துவங்காமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது.*

*10 கோடி ரூபாய் செலவில் 5 கிலோ மீட்டருக்கு சுற்றுச்சுவர் மட்டும் கட்டப்பட்டுள்ளது. இதனால் மதுரை எய்ம்ஸ் மருத்துவ மாணவர்கள் ராமநாதபுரம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் படித்து வருகின்றனர். இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு தோப்பூர் காசநோய் மருத்துவமனை வளாகத்தில் எய்ம்ஸ் நிர்வாக அலுவலகம் 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டது.*

*இதனைத்தொடர்ந்து மருத்துவ கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள நிறுவனங்களை தேர்வு செய்ய டெண்டர் விடப்பட்டு, அந்த டெண்டர் பணிகளும் நிறைவடையாமல் உள்ள நிலையில் எய்ம்ஸ் மருத்துவமனைக்கான மருத்துவ பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், நிர்வாக அதிகாரிகளுக்கான நேர்முகத்தேர்வு நேற்று முன்தினம் இயக்குநர் அனுமந்தராவ் தலைமையில் நடைபெற்றது.*

*இதில், பல்வேறு மாநிலங்களில் இருந்து மருத்துவர்கள் நேரடி தேர்வு மூலமாகவும், ஒரு சில பணியிடங்களுக்கு ஆன்லைன் மூலமாகவும் கலந்து கொண்டனர். கட்டுமானப் பணிகள் குறித்து எந்த அறிவிப்பும் வெளியாகாமல் உள்ள நிலையில் தேர்வு மட்டும் நடத்தப்பட்டுள்ளது அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.*



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 04-11-2023

# ஒட்டுக் கேட்க வைக்கும் பயம்

இந்தியாவில் எதிர்க்கட்சி எம்.பி.க்களின் செல்போன்கள் ஒட்டுக் கேட்கப்படுவதாக ஆப்பிள் நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஐபோன் பயன்படுத்தும் எதிர்க்கட்சித் தலைவர்கள், பத்திரிகையாளர்களுக்கு ஆப்பிள் நிறுவனம் அனுப்பியுள்ள செய்தியால் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

**மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ், காங்கிரஸ் எம்.பி., சசிதரூர், காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் பவன் கேரா, திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி., மகுவா மொய்த்ரா, சிவசேனா கட்சியின் உத்தவ் தாக்கரே பிரிவைச் சேர்ந்த பிரியங்கா சதுர்வேதி, ஆம் ஆத்மி கட்சியின் ராகவ் சத்தா எம்.பி. மற்றும் ராகுல் காந்தி அலுவலகத்தில் பணிபுரியும் 3 பேர் உள்ளிட்டோருக்கு ஆப்பிள் போன் நிறுவனம் இதுபற்றிய எச்சரிக்கைக் குறுஞ்செய்தி அனுப்பியுள்ளது. அரசியல் தலைவர்கள் மட்டுமின்றி மூத்த பத்திரிகையாளர் சித்தார்த் வரதராஜன் உள்ளிட்டோரின் செல்போன்களும் ஒட்டுக் கேட்கப் பட்டுள்ளன.**

‘அரசின் ஏற்பாட்டில் செல்போன்கள் ஒட்டுக் கேட்கப்படுவதாக’ ஆப்பிள் நிறுவனத்தில் இருந்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் பயன்படுத்தும் ஐ - போன் மற்றும் மின்னஞ்சல்களை அரசின் உதவி பெறும் அமைப்பால் ‘ஹேக்’ செய்ய முயற்சி செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பா.ஜ.க.வின் கெட்ட அரசியல் அம்பலமாகி உள்ளது.

ஜனநாயக நாட்டில் சுதந்திரம் பறிக்கப்படுவதாக குற்றம்சாட்டியுள்ள அகிலேஷ், “இப்படி துப்பறிந்து என்ன சாதிக்கப் போகிறீர்கள்?” எனக் கேள்வி எழுப்பியுள்ளார். எதிர்க்கட்சித் தலைவர்களின் செல்போன்கள் ஒட்டுக் கேட்கப்படுவதற்கு கண்டனம் தெரிவித்துள்ள காங்கிரஸ் முன்னணித் தலைவர் ராகுல் காந்தி, “செல்போன் ஒட்டுக்கேட்பது நேர்மையானவர்கள் செய்யும் செயல் அல்ல, குற்றவாளிகள் செய்யும் செயல்” என்று விமர்சித்துள்ளார். “எவ்வளவு ஒட்டுக்கேட்டாலும் எங்களுக்கு அச்சமில்லை” எனவும் அவர் கூறியுள்ளார்.

**எதிர்க்கட்சித் தலைவர்களின் செல்போன்கள் ஒட்டுக் கேட்கப்படுவதாக ஆப்பிள் நிறுவனம் தெரிவித்துள்ள குற்றச்சாட்டு குறித்து விசாரணைக்கு உத்தரவிடப் பட்டுள்ளதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. இப்புகார்கள் குறித்த விசாரணைக்கு ஒத்துழைக்கும்படி ஆப்பிள் நிறுவனத்திற்கும், எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக ஒன்றிய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார். “இதை விட கேலிக்கூத்து இருக்க முடியாது” என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விமர்சித்துள்ளார்கள். குற்றம் சாட்டப்பட்டவர்களே விசாரணை நடத்துவதாகச் சொல்வதை அவர் விமர்சித்துள்ளார்.**

பா.ஜ.க. அரசு மீது இத்தகைய குற்றச்சாட்டுகள் வருவது புதிதல்ல. மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக பெகாசஸ் பூதம் கிளம்பியதை யாரும் மறந்திருக்க முடியாது.

இஸ்ரேலைச் சேர்ந்த என்.எஸ்.ஓ. நிறுவனத்தின் பெகாசஸ் மென்பொருள் மூலம் உலகம் முழுவதும் உள்ள மனித உரிமைப் போராளிகள், பத்திரிகையாளர்கள், தொழிலதிபர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட 50 ஆயிரம் பேரின் செல்போன் தகவல்கள் திருடப்பட்டுள்ளதாக ‘தி கார்டியன்’, ‘வாஷிங்டன் போஸ்ட்’ ஆகிய இதழ்கள் செய்தி வெளியிட்டு, 2021 ஆம் ஆண்டு ஜுலையில் அதிர்ச்சியை ஏற்படுத்தியன.

**இந்தியாவைச் சேர்ந்த இணைய தள செய்தி நிறுவனமான ‘தி வயர்’, இந்தியாவில் 40 பத்திரிகையாளர்கள், 2 மத்திய அமைச்சர்கள் உட்பட 300 பேரின் ஸ்மார்ட்போன் தகவல்கள் திருடப்பட்டதாகத் தெரிவித்தது. இதில் அமைச்சர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள், விஞ்ஞானிகள், மனித உரிமைப் போராளிகள் ஆகியோரது ஸ்மார்ட்போன் எண்களும் அடங்கும். இந்தச் செய்தி வெளியானதும், “நாங்கள் சட்டத்துக்குப் புறம்பாக எதையும் செய்யவில்லை” என்று ஒன்றிய அமைச்சர் அஸ்வினி அப்போது மறுத்தார்.**

“அரசுகளுக்கு மட்டுமே பெகாசஸ் மென்பொருள் விற்கப்பட்டுள்ளது. சீன அரசோ, பாகிஸ்தான் அரசோ இந்தியக் குடிமக்களை உளவு பார்க்க முடியாது. இது தேச பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விவகாரம் என்பதால் நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணை வேண்டும்” என்று எதிர்க்கட்சிகள் அப்போது கோரிக்கை வைத்தன.

“தொலைபேசி ஒட்டுக் கேட்பு புகார் குறித்து நாடாளு மன்றத்தில் உள்துறை அமைச்சர் அமித்ஷா விளக்கம் அளிக்க வேண்டும். இஸ்ரேல் நிறுவனத்துடன் மோடி அரசுக்குத் தொடர்பா? இல்லையா? என்பதுபற்றி விளக்க மளித்தால் நல்லது. இல்லாவிட்டால் அமெரிக்காவின் வாட்டர்கேட் ஊழல் போல இது தலைவலியாக மாறும்” என்று சுப்பிர மணியன் சுவாமியே அப்போது சொன்னார்.

மென்பொருள் விற்பனையில் முறைகேடு, அரங்கேறியதாகக் கூறப்படுவதை மறுத்த என். எஸ்.ஓ. நிறுவனம், “ஜனநாயகம் இல்லாத நாடுகளுக்கு அந்த மென்பொருளை விற்பனை செய்வதால் எழுந்த விமர்சனங்களைப் பொருட்படுத்தத் தேவையில்லை” என்று விளக்கமளித்தது. அதாவது, இவர்கள் யார் போனையும் ஒட்டுக் கேட்பார்கள். அதனை சகித்துக் கொள்வது தான் ஜனநாயகம் என்று இந்தியாவுக்குக் கற்றுக் கொடுக்கப் பார்த்தது அந்த நிறுவனம்!

இதுகுறித்து வழக்கறிஞர் எம்.எல்.சர்மா என்பவர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ஆர்.வி.ரவீந்திரன் தலைமையில் மூவர் குழுவை உச்சநீதிமன்றம் அமைத்தது. இக்குழு 2022 ஆகஸ்ட் 26 அன்று தனது அறிக்கையைத் தாக்கல் செய்தது. அதிலாவது ஏதாவது உண்மை வெளிவந்ததா என்றால் இல்லை. அந்தக் குழு தனது அறிக்கையில், “விசாரணைக்கு ஒன்றிய அரசு ஒத்துழைக்கவில்லை” என்று தெரிவித்தது.

மேலும், அந்தக் குழுவின் அறிக்கை குறித்து உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா , “உளவு மென்பொருள் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் 29 தொலைபேசிகளில் 5-ல் மட்டுமே உளவு மென்பொருள் இருந்தது. ஆனால், அவையும் பெகாசஸ் உளவு மென்பொருள்தானா என்பது உறுதியாகவில்லை” என்றார்.

‘அரசு ஒத்துழைக்கவில்லை’ என்று நிபுணர் குழு கூறியதைப் பற்றி உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சுட்டிக் காட்டி கண்டனத்தைத் தெரிவித்தார். “இங்கே எப்படி ஒத்துழைக்க வில்லையோ அதேபோல் அங்கே விசாரணை ஆணையத்திலும் மத்திய அரசு ஒத்துழைக்கவில்லை போல” என்றார். அதற்கு அரசுத் தரப்பு சொலிசிட்டர் ஜெனரல், ‘அது பற்றி தனக்குத் தெரியாது’ என்று கூறினார். அத்தோடு இந்த வழக்கே கிடப்பில் போடப்பட்டது.

இந்த நிலையில் இப்போது, ‘ஆப்பிள் பூதம்’ கிளம்பி இருக்கிறது. இது தொடர்பான விசாரணையிலும் உண்மை எதுவும் வெளியில் வரப் போவது இல்லை. ஆனால், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னதைப் போல, ‘பா.ஜ.க.வின் தோல்வி பயம்’ வெளியில் வந்துள்ளது.

●●



வேலூர் மாவட்டம் காட்பாடியில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள்துறை சார்பில் நடந்த சமுதாய வளைகாப்பு விழாவில் கலந்து கொண்டு கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசைப் பொருட்களை வழங்கி, கழக பொதுச் செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் பேசினார்.அருகில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன், மாவட்ட ஆட்சியர் குமரவேல் பாண்டியன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், ஒன்றியக் குழுத் தலைவர் வேல்முருகன், மண்டலகுழு தலைவர் புஷ்பலதா, மாமன்ற உறுப்பினர் விமலா சீனிவாசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### 1.42 லட்சம் விவசாயிகள் பயனடைவர்!

# கரும்பு விவசாயிகளின் நலனுக்காக ரூ.253.70 கோடி ஊக்கத்தொகை!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அறிக்கை!

சென்னை, நவ. 4-

சர்க்கரை ஆலைகளுக்கு 2022-2023 அரவைப் பருவத்திற்கு பதிவு செய்து கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகை வழங்குவதற்காக ரூ. 253.70 கோடி வழங்கி ஆணை வெளியீட்டுள்ளதாக வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

கரும்பு சாகுபடிப் பரப்பினையும் உற்பத்தியையும் அதிகரிப்பதற்காக, அதிக கரும்பு மகசூலுடன், அதிக சர்க்கரைக் கட்டுமானமும் தரக்கூடிய கரும்பு இரகங்களை பிரபலப்படுத்துதல், கரும்பு விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குதல் மற்றும் மானிய விலையில் சொட்டு நீர்ப்பாசனம், கரும்பு அறுவடை இயந்திரங்கள் வழங்குதல் ஆகியவை தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசு, நலிவடைந்து வரும் சர்க்கரை ஆலைகளில் புனரமைப்பு, எத்தனால் உற்பத்தித் திட்டம், இணைமின் திட்டம் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதால் சர்க்கரை ஆலைகளின் திறன் மேம்படுத்தப் பட்டு வருகிறது.

**கரும்பு சாகுபடிப் பரப்பு அதிகரிப்பு!**

கரும்பு விவசாயிகளின் நலனுக்காக அரசு எடுத்த நடவடிக்கைகளினால், 2020-21 அரவைப்பருவத்தில் 95,000 எக்டராக இருந்த கரும்புப் பதிவு, 2022-23 அரவைப் பருவத்தில் 1,50,000 எக்டராகவும், கரும்பு அரவை 98.66 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 160.54 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும் அதிகரித்துள்ளது. மேலும் சர்க்கரைக் கட்டுமானம் கடந்த பத்து ஆண்டுகளுக்கு பிறகு 2022-23 அரவைப் பருவத்தில் 9.27 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.



**கரும்புக்கு சிறப்பு ஊக்கத் தொகை!**

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள், 2023-24 ஆம் ஆண்டு வேளாண்மை நிதி நிலை அறிக்கையில், 2022-23 அரவைப்பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய தகுதியுள்ள விவசாயிகளுக்கு டன்னுக்கு ரூ.195/ சிறப்பு ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என்று அறிவித்தார். ஒன்றிய அரசு 2022-23 ஆம் அரவைப் பருவத்திற்கு அறிவித்துள்ள நியாயமான மற்றும் ஆதாய விலையான (Fair and Remunerative Price) ரூ.2821.25/யைக் காட்டிலும் கூடுதலாக மாநில அரசின் சிறப்பு ஊக்கத் தொகையாக டன்னுக்கு ரூ. 195 வழங்கிடும் வகையில், தமிழ்நாடு அரசு ரூ.253.70 கோடி நிதியினை மாநில நிதியிலிருந்து வேளாண்மை உழவர் நலத்துறைக்கு வழங்கி ஆணையிட்டுள்ளது.

சிறப்பு ஊக்கத் தொகையுடன் சேர்த்து டன்னுக்கு ரூ.3016.25/ அரசு வெளியிட்டுள்ள இந்த ஆணையின்படி, தமிழ்நாட்டில் இயங்கி வரும் இரண்டு பொதுத்துறை, 14 கூட்டுறவு மற்றும் 15 தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு 2022-23 அரவைப் பருவத்தில் கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள நியாயமான மற்றும் ஆதாய விலையான ரூ.2821.25 மற்றும் மாநில அரசின் சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.195யையும் சேர்த்து, டன் ஒன்றுக்கு ரூ.3016.25/ கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

2022-23 அரவைப் பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளின் விபரம் சேகரிக்கப்பட்டு சர்க்கரைத்துறை ஆணையரகத்தால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான மாவட்ட அளவிலான குழுவின் பரிந்துரையின்படி, தகுதியுள்ள விவசாயிகளுக்கு, சிறப்பு ஊக்கத் தொகை வழங்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

கரும்பு விவசாயிகளின் நலனுக்காக ரூ.253.70 கோடி மதிப்பில் தமிழ்நாடு அரசு வழங்கும் சிறப்பு ஊக்கத்தொகையினால் சுமார் 1.42 இலட்சம் கரும்பு விவசாயிகள் பயனடைவார்கள்.

### காரைக்குடியில் இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில்

# 100 கலைஞர்கள் பங்கேற்ற - கலைஞர் நூற்றாண்டு - கலைத்திருவிழா!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் - வாகை சந்திரசேகர் பங்கேற்பு!

சிவகங்கை, நவ.4-

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் சார்பில் காரைக்குடி கண்ணதாசன் மணி மண்டபத்தில் கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு 100கலைஞர்கள் பங்கேற்ற கலைத் திருவிழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், இயல், இசை, நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர் ஆகியோர் கலை திருவிழா நடத்திய கலைஞர்களை சான்றிதழ் வழங்கி பாராட்டினார்கள். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கூட்டுறவு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது:-

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டினைமுன்னிட்டு 100 கலைஞர்கள் பங்கேற்ற கலைத்திருவிழாவினை சிறப்பாக நடத்தினார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சாதனைகளை அனைத்து மக்களும் தெரிந்து, கொள்ளும் வகையில் 30க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் முத்தமிழறிஞர்தேர் என்ற வாசகத்துடன் வலம் வர உள்ளது. இதனால் தலைவர் கலைஞரை பற்றிய முழுமையான வரலாறுகளை இன்றைய இளைய தலைமுறையினர் தெரிந்துகொள்ளமுடியும். வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிகளை கலைநயத்துடன் அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் மக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் சிறப்பான பணியினை நாடகக் கலைஞர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் சிறப்பான நல்லாட்சியை நடத்தி வரும் முதல்வர் தளபதி அவர்கள் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி அவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்து வருகிறார். இங்கும் நாடக நடிகர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். இது குறித்து நானும் நலவாரிய தலைவர் வாகை சந்திரசேகர் ஆகியோர் முதல்வரிடம் தெரிவிப்போம். தலைவர் கலைஞர் வழியில் சிறப்பான ஆட்சி நடத்தி வரும் முதல்வர் அவர்களால் நல்லதொரு பயன் கிடைக்க முயற்சி செய்வோம். இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர் பேசியதாவது:-

தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களால் 1973 ஆம் ஆண்டு இயல், இசை, நாடக மன்றம் என்று பெயர் சூட்டப்பட்டது. மேலும் மாநில அளவில் இயல், இசை, நாடகம், நாட்டியம், கிராமிய கலைகள், திரைப்படம், சின்னத்திரை மற்றும் ஓவியம் போன்ற கலைகளை போற்றி பாதுகாக்கவும், துறை சார்ந்த கலைஞர்களுக்குத் தேவையான உதவிகளையும் கலை வளர்ச்சி பணிகளையும் செயல்படுத்து வதை தனது உயர்ந்த நோக்கமாக கொண்டு இந்த மையம் செயல்பட்டு வருகிறது. குறிப்பாக நலிவுற்ற கலைஞர்களுக்கு மாதம்தோறும் நிதியுதவி, புதிய நாட்டிய நாடகங்கள் தயாரிப்பிற்கான நிதி உதவி, புதிய கலை இலக்கிய நூல்களை பதிப்பதற்கான நீதி உதவி, மாநில மாவட்ட அளவில் கலைவிழாக்களை நடத்துதல், தமிழின் சிறப்புகளை இளைஞர்கள் மத்தியில் கொண்டு சேர்க்கும் விதமாக முத்தமிழ் முகாம் சிறப்பு திட்டம் நாட்டுப்புற கலைஞர்களுக்கு ஆடை அணிகலன்கள் வாங்க உதவிகள், அவர்களுக்கு இசைக்கருவிகள் வாங்க ஆண்டு தோறும் நிதிஉதவி, வழங்குதல் போன்ற பல்வேறு பணிகளை செய்து வருகிறது. மேலும் வருடம் தோறும் சிறந்த கலைகளை தேர்ந்தெடுத்து அவர்களை கௌரவிக்கும் விதமாக கலைமாமணி விருது வழங்கி சிறப்பித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழர் திருநாளை முன்னிட்டு பொங்கல் திருநாளில் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் கலைசங்கமம் கலைத் திருவிழா நடத்தி மக்களின் வரவேற்பினை பெற்றது. இங்கு நடைபெறும் கலைத் திருவிழாவில் 100 கலைஞர்கள் பங்கேற்று பல்வேறு நிகழ்ச்சிகளை திறம்பட நடத்தினார்கள். இந்த நிகழ்ச்சி சிறப்புற அமைய பாடுபட்ட அனைவருக்கும் வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு வாகை சந்திரசேகர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் எஸ். மாங்குடி எம்.எல்.ஏ வாழ்த்திப் பேசினார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் கோட்டாட்சியர் ஏஸ்.பால் துரை, நகர்மன்ற தலைவர் எஸ்.முத்து துரை, துணைத்தலைவர் என். குணசேகரன், தமிழ்நாடு இயல், இசை, நாடகக் கலைஞர்கள் பேரவையின் மாநிலத் தலைவர் எம்ஆ.ர். எம்.பாலசுப்பிரமணியன், ஒருங்கிணைப்பாளர் சோமசுந்தரம் உட்பட கலைஞர்கள் கலந்து கொண்டார்கள். கலைத்திருவிழாவில் தப்பாட்டம், ஒயிலாட்டம், கிராமிய பாடல்கள் , மயில் நடனம், நாடகங்கள் போன்ற பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.



நெல்லை மாவட்டம் நாங்குநேரி வட்டம் திருக்குறுங்குடி கிராமம் கொடுமுடியாறு நீர்தேக்கத்தில் இருந்து பிசான பருவ சாகுபடிக்கு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு அவர்கள், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் முன்னிலையில் தண்ணீர் திறந்து வைத்தார். உடன் அதிகாரிகள், கழகத்தினர் பலர் உள்ளனர்.

## ஆளுநர் போல் செயல்படாமல் திராவிடம் பற்றியும் ஆரியம் பற்றியும் இட்டுக்கட்டி பேசுகிறார்!

# ஆர்.எஸ்.எஸ்.ஸின் பிரச்சார பீரங்கி ஆர்.என்.ரவி!

## 'நியூஸ் 7' தொலைக்காட்சியில் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

சென்னை, நவ. 4 -

**தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி முறையாக செயல்படாமல், திராவிடம் பற்றியும் ஆரியம் பற்றியும் இட்டுக்கட்டி பேசி வருவதோடு, ஆர்.எஸ்.எஸ்.ஸின் பிரச்சார பீரங்கியாகவும் செயல்படுகிறார் என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.**

'நியூஸ் 7' தொலைக்காட்சி 'வியூகம்' நிகழ்ச்சியில் நெறியாளர் சுகிதா நேர்காணலில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அளித்த பேட்டி வருமாறு:-

**நெறியாளர் சுகிதா:** தமிழ்நாட்டில் சமீப காலமாக பேசும் பொருளாக ஆகியிருப்பது, பிறருடைய கவனத்தை ஈர்த்து இருக்கக் கூடியது ஆளுநர் மாளிகை பாதுகாப்பு . அரசு அதில் என்ன செய்திருக்கிறது.?

**கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி:** ஒரு அரசு என்ன செய்ய வேண்டுமோ அதனை செய்திருக்கிறது. அதில் தனி கவனம் செலுத்தி, ஏற்கனவே ஆளுநருக்கு கொடுக்கப்பட்ட பாதுகாப்பை தற்போது அதிகமான பாதுகாப்பு கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த வழியாக போகின்றவர்களுக்கு தெரியும். ராஜ்பவன் கேட் என்பது பப்ளிக் அதிகமாக வரும் ஒரு இடம். ஒரு நாளைக்கு பல்லாயிரக்கணக்கானோர் வாகனத்தில் சென்று வந்து கொண்டிருக்கிறார்கள்.

அங்கே எவ்வளவோ பேர் நிற்கிறார்கள் என்பதை நாம் எல்லோரும் பார்த்து இருப்போம். ஆளுநர் உள்ளே இருக்கிறார். வெளியே பாதுகாப்பு இருக்கிறது. எல்லா விதமான பாதுகாப்பும் இது வரையில் ஆளுநர்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பை விட இவருக்கு தனியாகத்தான் பாதுகாப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது.

**நெறியாளர்:-** தி.மு.க. மற்றும் தி.மு.க. கூட்டணி கட்சிகள் தொடர்ந்து என் மீது கடுமையான விமர்சனத்தை வைக்கிறார்கள். அவதூறு செய்கிறார்கள். தொடர்ந்து என்னை ஒருமையில் பேசுகிறார்கள். இப்படியான வார்த்தைகளை பயன்படுத்தி ஆளுநருடைய அறிக்கையில் தி.மு.க.வும், தி.மு.க. கூட்டணி கட்சியினரும் பற்றி ஆளுநர் கூறியதை எப்படி பார்க்கிறீர்கள்?

**ஆர்.எஸ்.பாரதி:-** எங்களுக்கு ஆளுநர் ஒரு பொருட்டே கிடையாது. முதலில் ஆளுநர் தமிழ்நாட்டின் வாக்காளரே கிடையாது. அவரைப்பற்றி எங்களுக்கு கவலையே கிடையாது. அவர் ஒன்றிய அரசால் அனுப்பி வைக்கப்பட்ட ஒரு ஆளுநர் அவ்வளவுதான் என்று நாங்கள் நினைக்கிறோம்.

அவர் தன்னை ஒரு அரசியல்வாதியாக நினைத்துக் கொண்டு, அரசியல்வாதி போல் பேசுகிறார். எங்கள் தலைவர் தெளிவாக சொல்லிவிட்டார். அவர் 'இக்னோர்' செய்ய வேண்டியதுதான். காரணம். 'அவர், தொடர்ந்து இருந்தால் தான் எங்களுக்கு நல்லது' என எங்கள் தலைவர் சொல்லி விட்டார்.

### ஆளுநரின் அஜெண்டா தமிழ்நாட்டில் எடுபடாது!

**நெறியாளர்:-** ஆளுநராக அரசியலமைப்புச் சட்டத்திற்குட்பட்டு இருப்பதால் தான் நீங்கள் மசோதாவை அவருக்கு அனுப்புகிறீர்கள். அவர் நிலுவையில் வைத்து இருக்கிறாரோ இல்லையோ, ஆனால் அவர் ஒரு தலைமையில் இருக்கின்றவர் . தொடர்ந்து நியமன உறுப்பினர் ஆளுநர் எங்களுக்கு ஒரு பொருட்டே இல்லை என்று பேசுவது, ஏதோ ஒரு வகையில் அவரைத் துன்பப்படுத்தத்தானே செய்யும்.?

**ஆர்.எஸ்.பாரதி:-** அவர் எங்களை துன்பப்படுத்த வேண்டும் என்று நினைக்கிறார். சட்டமன்றத்தில் அவர் நடந்து கொண்ட முறை, ஆனால் ஒன்று அவருடைய அஜெண்டா எல்லாம் இங்கே எடுபடாது. மிகப்பெரிய தலைவர்களாலேயே தமிழ் நாட்டில் எங்களுடைய சித்தாந்தத்திற்கு எதிர்ப்பான கருத்தை சொல்லி அவர்களால் வெற்றி பெற முடியாது.

இந்த ஆளுநர், இவரும் டெம்பரவரியாக கேசியல் லேபர் மாதிரி ஒரு பீரியட் இருந்துவிட்டுப் போவார். அது கூட வருகின்ற மே மாதம் வரைக்கும்தான். ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு அவர் சென்று விடுவார்.

**நெறியாளர்:-** அமைதிப்பூங்காவாக இருந்த தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி இருக்கிறது. ஆளுநர் மாளிகை முன்பு இப்படியான ஒரு சம்பவம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அறிக்கை வெளியிட்டு இருக்கிறாரே?

**ஆர்.எஸ்.பாரதி:-** தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை அகிலஇந்திய அளவில் கணக்கெடுத்து சொல்லி இருக்கிறார்கள். இதனை அகில இந்திய அளவில் இருக்கின்ற குற்றப் புலனாய்வு அமைப்பு சொல்லி இருக்கிறது. அதாவது வாழ்வதற்கு தகுதியான மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் என்று சொல்லி இருக்கிறார்கள்.

இதனைக் கண்டு எடப்பாடி பெருமைப் படவேண்டும். அதனை குறைசொல்கிறார் என்றால் அவர் குறை சொல்லி தானே ஆக வேண்டும். ஏதாவது ஒன்றினை அவர் பேசிதானே ஆக வேண்டும்.

**நெறியாளர்:-** ஆளுநர் மாளிகை முன்பு பெட்ரோல் பாட்டில் வீச்சில் ஒரு நபரோடு அந்தக் கேஸை முடிக்கப்பார்க்கிறார்கள். இதனை தூண்டி விட்டவர்கள் யார்? என்று முறையான விசாரணை நடத்தவில்லை என்று ஆளுநர் அறிக்கையில் இருக்கிறது. இது அவரது மற்றொரு குற்றச்சாட்டு?

**ஆர்.எஸ்.பாரதி:-** ஒரு குற்றம் நடக்கிறது என்றால் அந்த சம்பவம் நடக்கும் போதே குற்றவாளியை பிடித்து விடுகிறார்கள். தேடி பிடித்தோ, ஓடிப்போயோ பிடிக்கவில்லை. காவல்துறை எந்த அளவிற்கு கவனத்தோடு இருந்தார்கள் என்பதற்கான எடுத்துக்காட்டு , வெடிகுண்டு போடுவதற்கு முன்பே பிடித்து விடுகிறார்கள். இதனை இந்த தமிழ்நாட்டின் 'ஆளுநராக' இருக்கின்றவர் பாராட்டி இருக்க வேண்டும். அவரை பிடித்தவர் ஒரு சாதாரண கான்ஸ்டபிள்தான். சென்ட்ரி நின்றவர், இப்படி கடமை உணர்ச்சியோடு கடமை ஆற்றியவர் இருக்கிற தமிழ்நாட்டில் தான் கவர்னராக இருப்பதில் பெருமைப்படுகிறேன் என்று சொல்லி இருக்க வேண்டும்.

அதனைவிட்டுவிட்டு இந்த நிகழ்வை கவர்னரை பார்த்தது இல்லை. அவர் உள்ளே இருக்கிறார். இந்நிகழ்வை அப்படியே டி.ஜி.பி. போட்டு பொதுமக்களுக்கு எல்லாம் இதனை காண்பித்து விட்டார். இந்தச் சம்பவம் நடந்த உடனே அவரை கைது செய்து எப்.ஐ.ஆர்.போடவேண்டும். இதுதான் நடைமுறை. எப்.ஐ.ஆர்.போட்டு பின் செக்சன் போடுவார்கள்.

அதன் பிறகு விசாரணை தொடங்கும். விசாரணை தொடங்கி அவை முடிவடைந்த போது சார்ஜ் ஷீட் போடும் போது செக்சன் கூட அப்போது தான் முடிவு செய்வார்கள். சார்ஜ் ஷீட் போடுவதற்கு டிரையல் நடத்திய பிறகு தான் முடிவு செய்வார்கள்.

இவரை ஒரே நாளில் போலீசார் பிடித்தவுடனே கைது செய்துவிடுறார்கள். 24 மணி நேரத்திற்குள் மாஜிஸ்திரேட் முன்பு ஆஜர் படுத்த வேண்டும் என்பது விதி. அதனால் 24 மணி நேரத்திற்குள் ஆஜர் செய்திருக்கிறார்கள். இதில் என்ன நடைமுறை கடைபிடிக்கவில்லை. இதில் என்ன தவறு?

இதற்குப் பின்னால் மிகப் பெரிய ஒரு சதி பி.ஜே.பி.யால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இவ்வளவு நாள் சிறையில் இருந்தவனை யாருமே ஜாமீன் எடுக்க வில்லை. திடீர் என்று இரண்டு நாட்களுக்கு முன்பு அவர் ஜாமீன் எடுக்கப்படுகிறார். எடுத்தவர் ஒரு முன்னாள் பி.ஜே.பி. அதாவது பி.ஜே.பி. அட்வகேட்.

இவ்வளவு நாள் யாருமே கேட்பாரற்று கிடந்த இந்தக் குற்றவாளியை திடீரென்று ஜாமீனில் எடுத்த இரண்டாவது நாள் இப்படி ஒரு சம்பவம் என்றால், ஒரு அசைன்மெண்டோடு தான் அவரை ஜாமீனில் எடுத்து இருக்கிறார்கள் என்பது என்னுடைய சந்தேகம்.

இந்தச் சந்தேகத்தை தீர்க்க வேண்டியது விசாரணை செய்பவர்களின் பொறுப்பு . இவை எல்லாம் வெளியே வரும்.

### தமிழ்நாட்டிற்கு எதிர்ப்பாக பேசுவதை எப்படி ஏற்பது?

**நெறியாளர்:-** பா.ஜ.க. தரப்பில் தி.மு.க. வழக்கறிஞரும் ஜாமீனில் எடுக்கும் போது இருந்தார்கள் என்றுதானே சொல்கிறார்கள்.

**ஆர்.எஸ்.பாரதி:-** கோர்ட்டில் நிற்பவர்கள் எல்லாம் ஆஜர் ஆனார்கள் என்று சொல்லமுடியுமா? யார் மெமோ போடுகிறார்களோ அவர்களைத்தானே சொல்ல முடியும். நான் என்ன சொல்கிறேன், இப்படி ஒரு சந்தேகம் எனக்கு ஏற்பட்டு இருக்கிறது. இந்தச் சந்தேகத்தைப் போக்க வேண்டியது காவல் துறையின் பொறுப்பு. இந்த சந்தேகத்தை போலீசார்தான் போக்க வேண்டும். காரணம், திட்டமிட்டு ஏதோ ஒரு சதி நடக்கிறது.

தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு இல்லை. இது கவர்னருடைய பேச்சு. இதற்கு முன்பு இருந்த கவர்னர்கள் இப்படி பேசியது கிடையாது. அவர் ஒவ்வொரு இடமும் சென்று அரசியல்தான் பேசுகிறார். தமிழ்நாட்டைப் பற்றி பேசுகிறாரா? தமிழ்நாட்டின் வளர்ச்சி இவ்வளவு அடைந்து இருக்கே, இதனைப் பற்றி பேசுகிறாரா?

இந்தியாவிலேயே இருக்கின்ற மாநிலத்தில் ஒன்றிய சர்க்காரே ஏற்றுக் கொண்டு தமிழ் நாடு பல துறைகளில் முதலில் இருக்கின்றது என்று சொல்லி இருக்கிறது. அவர் இந்த ஸ்டேட்டின் ஹெட்டாக இருந்துகிட்டு, எங்கள் வரிப்பணத்தை வாங்கிக் கொண்டு, தமிழ் நாட்டு மக்களின் வரிப்பணத்தை வாங்கிக் கொண்டு, ஆளுநராக உட்கார்ந்து கொண்டு, எங்களுக்கு எதிர்ப்பாக பேசுகிறார் என்றால் இதனை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்.? ஜனநாயகத்தில் இதனை எப்படி ஜீரணிக்க முடியும்.?

நாகாலாந்தில் இவரை ஏன் விரட்டி அடித்தார்கள்.? இவரை மாற்றிய அன்றைக்கு அங்கே என்ன நடந்தது? பண்டிகை மாதிரி விழா எடுத்தார்கள், அம் மாநில மக்கள். இந்த கவர்னர் மாறுதல் வந்தவுடன் விழா நடத்தினார்கள் என்று எல்லா பத்திரிகைகளும் செய்தி வெளியிட்டன.

நாகாலாந்தில் இருந்து இவர் மாற்றப்பட்டவுடன், நாகாலாந்து மக்களும் அரசியல் வாதிகளும் அங்கே விழாவாக நடத்தினார்கள். அப்படிப்பட்டவர் இங்கே வந்திருக்கிறார். இவரைப் போன்று பத்து பேர் வந்தாலும் அவர்களை சந்திக்கின்ற ஆற்றலும் திறமையும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு.

இந்தக் கட்சி தோன்றியதில் இருந்து எதிர்ப்பிலே வளர்ந்த இயக்கம். எந்தப் பத்திரிகையும் ஆதரவு கிடையாது. மைக்கையும் நாக்கையும் வைத்து வளர்ந்த ஒரே கட்சி தி.மு.க.

### ஆளுநரே முழு முதற் காரணம்!

**நெறியாளர்:-** ஆளுநர் சனாதனம் பற்றி பல இடங்களில் பேசுகிறார். நீங்களும் அதற்கு சித்தாந்த ரீதியில் பதில் சொல்கிறீர்கள், அவர் திராவிடம் குப்பை என்று பேசுகிறார். நீங்கள் அதற்கு பதிலடி கொடுக்கிறீர்கள். இந்த சித்தாந்த முரண் இந்த அளவிற்கு முற்றுவதற்கு, எங்கேயாவது இதனை யாராவது ஒருவர் சுமூகத் தீர்வினை நோக்கி நகர்ந்து இருக்கலாம் இல்லையா? தமிழ்நாடு அரசோ, அல்லது ஆளுநர் தரப்போ அதற்கான முயற்சிகள் ஏதாவது நடந்துள்ளதா?

**ஆர்.எஸ்.பாரதி:-** இதற்கு முழு முதற் காரணம் ஆளுநர்தான். ஆளுநர்தான் இதனை ஆரம்பித்து வைத்தார். அவர்தான் ஒவ்வொரு காலேஜ்க்கு போய் பேசினார். முதலில் ஆன்மிகத்தைப் பற்றிப் பேசினார். அதற்கு அடுத்து திராவிடம் - ஆரியம் பற்றி பேசினார். ஆரியம் - திராவிடம் என்று பேச ஆரம்பித்தார் என்றால் எங்களுடைய 100 ஆண்டு கால வரலாறு சொல்ல ஆரம்பித்தால், ஒரு வகையில் ஆளுநர் எங்களுக்கு மறைமுகமாக உதவி செய்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும். இந்த சமுதாயத்திற்கு திராவிடம் செய்தவைகள் எல்லாவற்றையும் மறந்து விட்டது. அவர்களுக்கு ஞாபகப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பு கொடுக்கிறார். திராவிடம் என்றால் என்ன, ஆரியம் என்றால் என்ன என்று இட்டுக்கட்டி பேசுகிறார். இது ஆளுநருடைய வேலையா .அவர் என்ன ஆர்.எஸ்.எஸின் பிரச்சார பீரங்கியா? அல்லது சங்கரமடத்தில் போய் காவி சட்டை போட்டுக் கொண்டு பேச வேண்டியதுதானே. எதற்காக போலீஸ் எஸ்காட்டோடு போய், கவர்ன்மெண்டோட வரிப்பணத்தில் உட்கார்ந்து கொண்டு இந்தப் பிரச்சாரத்தை பேசுகிறார்.

**நெறியாளர்:-** நான் கொடுத்த புகார் அடிப்படையில் நான் சொல்கின்ற வழக்கின் அடிப்படையில் எல்லாம் கைது செய்யவில்லை. அவசர அவசரமாக ஏதோ ஒரு வழக்கில் கைது செய்துவிட்டார்கள் என்று சொல்கிறாரே ஆளுநர்.

**ஆர்.எஸ்.பாரதி:-** இவர் கொடுக்க வேண்டிய அவசியமே இல்லையே. போலீஸ்காரர் முன்பு எதிரில் நடந்தது. உள்ளபடியே அந்த கான்ஸ்டபிள்தான் புகார் கொடுக்க வேண்டும். இந்தச் சம்பவம் உள்ளே போய் நடந்து அவர் அடிப்பட்டு இருந்தால் புகார் கொடுப்பதில் நியாயம் இருந்திருக்கும். உள்ளேயே போக வில்லை. ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் எதிரில் தான் நடந்து இருக்கிறது. அதனால்தான் சொல்கிறேன். விசாரணையில் இவையெல்லாம் தெரிய வரும்.

### தூங்குவது போல் நடிக்கிறார் ஆளுநர்!

**நெறியாளர்:-** தருமபுரம் ஆதீனம் விவகாரத்திலும் நான் புகார் கொடுத்தேன். அதன் மீதும் நடவடிக்கை எடுக்க வில்லை. டி.ஜி.பி. சங்கர் ஜிவால் நேற்றைக்கு ஒரு விளக்கம் அளிக்கிறார். இருந்தாலும் மீண்டும் ஆளுநர் தன் அறிக்கையில் புகாராக சொல்லி இருக்கிறாரே.?

**ஆர்.எஸ்.பாரதி:-** நான் முதலிலே சொன்ன மாதிரி தூங்குகிறவனை எழுப்பி விடலாம். ஆளுநர் தூங்குகிற மாதிரி நடிக்கிறார். இந்த அரசாங்கத்தின் மீது எந்தக் குற்றச்சாட்டும் சொல்ல முடியவில்லை. அது மட்டுமல்ல, இந்த மகளிர் உரிமைத் தொகை கொடுத்தப் பிறகு தமிழ் நாடு முழுவதும் எங்கள் தலைவருக்கு, தமிழ்நாட்டு அரசுக்கு கிடைத்து இருக்கின்ற செல்வாக்கைப் பார்த்து அவர்களுக்கு ஐ.பி. மூலமாக தகவல் போய் இருக்குமே.

**நெறியாளர்:-** தி.மு.க.வின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு நாடாளுமன்றத்திலேயே ஆளுநரை திரும்பப் பெற வேண்டும் என்று விமர்சனங்களை வைத்தார். தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சிகள் இரண்டு முறை, முதல் முறை குடியரசுத் தலைரை பார்க்க சென்று பார்க்க முடியவில்லை. மற்றொரு முறை குடியரசுத்தலைவரை பார்த்து கோரிக்கை வைத்தீர்கள். இவரை மாற்ற வேண்டும் என்று. ஆனால் இப்போது முதலமைச்சர் சொல்கிறார், இவர் இங்கேயே இருக்கட்டும். குறைந்தபட்சம் மக்களவைத் தேர்தல் வரைக்குமாவது இருக்கட்டும் என்று சொல்கிறார். இவை முரணாக இருக்கிறதே?

### ஆரியர் - திராவிடர் பற்றி இன்னும் பேசட்டும்!

**ஆர்.எஸ்.பாரதி:-** முரணாக இல்லை. இருக்கும் எதார்த்தமான நிலைமையைப் பார்த்தால் இவர் நீடிப்பது தான் நல்லது. இவர் ஆரியம் - திராவிடம் பேசினார். மீண்டும் அதனைப் பற்றி நாங்கள் பேச ஆரம்பித்தால் எங்கள் கட்சிக்கு மேலும் இளைஞர்களிடத்தில் வலுசேர்க்கும். ஒரே ஒரு உதாரணத்தை சொல்கிறேன். கலைஞர் அவர்களின் இறுதி ஊர்வலத்தில் இலட்சக்கணக்கான இளைஞர்கள் பங்கேற்றார்கள். அதற்கு என்ன காரணம் தெரியுமா, உங்களுக்கும் சேர்த்து தான் நான் நன்றி சொல்கிறேன். ஒரு வாரகாலமாக இந்த ஊடகங்கள் கலைஞர் செய்த சாதனைகளை எல்லாம் போட்டு காட்டினார்கள். அதற்குப் பிறகு தான் இங்கே இருக்கின்ற இளைஞர்கள் கலைஞர் இவ்வளவு செய்து இருக்கிறாரா? என்று தெரிந்து கொண்ட, இளைஞர்கள் ஆர்வத்துடன் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினார்கள். அதே போல் இன்றைக்கு இவர் செய்கிறார். ஏன் திராவிட இயக்கம் தோன்றியது. நீதி கட்சி துவக்கப்பட்டதின் நோக்கம் என்ன? அன்றைய நிலைமை எப்படி இருந்தது. எத்தனை பேர் நீதிபதிகளாக இருந்தார்கள். எத்தனை பேர் மாவட்ட ஆட்சியர்களாக இருந்தார்கள். எத்தனை பேர் இப்படி உயர் பதவிகளில் இருந்தார்கள். மற்றவர்கள் எல்லாம் எங்கே இருந்தார்கள். இன்றைக்கு அவர்கள் எல்லாம் இந்த பொறுப்புகளில் உட்கார்வதற்கு யார் காரணம்? இவையெல்லாம் பாடப் பயிற்சி எடுப்பது போன்றது. நான் எல்லாம் இந்த இயக்கத்திற்கு வந்ததற்கு காரணம், அந்த உணர்வோடுதான் வந்தேன். இன்றைக்கு 75 வயது ஆனாலும், எங்களைப் போன்ற வயதானவர்களுக்கு 90 வயதில் கூட வீரமணி அவர்கள் பதைக்கிறார்கள் என்றால் என்ன காரணம்.? அந்தக் காலத்தில் பட்ட கஷ்டங்கள் எங்களுக்குத் தெரியும். இன்றைக்கு இருக்கக் கூடிய தலைமுறைக்கு இவையெல்லாம் தெரியவில்லை. அதனை தெரிய வைப்பதற்கு ரவி இருக்கிறார். நிச்சயமாக அவர் தொடர்ந்து ஆரியம் - திராவிடம் பற்றி பேசட்டும்.



### 'இந்தியா' கூட்டணி கண்டு அலறல்!

**நெறியாளர்:-** ஒரு பக்கம் பிரதமர் மற்ற மாநிலங்களில் நடக்கின்ற விழாக்களில் கூட தி.மு.க. பற்றியும், தி.மு.க. ஊழல் கட்சி என்றும் தொடர்ந்து பேசி வருகிறார். வாரிசு அரசியல் குறித்து பேசுகிறாரே?

**ஆர்.எஸ்.பாரதி:-** அதற்கு காரணம் என்னவென்றால், 'இந்தியா' கூட்டணியை ஆரம்பிக்க காரணமாக இருந்தவரே எங்கள் தலைவர்தான். அவருடைய பிறந்த நாள் விழாவின் மேடையால் யார் பிரதமராக வர வேண்டும் என்பதல்ல, யார் பிரதமராக வரக் கூடாது என்பதுதான் என்று அவர் கூறிய அந்த ஒற்றைச் சுலோகம் தான் இந்தியா முழுவதும் ஓர்க்அவுட்டாகி இன்றைக்கு எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. அதனால்தான் இன்றைக்கு எல்லா கட்சிகளும் ஒன்றாக வந்து சேர்ந்திருக்கிறது. இது மிகப்பெரிய வயிற்றெரிச்சலாக மோடிக்கு ஏற்பட்டு இருக்கின்ற காரணத்தால் சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தான் என்பதை மாதிரி சும்மா இருந்த எல்லா கட்சிகளையும் ஒரே அணியில் சேர்த்தது, மு.க.ஸ்டாலின் அவர்கள்தான். எனவே பர்ஷனலாக அட்டாக் செய்ய ஆரம்பித்து இருக்கிறார்கள். வாரிசு அரசியல் என்பதற்கு பல முறை நாங்கள் பதில் சொல்லிவிட்டோம்.

பி.ஜே.பி.யில் இருக்கின்ற 50, 60 பிள்ளைகள் மந்திரியின் வீட்டுப் பிள்ளைகள் தானே இருக்கிறார்கள். மோடிக்கு மட்டும் வாரிசு இல்லை என்றால் நாங்கள் என்ன செய்ய முடியும். பக்கத்தில் இருக்கின்ற அமித்ஷாவினுடைய பிள்ளை இப்போது என்னவாக இருக்கிறார். அவருடைய வாரிசுதானே. கிரிக்கெட்டுக்கும் அவருடைய வாரிசுக்கும் என்ன சம்பந்தம். ராஜ்நாத் பிள்ளை எங்கே இருக்கிறார். இவையெல்லாம் கேள்வி கேட்க கேட்க இப்படி பதில் சொல்ல வேண்டி வரும்.

அதுமட்டுமல்ல இந்தியா முழுவதுமே தமிழ்நாட்டில் இருந்து இவர் தான் செய்கின்றார் என்ற நிலை தற்போது ஏற்பட்டு இருக்கிறது. அதனால் பிரதமர் அவர் மீது கோபப்படுகிறார். அதுவும் ஒரு வகையில் நல்லதுதான்.

**நெறியாளர்:-** 'இந்தியா' என்று கூட்டணிக்கு நீங்கள் பெயர் வைத்தது. இப்போது இந்தியா என்கின்ற பெயர் இருக்கின்ற இடத்தில் எல்லாம் பாரத் என்று மாற்றுவதற்கான முயற்சிகள் நடந்து கொண்டு இருக்கின்றதே?

**ஆர்.எஸ்.பாரதி:-** இதுவே எங்களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்று நான் நினைக்கிறேன். எங்கள் பெயரைக் கேட்டே பயப்படுகிறார்கள் என்றால் அடுத்து நாங்கள் தான் வரப்போகிறோம். வந்த உடனே பாரத் என்ற பெயர்கள் எங்கே எல்லாம் இருக்கிறதோ அங்கே எல்லாம் இந்தியா என்ற பெயரை மாற்றுவோம்.

### அ.தி.மு.க. - பா.ஜ.க. முறிவு என்பது நாடகம்!

**நெறியாளர்:-** அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி முறிந்து விட்டது. அ.தி.மு.க. அவர்கள் மாவட்டச் செயலாளர்களைக் கூப்பிட்டு தீர்மானம் நிறைவேற்றினார்கள். எதிர்க்கட்சித் தலைவராகவும், அந்தக் கட்சி பொதுச்செயலாளராகவும் எடப்பாடி இனி கூட்டணிக்கு வாய்ப்பே இல்லை அப்படி என்று சொல்லிவிட்டார். ஆனால் தி.மு.க. அதனை நாடகம், நாடகம் என்று சொல்லி நாடகமாகவே பார்க்கிறார்கள். ஏன் நீங்கள் அதனை நாடகமாகவே பார்க்கிறீர்கள்!

**ஆர்.எஸ்.பாரதி:-** ஏன் என்றால் அவர்களுடைய கடந்த கால வரலாற்றை எடுத்துப் பாருங்கள். எம்.ஜி.ஆர். இருக்கும் போது ஜெயலலிதாவைப் பற்றி எப்படி பேசினார். கேவலமாக பேசினார். அதன் பிறகு அந்த அம்மாவை தெய்வத்தாய் என்றார்கள் பன்னீர்செல்வத்தையும், ஓ.பி.எஸ்.சையும் இவர் ஒரு இலை, அவர் ஒரு இலை என்றார்கள். இப்போது இரண்டு பேரும் நிற்கிறார்கள். அதனால் இவர்களிடத்தில் ஒரு பிடிப்பு என்பது கிடையாது.

என்னைப் பொறுத்த மட்டும் தேர்தல் பிரச்சாரம் முடிகின்ற மாலை 5 மணி வரை கூட நான் அதனை நம்பத் தயாராக இல்லை. அதற்கு முன்னாடி கூட சொல்வார்கள், எங்களுக்கு பதில் பா.ஜ..க.வுக்கு ஓட்டு போடுங்கள் என்று சொன்னால் கூட சொல்வார்கள். அதனால் இவற்றை நாங்கள் மட்டுமல்ல மக்களே சந்தேகப்படுகிறார்கள். எடப்பாடி பேசினார் இல்லையா? யாராவது ஒருவர் மோடியை எதிர்த்துப் பேசுகிறார்களா? மோடி என்கிற வார்த்தையையே யூஸ் செய்ய மாட்டேன்கிறார்கள். அண்ணாமலையை பிடித்துக் கொண்டு அண்ணாமலை, அண்ணாமலை என்கிறார்கள். அண்ணாமலையா அ.தி.மு.க.வுக்கு பி.ஜே.பி. ஆல் இந்தியா லவலில் மோடிதான்.

இப்போது தேர்தல் நடக்கும் போது பார்லிமெண்ட்டுக்குத்தான். அண்ணாமலையா பிரைம்மினிஸ்டர். அண்ணாமலையைப் பற்றித்தான் பேசுகிறார்களே தவிர மோடியைப் பற்றி பேசுவது இல்லை. ஏன் என்றால் பயம்.

### செல்வாக்கில்லாத எடப்பாடி!

**நெறியாளர்:-** கூட்டணிக் கட்சிகள் அ.தி.மு.க.விற்கு போக மாட்டார்களா பா.ஜ.க.வோடு அ.தி.மு.க. இருந்ததுதான் அவர்களுக்கு பிரச்சினையாக இருந்திருக்கும். அவர்கள் பா.ஜ.க. கடந்த காலங்களில் இப்படியான கூட்டணி எல்லாம் மாறி இருக்கிறதை தமிழ்நாடு தேர்தல் வரலாற்றில் பார்த்திருக்கிறோம்.

**ஆர்.எஸ்.பாரதி:-** கடந்த காலத்தில் வரலாறு மாறி இருக்கலாம். ஆனால் தளபதி மு.க.ஸ்டாலின் வந்ததற்குப் பிறகு 2019 இல் தளபதி மு.க.ஸ்டாலின் இந்த அணியை அமைத்தார் வெற்றி பெற்றோம். ஒரு தேர்தலுக்கு அடுத்து இன்னொரு தேர்தலுக்கு கூட்டணி மாறும். அடுத்து சட்டமன்றத் தேர்தல், அதிலும் கூட்டணி கட்சிகள் உறுதியாக நின்றோம். அடுத்து உள்ளாட்சி மன்றத் தேர்தல் வந்தது, அதிலும் உறுதியாக நின்றோம்.

நான் தமிழ்நாட்டு அரசியல் பற்றிச் சொல்கிறேன். அண்ணா காலத்தில் இருந்தே ஒரு கூட்டணி இராஜாஜியுடன் 1967 இல் ஆட்சிக்கு வந்த உடன் எலக்ஷன் வந்த உடனே இரண்டு ஆண்டுகளில் தேனிலவு முடிந்தது என்று சொல்லி இராஜாஜி போய் விட்டார். நாங்கள் பெரியாரைப் பார்த்த உடனே அவர் போய்விட்டார். அன்றைக்கு இருந்த அணிகள் பிரிந்தன. அதே மாதிரி1971 இல் எங்களோடு இருந்த அணி பிரிந்தது. தளபதி மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு தமிழ்நாட்டில் தொடர்ந்து மூன்று நான்கு தேர்தல்களைப் பார்த்தோம். இப்போது ஐந்தாவது தேர்தலை பார்க்கப் போகிறோம். இந்தத் தேர்தலிலும் எந்தவிதமான சலசலப்பும் இல்லை. அதனைப் பார்த்து தானே ஆளுநரே எதிர்க்கட்சிப் போல பேசுவதற்கு காரணம் என்ன? எல்லோருமே இவரை ஆதரிக்கிறார்களே, எல்லோருமே இவருடன் இருக்கிறார்களே? எடப்பாடி செல்வாக்கு இல்லாமல் போச்சு, அந்தக் கட்சி சிதைந்து போய் விட்டது - அதனால்தான் இப்படி எல்லாம் பேசுகிறார்கள்.

**நெறியாளர்:-** தேர்தல் வாக்குறுதியை நிறைய கொடுத்தீர்கள். இப்போது உரிமைத் தொகையை எடுத்துக் கொண்டால் அனைவருக்கும் என்று சொல்லிவிட்டு இப்போது குறிப்பிட்டவர்களுக்கு மட்டும்தான் கொடுத்து இருக்கிறீர்கள் என்று தொடர்ந்து அ.தி.மு.க., பா.ஜ.க. குற்றம் சுமத்துகிறார்களே?

**ஆர்.எஸ்.பாரதி:-** இதற்கு நான் பல முறை பதில் சொல்லிட்டேன். நான் இன்கம்டாக்ஸ் கட்டுகிறேன். என் மனைவி டாக்டர். பெண் என்பதால் அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க முடியுமா, எடப்பாடி மனைவிக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க முடியுமா, சி.வி.சண்முகம் மனைவிக்கு கொடுக்க முடியுமா?

கணக்கு எடுத்துப் பார்த்தால் வாக்காளர் பட்டியலிலோ ரேஷன் கார்டிலோ ஒரு கோடியே 60 இலட்சம் பெண்கள்தான் இருக்கிறார்கள். அதில் ஒரு கோடியே ஆறு இலட்சத்து ஐம்பதாயிரம் பெண்களுக்கு கொடுத்து விட்டார்கள். இப்போது யார் யாருக்கு கிடைக்க வில்லையோ மீண்டும் அப்பிளிகேஷன் கால்பர் செய்துவிட்டார்கள். அந்த அப்பிளிகேஷனே மொத்தம் 30 இலட்சம் பேர் தான் கொடுத்து இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அது மட்டுமல்ல கொடுத்தவர்களிலே சில லட்சம் பேர் வேண்டாம் என்று சரண்டர் செய்து இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் பேச வேண்டும் என்று பேசுகிறார்களே தவிர உண்மையிலே எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என்பதால் சான்சும் கொடுத்தாகி விட்டது. அதில் ஒருகோடியே 50 ஆயிரம் மகளிர்க்கு உரிமைத் தொகை கொடுக்கப்படும். கணக்கெடுத்துப் பார்த்தால் ஏறத்தாழ ஒரு கோடியே 60 இலட்சம் பேர்தான் இருப்பதாக சொல்கிறார்கள். அதில் விடுபட்டது கொஞ்சம் இருக்கிறது. மீண்டும் அப்பிளிகேஷன் கேட்டு இருக்கிறார்கள். அதில் 30 லட்சம் மனுக்கள் தான் வந்து இருக்கு. இதில் இருந்து என்ன தெரிகின்றது. செண்ட் பர்ஷண்ட் உரியவர்களுக்கு போய் சேர்ந்து இருக்கு. ஒரு கோடி ரூபாய் வாங்குகின்ற நடிகைக்கு கொடுத்தால் சிரிப்பாக இருக்கும் சிலபேருக்கு கொடுத்தால் இதனை இன்சல்ட் என்று நினைப்பார்கள். என்னை இன்சல்ட் செய்வதற்காக இந்த அரசாங்கம் ஆயிரம் ரூபாய் கொடுத்து இருக்கு என்று சொல்வார்கள்.

### ஆட்சி மாறியதும் 'நீட்' ரத்து!

**நெறியாளர்:-** நீட் தேர்வுக்கு ஒரு கையெழுத்து இயக்கம் நடத்துறீர்கள். தொடர்ந்து நீங்கள் வைத்த முக்கியமான வாக்குறுதி. ஆனால் உங்களால் போராட மட்டும் தான் முடிகின்றது. வாங்கித் தர முடியவில்லை என்று அ.தி.மு.க.மேடைக்கு மேடை சொல்கிறார்களே?

**ஆர்.எஸ்.பாரதி:-**முறையாகத்தான் போக முடியும். இரண்டு முறை தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறோம். அது குடியரசுத் தலைவருக்கு போய் இருக்கிறது. அதற்குரிய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டு இருக்கிறோம். குடியரசுத் தலைவரை நேற்று கூட வழி அனுப்புகிற போது முதலமைச்சர் மனு கொடுத்து இருக்கிறார். இந்த கையெழுத்து இயக்கத்தில் நாங்கள் கையெழுத்து வாங்கி வைத்து இருப்பதற்கு காரணம் என்னவென்றால் நிச்சயமாக ஆட்சி மாற்றம் வரப்போகிறது. வந்த உடனே முதலிலே 'நீட்' விலக்கில் தான் கையெழுத்துப் போடுவார்கள். அடுத்து நீட் தேர்வு ரத்து செய்யப்படும். இன்றைக்கு தமிழ் நாட்டில் மட்டுமல்ல, நாங்கள் இங்கே குரல் எழுப்பிய பிறகு தான் ராஜஸ்தானில் குரல் எழுப்புகிறார்கள். கர்நாடகாவில் குரல் எழுப்புகிறார்கள். நீட்டுக்கு ப.சிதம்பரமே தெளிவாக ட்விட்டரில் போட்டு சொல்லி இருக்கிறார். தமிழ்நாட்டுக்கு நீட் விலக்கு அளிப்பதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறது. கொடுக்கலாம் என்று சொல்கிறார். காங்கிரஸ் தான் நீட் கொண்டு வந்ததாகச் சொல்கிறார்கள். அந்த காங்கிரஸ் மூத்த தலைவரே ப..சிதம்பரமே இன்றைக்கு தமிழ் நாட்டுக்குக் கொடுக்கலாம் என்று சொல்லி இருக்கிறார். ஆகையினால் ஒரு வருடம், இரண்டு வருடம் ஆகி விட்டது. நிச்சயமாக இந்த பாராளுமன்றத் தேர்தல் முடிந்த வுடன் மத்தியில் அமைகின்ற ஆட்சி, முதல் கையெழுத்து தலைவர் கொடுத்து இருக்கிற இந்த மனு மீது தான் போடுவார்கள்.

**நெறியாளர்:-** மம்தா வேறு கேல்விகேஷன் போடுவாங்க, அரவிந்த் கெஜ்ரிவால் வேறு கேல்விகேஷன் போடுவார், சமாஜ் வாதி, அகிலேஷ் யாதவ் வேறு கேல்விகேஷன் போடுவாங்க. இவர்களை எல்லாம் எப்படி சமாளிப்பார்கள் என்று ஒரு கேள்வி கேட்கிறார்களே?.

**ஆர்.எஸ்.பாரதி:-** சமாளித்து காட்டுகின்ற திறமை எங்கள் கூட்டணிக்கு உண்டு. அதாவது பொது எதிரி என்று ஒருவரை முறியடிக்கும் போது, ஏன் பா.ஜ.க.வில் கருத்து வேறு பாடு இல்லையா , பி.ஜே.பி. சீட் கொடுத்ததில் இன்றைக்கு டி.வி.யில் பார்த்தோம் அடித்துக் கொள்கிறார்கள். செருப்பாலேயே அடித்துக் கொள்கிறார்கள். ஒரு கட்சிக்குள்ளே அடித்துக் கொள்ளும் போது இது பல கட்சிகள் இருக்கிற போது அமர்ந்து தான் டிஸ்கஷ் செய்ய வேண்டும். அண்ணா அடிக்கடி சொல்வதைப்போல டிசிசன் பை டிஸ்கஷன் . டிஸ்கஷன் செய்து முடிவெடுப்போம்.

**நெறியாளர்:-** தமிழ்நாட்டில் தி.மு.க.வுக்கு எதிர்க்கட்சி அ.தி.மு.க..வா., பா.ஜ.க.வா. ?

**ஆர்.எஸ்.பாரதி:-** அவர்களே முடிவு செய்து கொள்ளட்டும். அந்தப் போட்டியில் நாங்கள் தலையிட விரும்பவில்லை. அவர்களுக்குள் போட்டி நடைபெறுகிறது. அந்தப் போட்டியில் தி.மு.க. தலையிட விரும்பவில்லை.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டியளித்தார்.

---

## நெல்லை கிழக்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் பகுதிக்குட்பட்ட

# இளைஞர் அணி நிர்வாகிகள் தேர்வுக்கான நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிவிப்பு!

நெல்லை, நவ. 4 -

நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



நெல்லை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், பகுதிகளுக்கு இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தேர்வுக்கான நேர்காணல் இன்று (04.11.2023 - சனிக்கிழமை) மதியம் 3 மணியளவில் வண்ணாரப்பேட்டை ஹோட்டல் அஃப்னா பார்க்கில் மாநில இளைஞரணிச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ஏ.என்.ரகு, கு.பி.ராஜா, நா.இளையராஜா, கே.இ.பிரகாஷ், பி.எஸ்.சீனிவாசன், சி.ஆனந்தகுமார், ப.அப்துல்மாலிக், க.பிரபு ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

ஆகவே அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பதவிக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் நேர்காணலில் வந்து கலந்து கொள்ள வேண்டும். புதிதாக விண்ணப்பம் செய்வோரும் நேரிடையாக வந்து விண்ணப்பித்து நேர்காணலில் கலந்து கொள்ளலாம்.

நெல்லை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பதவிக்கு விண்ணப்பித்தவர்களை அழைத்து வந்து நேர்காணலில் கலந்துகொள்ள ஏற்பாடுகள் செய்திட கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தலைமைச் செயலகத்தில், நேற்று (3.11.2023) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டியை ஒடிசா சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் ரஜினிகாந்த் சிங் மரியாதை நிமித்தமாக சந்தித்தார். நிகழ்வின்போது சட்டமன்றப் பேரவைச் செயலக அலுவலர்கள் உடனிருந்தனர்.

அறிவார்ந்த தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்க புத்தகத் திருவிழாவை ஊக்குவிக்கும் ஒரே முதலமைச்சர், மு.க.ஸ்டாலின்!

# பா.ஜ.க.வின் பாசிசத்தை வீழ்த்த வள்ளலாரின் நெறியையும் ஏற்போம்!

## திண்டுக்கல்லில் நடைபெற்ற புத்தகத் திருவிழாவில் “வள்ளலார் - 200” சிந்தனையரங்கில் ஆ.இராசா எம்.பி. பேச்சு!

**திண்டுக்கல், நவ.4 –**

**திண்டுக்கல்லில் நடைபெற்ற புத்தகத் திரு விழாவில் “வள்ளலார் - 200” சிந்தனையரங்கில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. அவர்கள் கலந்து கொண்டு பேசும்போது “பா.ஜ.க.வின் பாசிசத்தை வீழ்த்த வள்ளலாரின் நெறியையும் ஏற்போம்” என்றும் “அறிவார்ந்த தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்க புத்தகத் திருவிழாவை ஊக்குவிக்கும் ஒரே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்” என்றும் கூறினார்.**

**திண்டுக்கல் இலக்கியக் களம் சார்பில் 13.10.2023 அன்று நடைபெற்ற புத்தகத் திருவிழாவில் ஆ.இராசா எம்.பி. கலந்து கொண்டு “வள்ளலார் 200” சிந்தனையரங்கில் ஆற்றிய உரை வருமாறு: –**

தமிழ் நாட்டில் நடைபெறும் புத்தகத் திருவிழாக்களில் திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் நம்முடைய முதலமைச்சர் முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், அரசும் அதிலே பங்கெடுக்கும் என்கின்ற அறிவிப்பை வெளியிட்டு, “தமிழ்ச் சமுதாயம் அறிவார்ந்த சமுதாயமாக தொடர வேண்டும்; அடுத்த தலைமுறைக்கும் அந்த அறிவு சென்று சேர வேண்டும் என்பதற்காக வாசிப்பு வழக்கத்தை இளைஞர்களிடத்தில், பெரியவர்களிடத்தில் ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காக இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கும் எல்லா மாவட்டங்களிலும் புத்தகத் திருவிழாக்கள் நடைபெற்று, புத்தகங்கள் வாங்குவதும் வாசிப்பதும் மட்டுமல்லாமல், மாலை நேரங்களில் இப்படி சிந்தனை களங்களை அமைத்து, அதில் அறிவை பரப்புகின்ற, பகிர்ந்துகொள்கின்ற நல்ல நிகழ்வுகள் இன்றைக்கு மாநிலம் முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

எங்கே மனம் செம்மாந்து நிற்கிறதோ; எங்கே அறிவு விடுதலை பெற்று விளங்குகிறதோ; எங்கே குறுகிய சாதி மதப் பிளவுகளால் உலகம் உடையாமல் ஒன்றுபட்டு நிற்கிறதோ; எங்கே பகுத்தறிவு வெள்ளம் மூடநம்பிக்கை என்னும் பாலைவனத்தில் வீழ்ந்து பாழ்படாமல் இருக்கிறதோ; எங்கே பரந்து விரியும் சிந்தனையாலும், செயலாலும் எண்ணங்கள் வழிநடத்தப்படுகிறதோ, அங்கிருந்து என் அன்னை நாடு விழித்தெழ வேண்டும் என்று தாகூர் கனவு கண்டார்.

### வள்ளலார் பற்றி இருவேறு கருத்துகள்!

அறிவு வளர்ந்தால்தான் தன் அன்னை நாடு விழிப்படையும் என்று தாகூர் கண்ட கனவை நிறைவேற்றுகின்ற ஒரு முதலமைச்சர் நமக்குக் கிடைத்திருக்கின்ற காரணத்தினால் இந்த மாலை நேரத்தில் இவ்வளவு பேரும் நாம் கூடி வள்ளலாரை பற்றி சிந்திக்கின்ற ஒரு வாய்ப்பாக இந்த புத்தகத் திருவிழா அமைந்திருக்கிறது. எனவே அரசுக்கும், முதலமைச்சருக்கும் என்னுடைய நன்றியை உங்களின் சார்பில், நான் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். நான் எத்தனையோ மேடைகளில் பேசி இருக்கிறேன். ஆனால் வள்ளலாரை பற்றி அவ்வப்போது மேடைகளில் தொட்டிருக்கிறேனே தவிர, முழுமையாக அவரை ஆய்ந்து பேசுகின்ற வாய்ப்பினை பெறவில்லை. அப்படி ஒரு வாய்ப்பை அல்லது ஒரு நெருக்கடியான சோதனையை திண்டுக்கல் சிந்தனைக் களம் இந்த புத்தகத் திருவிழா வழியாக எனக்கு தந்திருக்கிறது.

ஏனென்றால் வள்ளலாரை பற்றிய இருவேறு கருத்துக்கள் அவருடைய நெற்றியில் திருநீறு இருக்க வேண்டுமா? இருக்கக் கூடாதா? என்பதில் தொடங்கி, அவர் சைவ சமயமா? சைவ சமயம் இல்லையா? என்பதில் வளர்ந்து,

அவர் ஆன்மிகத்தில் புரட்சி செய்தாரா? இல்லை இருக்கின்ற அமைப்பை ஏற்றுக் கொண்டாரா, சீர்திருத்தம் வழங்கினாரா? என்பது போன்ற விவாதம் உச்சம் பெறுகின்ற இக்கால கட்டத்தில் வள்ளலார் வெவ்வேறு வடிவங்களில் பேசப்படுகிறார்; விவாதிக்கப்படுகிறார். அந்த விவாத தளத்தை நம்முடைய முதல்வர் தந்த ‘வள்ளலார் 200’ விழாக்களில் முன்னெடுப்பது இன்றைய ஆன்மிகத் தேடலாக மட்டுமல்ல; அரசியல் தேடலாகவும் அமைய வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

### அறிவு சபை தோற்றுவித்த முதல் புரட்சியாளர்!

வள்ளலார் என்ன போதித்தார் என்பதை பெரிதாக நான் மீண்டும் விளக்கி இங்கே சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவ்வளவு நூல்கள் அவரைப்பற்றி கிடைக்கின்றன. ‘சுத்த சன்மார்க்க சங்கம்’ என்ற ஒரு சங்கத்தை ஏற்படுத்தினார். ஞான சபையை ஏற்படுத்தினார். மடங்கள் இருந்த மண்ணில் அறிவு சபையை தோற்றுவித்த முதல் புரட்சியாளர், ஆன்மிகத்தில் அவர்தான். பசிப்பிணியை போக்க வேண்டும் என்று விரும்பினார்.

இருக்கிற எல்லா அமைப்புகளையும் கடவுளாக இருந்தாலும், மதமாக இருந்தாலும் இவற்றையெல்லாம் விட்டுவிட்டு ஒரு புதிய மாற்று பாதையை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று விரும்பினார். அதற்கு அவர் சொன்ன தத்துவங்கள் எல்லாம் ஜீவகாருண்யம், கருணை, அன்பு, பசி போக்கல் என்று மொத்தமாக தொகுத்து 10 நிமிடத்தில் அல்லது 5 நிமிடத்தில் விளக்கிச் சொல்லிவிடலாம். ஆனால் வள்ளலாரை நான் மீண்டும் படிக்கிறபோது, வள்ளலார் இன்றைக்கு எப்படி தேவைப்படுகிறார் என்று எண்ணத் தோன்றியது. ஏனென்றால் வள்ளலார் இந்த சமுதாயத்தில் 200 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். ஒரு மனிதரைப் பற்றி பார்க்கிறபோது அவருடைய தொடக்க காலம், இடைக்காலம், கடைசி காலம் இவற்றையெல்லாம் கருத்தியல் ரீதியாக பார்க்க வேண்டி இருக்கிறது. எல்லா தலைவர்களும் ஒரே மாதிரி இருந்ததில்லை. எனக்குத் தெரிந்து கலைஞர் சொல்வார், “நான் பிறந்து அறிவு வளர்கிற போதே சிந்திக்கின்ற உணர்வை பெற்றவன்; 13 வயதிலேயே சுயமரியாதை எண்ணம் கொண்டவன்; மரணம் வரை சுயமரியாதைக்காரனாகத்தான் இருக்க விரும்புகிறேன்” என்று.

வார்த்தைக்கும், வாழ்க்கைக்கும் இடைவெளி இல்லாமல் பார்த்துக் கொள்பவன் யாரோ, அவன்தான் உயர்ந்த மனிதன் என்று பெர்னாட் ஷா சொன்னார். ஆனால் அப்படி இருந்தே தீரவேண்டும் என்ற அவசியம் இல்லை. மனிதன் மாறுதலுக்கு உட்பட்டவன்தான். அந்த மாறுதலுக்கான காரணம் நியாயமானதா, பொருத்தமானதா, சுயநலமற்றதா என்றுதான் ஆராய வேண்டுமே தவிர; மாறுதலே கூடாது என்று சொல்ல முடியாது.

கண்ணதாசன் ஒரு காலத்தில் நாத்திகம் பேசியவர். ‘நாத்திகம் பேசி நாதளும்பு ஏறியது என்னுடைய நா’ என்று சொல்லி பின்னாளில் வருந்தியவர். அண்ணாவின் அணிவகுப்பில் அவர் வலம் வந்த காலங்கள் உண்டு. ‘அர்த்தமுள்ள இந்து மதம்’ என்ற புத்தகம் எழுதிய கண்ணதாசன், இந்து மதத்தின் சாரங்களில் மூழ்கி மூழ்கி திழைத்து இதுதான் மார்க்கம், “இதுதான் எனக்கு இன்பம். இதைப் பின்பற்றுங்கள்” என்று சொன்ன கண்ணதாசன், பெரியார் மறைந்தபோது பாடினார்,

**“நீதிமன்றின் நீதிக்கும் நீதி சொல்வார்;**

**நெறிகெட்டு வளர்ந்தவர்களை நிமிர்த்தியவர்;**

**ஜாதி எனும் நாகத்தை தாக்கித் தாக்கி;**

**சாகடித்த பெருமை அவர் தடிக்கே உண்டு”**

என்று பாடினார். அது பெரியாரைப் பற்றி கண்ணதாசனின் மதிப்பீடு. ஆனால் கண்ணதாசனின் வாழ்க்கையில் முரண்பாடு இருந்ததா என்றால் நிச்சயமாக இருந்தது. கடைசியில் அந்த முரண்பாடுகளை காலம் கவனத்தில் வைக்கவில்லை; அவர் பழுத்த பக்திமானாய் - கண்ணனை ஆராதித்த இந்து மத பற்றாளராய்தான் மறைந்தார்; அது அவருக்கு அடையாளமாய் நின்றது; நிற்கிறது.

### புரட்சிக் கவிஞரின் அடையாளம்!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர் வாழ்க்கையின் முற்பபகுதியில் ‘சுப்ரமணிய துதியமுது’ எழுதியவர். இறை நம்பிக்கை கொண்ட கனகசுப்புரத்தினம் என்ற புலவர்தான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆனார். பக்தி மட்டுமல்ல; பின்னாளில் அழகியலை, இயற்கையைவானத்தைகடலைகாட்டைஆறுகளைதென்றலை அவர் கவிதைளயில் புனைந்து காட்சிப்படுத்திய



போது ஆங்கிலக் கவிஞர் ஷேக்ஸ்பியரையும் மிஞ்சினார் என்று போற்றப்பட்டார். ஆனால் அவரை இந்த அடையாளங்கள் நிறைவு செய்யவில்லை.

**இருட்டறையில் உள்ளதடா உலகம்-சாதி**

**இருக்கின்றதென்பானும் இருக்கின்றானே!**

**மருட்டுகின்ற மதத்தலைவர் வாழுகின்றாரே**

**வாயடியும் கையடியும் மறைவெதென்னாள்?**

என்று எழுதியவர்;

**கடவுள் என்ற கட்டறுத்து**

**தொழில் உளாரை ஏவுவோம்**

என்று பிரகடனப்படுத்தியவர்;

**மண்மீதில் உழைப்போரெல்லாம் வறியராம்; உரிமை கேட்டால்**

**புண்மீதில் அம்பு பாய்ச்சும் புலையர் செல்வராம் இதைத்தன்**

**கண்மீதில் பகலிலெல்லாம் கண்டு கண்டு அந்திக்குப்பின்**

**விண்மீனாய் கொப்பளித்த விரிவானம் பாராய் தம்பி!**

என்று அழகியலை சமூக தளத்தில் கொண்டு சென்று நிறுத்தியவர். உழைக்கும் மக்களை சுரண்டி வஞ்சித்து வாழும் முதலாளித்துவத்தை பார்த்து வானத்தில் ஏற்பட்ட கொப்புளங்கள்தான் விண்மீன் என்று அழகியலை சமூக அவலத்தோடு பொருத்திப் பார்த்தார். இந்த சமூக அமைப்பை மாற்ற வேண்டும் என்று கவிதை சொன்னதால் அவர் புரட்சிக் கவிஞர்; அதுதான் அவர் அடையாளம்; ஆன்மிகமோ, அழகியலோ அல்ல.

அதேபோல வள்ளலாருக்கு எது அடையாளம்? வள்ளலார் ஒரு காலத்தில் சைவத்தை தூக்கிப் பிடித்தார். திருநீறு அணிந்திருந்தார். பதி, பசு, பாசம் என்கின்ற மெய்கண்டதேவரின் சிவஞானபோதத்தை சைவ சித்தாந்தத்தை உள்வாங்கி ஒப்புக் கொண்டார். அதற்காக பல பாடல்களை பாடினார். அவர் எழுதிய ஆறு திருமறைகளில் ஐந்து திருமறைகள் சைவம் சார்ந்தவை. 200 ஆண்டுகளுக்கு முன்பாக வாழ்ந்த ஒரு மனிதனை, நாம் ஆராய்ச்சி செய்வதில் பிழையில்லை. பார்க்கின்ற புதிய பார்வையில் தவறில்லை. என் பார்வை தவறாக கூட இருக்கலாம். ஆனால் வள்ளலார் ஒரு ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியவர். அவர் சொன்ன ஆன்மிகம் எது? அவரின் தொடக்கப் புள்ளி எது? மையப் புள்ளி எது? முடிவில் என்ன சொன்னார்? எதை வைத்து வள்ளலாரை அடையாளப்படுத்துவது.

அவர் எந்த அடையாளத்தை தன் இறுதி அடையாளமாக கொள்ள வேண்டினார். எப்படி பாரதிதாசனுக்கு ‘சுப்ரமணிய துதியமுது’ அடையாளமில்லையோ - எப்படி கண்ணதாசனுக்கு கறுப்பு சிந்தனை கடவுள் மறுப்பு அடையாளமில்லையோ அப்படி வள்ளலாருக்கும் சைவமோ - இந்து மதமோ அடையாளமாக இருக்க முடியாது.

வள்ளலார் தோன்றி அவருடைய சிந்தனைகள் முழுமையாக முழு வீச்சிற்கு வீரியத்தோடு வந்த காலத்தில் இந்த உலகம் புதிய பாய்ச்சலை கண்ட காலம். 1848லிருந்து 1868க்குள் 20 ஆண்டுகள் உலகத்திற்கு ஒரு புதிய முகம் கிடைத்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை, டார்வினின் புதிய தத்துவமான உயிர் கோட்பாட்டு பரிணாமக் கொள்கை, மைக்கேல் பாரடே மின்சாரத்தை கண்டுபிடித்த அறிவியல் விந்தை ஆகியவை யாவும் அந்த 20 ஆண்டுகளில்தான் நடந்தேறின. உலகத்தின் பொற்காலம், அந்த 20 ஆண்டுகள். அப்போது இந்த பூமிக்கு மின்சாரம், பொதுவுடமை தத்துவம், உண்மையான பரிணாம அறிவியல் கோட்பாடு இந்த மூன்றும் வந்த காலத்தில் - புழுங்கிய நேரத்தில் ராமலிங்கர் வாழ்ந்திருக்கிறார் என்பது இயற்கையாகவே ஒரு வரலாற்று தொடர்பு என்று நாம் கருத வேண்டும். உலகத்திற்கு புதுமை நிகழ்ந்தபோது தமிழ் நாட்டுக்கு வள்ளலார் புதுநெறியை கண்டு தந்தவர். அவர் ஏன் பசிப்பிணியை போக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஏனென்றால் ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் புறச்சூழல் தீர்மானிக்கிறது. இந்த சமுதாயம் என்னை எப்படி வைத்திருக்கிறதோ, எப்படி பார்க்கிறதோ அப்படித்தான் இந்த சமுதாயத்தை எதிர்த்து நான் எதிர்வினை ஆற்ற முடியும் அல்லது ஒத்துப் போக முடியும்.

### வள்ளலார் முன்னிறுத்திய வாழ்வியல் கொள்கை!

நான் ஏன் கருப்பு சட்டைக்காரனாக மாறினேன். என்னுடைய தந்தையார் கந்த சஷ்டி கவசம் சொல்லும்போது பக்கத்தில் இருந்து என்னுடைய காதில் விழுந்து விழுந்து விழுந்து எனக்கே மனப்பாடமான ஒரு சிறுவன். ஆனால் என்னுள் ஏதோ ஒரு வேதி மாற்றம், என்னை பெரியார் பக்கம் திருப்பியது. இது புறச் சூழல் எனக்கு கொடுத்திருக்கிற தாக்கம். அந்த தாக்கத்தின் விளைவு இன்றைக்கு நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளராக இருக்கிறேன்.

இப்படி ஒவ்வொருவருக்கும் புற மாற்றங்கள் ஏற்படுகிறபோது, அது ஏற்படுத்திய மாற்றங்கள் என்ன என்பதை உணர வேண்டும். ஏன் பசிப்பிணியைப் பற்றி வள்ளலார் கவலைப்பட்டார். 1860 களில் 50களில் வள்ளலார் வாழ்ந்த காலத்தில் இந்தியாவில் மிகப்பெரிய பஞ்சம் கொடி கட்டி கோலோச்சிய காலம். நான் இன்னும் பார்க்கிறேன்; அவர் சொன்ன ஜீவகாருண்யம் என்று சொல்கிறபோது அனைத்து உயிர்களிடத்திலும் கருணை, மனிதர்கள் மேல் மட்டுமல்ல; வள்ளலாருக்கு இருக்கும் மிகப்பெரிய சிறப்பு மனிதனை மனிதன் நேசி என்று சொன்னால் அது வேறு. பெரியார் அதைத்தான் சொன்னார், மனிதனை மனிதன் நேசி. மனிதன் கடவுளை நேசிக்க வேண்டும் என்று சொல்வது இன்னொரு ஆன்மத் தத்துவம். ஆனால் எல்லா உயிர்களிலிடத்திலும் கருணை காட்ட வேண்டும் என்பது வள்ளலாரின் பரந்து விரிந்த தத்துவம்.

ஆண்டவனிடத்தில் அன்பு வை. ஆண்டவன் காப்பாற்றுவார் என்று சொல்லவில்லை. ஆண்டவனிடத்தில் அன்பு, சக உயிர்களிடத்தில் கருணை, பசி போக்கல் இவைதான் ஒழுக்கமாக முன்னிறுத்தப்பட்டு ஜீவகாருண்யமாக வள்ளலாரால் வரிக்கப்பட்டு வாழ்வியல் கொள்கையாக முன்னிறுத்தப்பட்டது. இன்றைக்கும் வடலூரில் அவரால் ஏற்றிவைக்கப்பட்ட அணையா நெருப்பு இன்னமும் எரிந்து கொண்டிருக்கிறது. எரிந்து கொண்டிருக்கின்ற அந்த அணையா விளக்கிலிருந்து பசிப்பிணிக்கு மருந்து கிடைக்கிறது. உணவளிக்கப்படுகிறது. இந்த ஜீவகாருண்யத்தை அவர் தோற்றுவிக்க வேண்டிய காரணம் என்ன? அவருக்கு என்ன அழுத்தம்? அங்கு இருந்துதான் அவருடைய சமூகப் பார்வையை, அவருடைய பொருளியல் பார்வையை பார்க்க வேண்டும். அவருடைய கொள்கைக்குப் பின்னால் வரலாற்று உண்மைகள் உள்ளது.

### திராவிட சமயம்!

சைவத்தையும் வைணவத்தையும் ‘சமயம்’ என்று குறிப்பிடுகிறார். வேதாந்தத்தையும், சித்தாந்தத்தையும் ‘மதம்’ என்று குறிப்பிடுகின்றார். என்ன தெரிகிறதென்றால் சைவமும் வைணவமும் மதம் அல்ல; சமயம். சமயம் தமிழ்ச் சொல். சமயம் என்றால் ‘பொருந்துதல்’ என்று பொருள். உலக வாழ்க்கைக்கு பொருந்த வேண்டியவை என்ற அடிப்படையில் அவைகள் உருவாக்கப்பட்டன. மதம் அப்படியல்ல. 1860 களில் வள்ளலார் வாழ்ந்தபோது சைவமும் வைணவமும் மதங்களல்ல; வேதாந்தம் சித்தாந்தம் இரண்டும் மதங்கள். இன்னும் விளக்கி சொல்வதாக இருந்தால் வள்ளலார் வாழ்ந்தபோது நாமெல்லாம் இந்துக்கள் அல்ல; ஏனென்றால் அப்போது இந்து மதம் இல்லை. சிவனை வழிபடுகின்றவர்கள் சைவர்களாக இருந்தார்கள்; திருமாலை வணங்குபவர்கள் வைணவர்களாக இருந்தார்கள். பிறகு இந்துக்களாக ஆக்கப்பட்டோம்.

வள்ளலார் சொன்னதை விரித்து இதற்கு மேல் பேசினால் என்னை இந்துக்களுக்கு எதிரி; இந்து மதத்தை இழிவு படுத்திவிட்டார் என்று கூச்சல் வரும். ஏன் சைவத்தை விட்டு வள்ளலார் வெளியே வந்தார் என்றால்; வைணவம் சைவம் இவற்றையெல்லாம் விட்டு ஒழியுங்கள் என்று ஏன் சொன்னார் என்றால்; இன்னும் குறிப்பாக சைவம் வைணவம் ஆகிய சமயங்களில் இருந்தும், வேதாந்தம் சித்தாந்தம் ஆகிய மதங்களில் இருந்தும் நீங்கள் விட்டு வெளியே வந்தால் தான் பேரின்ப இறைவனை அடைவதற்கு வழி கிடைக்கும் என்று உணர்ந்து உணர்த்தியவர். ஆரியர்களுக்கு ‘மதம்’ இருந்தது.

நம்முடையது திராவிட ‘சமயம்’. வைணவமும் சைவமும் இங்கே தோன்றியது தான். அறுபத்து மூன்று நாயன்மார்களில் எல்லா சாதியும் இருந்திருக்கிறது. வண்ணார் முதல் வேடர் வரை. அந்தணர் முதல் ஆதிதிராவிடர் வரை. ஆழ்வார்களிலும் பல சாதிகள் பிரதிநிதித்துவம் இருந்ததே தவிர, சமத்துவத்தை நிலைநிறுத்த பக்தி இலக்கியங்களின் பங்கு என்ன என்று கணக்கிட்டால் சொற்பத்திலும் சொற்பம்.

**உண்ணாமலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்;**

**பெண் ஆகிய பெருமான், மலை திருமாமணி திகழ;**

**மண்ணார்ந்தன அருவித்திரள் மழலை முழவு அதிரும்;**

**அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே.**

என்று திருவண்ணாமலையில் இருக்கும் சிவனைப் பார்த்து பாடினார்களே தவிர, வினை அறுந்ததா, பசி ஒழிந்ததா என்று யாரும் கேட்கவில்லை;

**உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்;**

**மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்;**

**அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்;**

**துயரறு சுடரடி தொழுதெழு என் மனனே!**

என்று ஆழ்வார்கள் பாடினார்களே தவிர துயர் அறுந்ததா என்று பார்க்கவில்லை.

எனவே சைவமோ வைணவமோ மக்களின் பசியை நோயை நீக்கவில்லை; இவ்வுலக வாழ்க்கைக்கு தீர்வு தரவில்லை. இன்னொரு உலகத்தை வலியுறுத்திய சமயங்கள் அவை. எனவே சைவமோ வைணவமோ இங்கே இருந்த சமயங்கள் எதையும் வள்ளலார் தனது 6வது திருமறையில் ஒப்புக் கொள்ளவில்லை.

அதேப்போல வேதாந்தம் சித்தாந்தம் என்கின்ற ‘மதம்’ இருக்கிறதே, அதுதான் மதம் பிடித்தது. அதையும் விட்டு ஒழியுங்கள் என்று சொன்னார். அப்படி சொன்ன வள்ளலாருக்கு சொல்ல வேண்டிய தேவை என்ன இருந்தது? பசிப்பிணியை போக்க வேண்டிய அவசியம் என்ன இருந்தது? இப்போது இந்த 200 வருடங்களுக்குப் பின் அன்றைக்கு சமூகம், நாடு எப்படி இருந்தது என்று ஆராயுங்கள்.

அதற்குப் பிறகு பெரியார் வந்தார். அதற்குப் பிறகு அம்பேத்கர் வந்தார். பெரியார் என்ன சொன்னார்? இந்த மண்ணில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், சூத்திரர்களும் இன்றைக்கு அனுபவித்துக் கொண்டிருக்கும் தற்குறித்தனத்திற்கும், ஏழ்மைக்கும் வறுமைக்கும் காரணம் இங்கே இருக்கும் சாதியும், மதமும் அதனால் அதனை ஒழிக்கிறேன் என்றார். ஏன் உங்கள் தாத்தா படிக்க வில்லை. என் தாத்தா படிக்கவில்லை. ஐ.பி. செந்தில் சட்டமன்ற உறுப்பினர், அவருடைய முன்னோர்களுக்கு ஏகப்பட்ட நிலம் இருந்திருக்கும்; பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம்.

தொடர்ச்சி 5ஆம் பக்கம்

# ‘சாதி, சமயத்தை ஒழித்து அருட்பெருஞ்ஜோதியைக் கண்டேன்’ என பிரகடனப் படுத்தியவர்!

## ஆ.இராசா எம்.பி. பேச்சு... 4-ஆம் பக்கத் தொடர்ச்சி

முதலியார், தேவர், ரெட்டியார் என்று எல்லோரும் தங்களை மிட்டா மிராசுகளாக பெருமிதம் கொண்டார்கள்; 200 ஏக்கர், 300 ஏக்கர் நிலம் இருந்தது.

ஆனால் அவர்களுக்கு கல்வி இருந்ததா என்றால் இல்லை. அவர்கள் தலைவர்களாக இருக்க மதம் அனுமதித்தது; அறிவுள்ளவர்களாக ஆக தடை போட்டது. படிக்காதே என்று மதம் உத்தரவு போட்டது. அப்படியானால் கல்வி மறுக்கப்பட்ட ஒரு சமூகத்தை உருவாக்கியது எது? வேதாந்தம் சித்தாந்தம் என்ற வைதிக மதம். அதை வழிமொழிந்தது எது? கல்வி மறுக்கப்பட்ட சமூகத்தில் படிப்பு மறுக்கப்பட்ட சமுதாயத்தில் அறிவைப் பெறுவதில் தடை ஏற்பட்ட சமூகத்தில் - நம்முடைய சமயநெறிகள் என்று வள்ளலாரால் உணரப்பட்ட சைவம், வைணவம்; பின்னிட்ட அனைத்து வழிபாட்டு முறைகளும் அந்த வைதீகத்தால் உள்ளடக்கப்பட்டு ‘இந்து மதம்’ என்று பின்னாளில் உருவம் தரப்பட்ட நம்முடைய மதம்!. அதனால் ஏற்பட்ட வறுமை. அந்த வறுமையின் காரணமாக பட்டினி.

இதை வள்ளலார் உணர்ந்திருக்கிறார். சாதீய கட்டுமானத்தின் நீட்சியாக வறுமையை, பசியை கண்டுணர்ந்தவர் வள்ளலார். அம்பேத்கர் தெளிவாக சொன்னார், “இந்து மதத்தின் பெயரால் பிராமணர்கள் இங்கே என்ன செய்திருக்கிறார்கள் என்றால், தாங்கள் மட்டும் கல்வியும் அறிவும் உள்ள ஜாதியாக இருந்து கொண்டு, ஏனைய சாதிகளை தற்குறிகளாக, கல்வி அறிவற்றவர்களாக, வறுமையில் வைத்திருப்பதற்கு மதத்தின் பெயரால் ஒரு தத்துவத்தை கண்டுபிடித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட தத்துவம் உலகத்தில் வேறு எங்கும் இல்லை. பிராமணீயம் கண்டுபிடித்ததுதான்” என்று குற்றம் சாட்டினார். அதைத்தான் பெரியார் சொன்னார், “இங்கே கல்வி அறிவு இல்லாமல், அறியாமையிலும், வறுமையிலும் பெரும்பான்மை மக்களாக இருக்கும் சூத்திரர்களாக, பஞ்சமர்களாக திகழ்வதற்கு காரணம் ஜாதியும், மதமும் அதை ஒழிக்க வேண்டும்” என்று சொன்னார். அப்படியானால் ஜாதியும், மதமும் இங்கே அறியாமையும், வறுமையும் தந்தது. அதனால் பசிப்பிணி, வறுமை, அறியாமை இந்த சமூகத்தை ஆன்மிகத்தில்கூட தெளிவு பெறாமல் இருளில் அடைத்து வைத்திருந்தது.

### வள்ளலார் அறிவித்த மாற்றுப் பாதை!

நான்கு வேதம் எனக்கு தெரியாது. இங்கே இருக்கின்ற பெரும்பாலான மக்களுக்கு வேதம் தெரியாது. சித்தாந்தம் தெரியாது.

ஏன் சைவ சித்தாந்தமே தெரியாது. நாம் எல்லோரும் சிவன் கோவிலுக்கு சென்று கொண்டிருக்கிறோம்; ஆனால் சைவ சித்தாந்தம் என்றால் என்ன என்று தெரியுமா? பதி, பசு, பாசம் என்று மெய்கண்ட தேவர் சிவஞான போதத்தில் சொன்னார். இந்த சிவஞான போதத்தை படித்துவிட்டுத்தான் நாம் சிவனை வணங்குகிறோமா என்றால்; இல்லை. அந்த முரண்பாட்டை தீர்ப்பது எது? வைணவத்தில் என்ன சொன்னார்கள், நாங்கள் உண்மையை சொன்னால் இன்றைக்கு மதத்தை விமர்சிக்கிறார் ராஜா என்று ஆர்ப்பாட்டம்!. வைதீகர்களுக்கு நான் கேட்கிற கேள்வி. நீங்கள் ஒரு தெளிவுற்ற முடிவுக்கு வந்துவிட்டீர்களா? வள்ளலார் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்.

அருட்பெருஞ்ஜோதி, தனிப்பெருங்கருணை என்று சொல்லிவிட்டார். ஜாதி சமய சலக்கை ஒழித்தேன், அருட்பெருஞ்ஜோதியை கண்டேன் என்று பிரகடனப்படுத்தினார் வள்ளலார்.

ஜாதியை, மதத்தை ஒழித்து விட்டு வெளியே வந்தீர்கள் என்றால், எல்லா ஆசாரங்களையும் விட்டு ஒழித்துவிட்டால், கடவுளை காட்டுவதற்கு வழி இருக்கிறது என்ற ஒரு மாற்று பாதையையே வள்ளலார் தேர்ந்தெடுத்து அறிவித்தார். ‘சைவம் வைணவம் முதலிய சமயங்களிலும், வேதாந்தம் சித்தாந்தம் முதலிய மதங்களிலும் இலட்சியம் வைக்க வேண்டாம். அவை அற்ப பிரயோஜனம் கொண்டவை’ என்று தெளிவுபடுத்திய வள்ளலார்;

**“ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரோ**

**ஓர்மை உள் ஆகி உலகியல் நடத்த வேண்டும்”**

என்று இந்த சமூகத்திற்கு உத்தரவு போட்டவர்; அந்த உத்தரவோடு அவர் நிறுத்தவில்லை; அந்த உலகியல் நடையில் “கருணை என்ற ஒரே சாதனத்தால் மட்டுமே கடவுளை அடைந்து இறையருள் பெறலாம்” என்று எல்லையையும் தீர்மானிக்கிறார்.

### மதக் குழப்பங்கள்!

ஆனால் இன்றைக்கு வரைக்கும் வைணவமோ சைவமோ தெளிவாக எதை முன் வைக்கிறது. அத்வைதத்தை கொடுத்தது யார்? சங்கரர். அவருக்கு அடுத்து வந்தது யார்? மத்வாச்சாரி; அவருக்கு பின்னால் இராமானுஜர். விசிஷ்டாத்வைதம் ஒரு தத்துவம்; பிறகு துவைதம். அப்படியானால் அத்வைதம் தவறு என்பதற்காக துவைதம் வந்ததா?. துவைதம் தவறு என்பதற்காகப் பிறகு விசிஷ்டாத் வைதம் வந்ததா?. ஒன்று உயிரும் கடவுளும் ஒன்று என்று சொல்கிறது. பரமாத்மாவும், ஜீமாத்மாவும் ஒன்று என்று சொன்னால் ஒரு தத்துவம். இரண்டும் வெவ்வேறு என்று சொன்னால் வேறு தத்துவம். சில நேரங்களில் ஒன்றாக இருக்கும், சில நேரங்களில் வேறாக இருக்கும் என்றால் வேறொரு தத்துவம். எனவே அத்வைதம் முடிவா? துவைதம் முடிவா? விசிஷ்டாத் வைதம் முடிவா? ராமானுஜர் சரியா? மத்வாச்சாரியார் சரியா? சங்கராச்சாரி சரியா? இதற்கு அவர்களே இன்னும் முடிவு காணவில்லை. மத குழப்பங்கள் எந்த மதமாக இருந்தாலும், வள்ளலார் சொல்லுகிற சமயம் என்று சொல்கின்ற வைணவமாக இருந்தாலும், சைவமாக இருந்தாலும், வள்ளலார் சொல்லுகின்ற மதம் என்று சொல்லுகின்ற வேதாந்தமாக சித்தாந்தமாக இருந்தாலும் எதுவும் முடிவில்லாமல் தெளிவில்லாமல் இருந்த தத்துவத்தில் திளைத்திருந்த வள்ளலார் ஒரு தெளிவை நோக்கி வருவதற்கு காரணம் வறுமையும், தற்குறித் தன்மையும் இங்கே திணிக்கப்பட்ட காரணத்தை அவர் அறிய முற்பட்டதால்தான். இப்போது அவர் அறுக்க விரும்பிய வறுமையை பசிப்பிணியைவெறுத்து ஒதுக்கிய சாதி மத வேறுபாட்டைஇரண்டையும் இணைத்துப் பாருங்கள். வள்ளலார் காட்டிய அந்த தனிநெறிதனிப் பெருங்கருணை சாதி ஒழிப்பில்தான் மையம் கொள்கிறது.

பெரியார் எதையும் காரணம் இல்லாமல் தொட மாட்டார், எதையும் காரணம் இல்லாமல் விமர்சிக்க மாட்டார், எதையும் காரணம் இல்லாமல் புகழவும் மாட்டார். எனக்கு என்ன ஆச்சரியம் என்றால், ரஷ்யாவுக்கு சென்று வந்த பெரியார் கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையை (Manifesto of Communist Party) தமிழில் மொழிபெயர்த்து குடியரசில் வெளியிட்டார். எது கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை? “இந்த உலகத்தை பல தத்துவ வாதிகள் விளக்கி இருக்கிறார்கள், வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். ஆனால் பிரச்சினை இந்த உலகத்தை எப்படி மாற்றுவது என்பதுதான்” என்றார் மார்க்ஸ். அதற்காகத்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை. அதனுடைய கடைசி வரி என்ன சொல்கிறது, “உலகத் தொழிலாளர்களே ஒன்று கூடுங்கள். இழப்பதற்கு உங்களிடத்தில் ஒன்றும் இல்லை; உங்கள் அடிமைச் சங்கிலியைத் தவிர” (Workers of the world unite; you have nothing to loose but your chains). அப்போது இந்த கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை தமிழில் கொண்டு வர வேண்டிய அவசியம் பெரியாருக்கு ஏன் வந்தது என்றால், பொதுவுடமை தத்துவம் அவருக்கு பிடித்திருந்தது. ஆனால் அந்த தத்துவத்தை இந்த மண்ணில் நேரடியாக நிறைவேற்ற முடியாது என்று கருதினார். ரஷ்யாவில் இருந்து வந்ததும் பெரியாரிடம் கேட்டார்கள், ‘கம்யூனிசத்தை எப்படி புரிந்து கொண்டீர்கள்? என்று. அவர் பொருள் முதல் வாதம் (Meterialism) எல்லாம் படிக்கவில்லை. பொருள் முதல் வாதம், எண்ண முதல் வாதம், எது உற்பத்தி? எது உற்பத்தி சாதனம்? இது ஒரு பெரிய அறிவியல் மாதிரி படிக்க வேண்டும். ஆனால் பெரியார் எளிமையாக தெளிவாக சொன்னார், ‘உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், எல்லோருக்கும் கல்வி, எல்லோருக்கும் சுகாதாரம், முதுமையில் பாதுகாப்பு இந்த ஆறும் இருந்தால் அதுதான் கம்யூனிசம் என்றார். மார்க்ஸ் சொன்னதுபோல இந்த சமூகம் மாற வேண்டும். தத்துவ ஆசிரியர்கள் இந்த உலகத்தை பற்றி விளக்கி விளக்கி பேசுகிறார்களே தவிர, இதை மாற்ற முன்வரவில்லை. அந்த வகையில் மார்க்சீயத்தை பெரியார் ஏற்றார். ஆனால், மதமும் சாதியும் இறுகி படிந்த இந்த நாட்டில் அதை நேரடியாக நிறைவேற்ற முடியாது என்று உணர்ந்தார். அதேபோல ‘சாதியை ஒழிக்க வழி‘ என்ற நூலினை அம்பேத்கர் எழுதினார். அந்த புத்தகத்தையும் கண்டுபிடித்து தமிழில் கொண்டு வந்து குடியரசில் - வெளியிட்டவர் தந்தை பெரியார்தான்!. ஆக, வர்க்கம் ஒழிய வேண்டும் பெரியார் விரும்பினார். புத்தகம் போட்டார். ஜாதி ஒழிய வேண்டும் என்று அம்பேத்கர் அன்று ஆங்கிலத்தில் புத்தகம் எழுதினார். அந்த புத்தகத்தை தமிழிலே கொண்டு வந்து பரப்பினார்.

### பெரியார் பிரசுரித்த ஆறாவது திருமுறை!

வர்க்க ஒழிப்பிற்கு மார்க்ஸை ஏற்ற பெரியாரை - வருண சாதி ஒழிப்பிற்கு அம்பேத்கரை பரப்பிய பெரியாரை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது; அதுதான் அவர் உயிர் மூச்சு. ஆனால் வள்ளலாரின் ஆறாவது திருமந்திரத்தை ஏன் பெரியார் குடியரசில் பிரசுரித்தார்? அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை என்று ஆராதனை செய்த வள்ளலார், எப்படி குடியரசில் இடம் பெற்றார். ஏதோ ஒரு சங்கிலித் தொடர் இருந்தால் ஒழிய பெரியார் அதை செய்திருக்க மாட்டார். ராமலிங்க அடிகளார் என்ன சொல்லுகிறார் என்றால், “இருக்கின்ற எந்த கடவுளையும் நான் ஏற்றுக் கொள்ளவில்லை. சிவன், விஷ்ணு எந்த கடவுளும் எனக்கு சம்மந்தமில்லை. சுத்த சமய சன்மார்க்க சங்கம் என்பது ஒரு மதத்திற்காக அல்ல. கிறிஸ்தவர்களும் சேரலாம், இஸ்லாமியர்களும் சேரலாம். ஏனென்றால் நான் ஜோதி வடிவத்தில் இறையை பார்க்கிறேன். நான் பார்ப்பதெல்லாம் கருணை, எல்லா உயிர்கள் மீதும் கருணை, இறைவன் மீது பற்று அன்பு, பசியில்லாத உலகம், பரஸ்பர நட்பு, ஜீவ காருண்யம் இவ்வளவுதான்” என்று!.

இருக்கின்ற எல்லாவற்றையும் பெரியார் கருத்தியலாக உடைத்தார். நான் நாச வேலைக்காரன், நான் அழிவு வேலைக்காரன் என்று அவரே தன்னை சொல்லிக் கொண்டார். இருக்கின்ற சமூக அமைப்பை உடைத்துவிட வேண்டும் என்று மட்டும் விரும்பியவர் பெரியார். அம்பேத்கர் என்ன செய்தார்? இருக்கின்ற அமைப்பு வேண்டாம் என்று நானும் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் மதம் என்பது மக்களை இணைக்கின்ற ஒரு விசையாக இருக்க வேண்டும் (Religion as a social force). அதற்கு ஒரு மதம் தேவை என்று நான் உணர்கிறேன் என்றார். அம்பேத்கரின் கல்வி தளம் என்பது நீண்ட தளம். அவர் வாசிக்காத துறையே இல்லை. அவர் ஒரு பொருளியல் நிபுணர். அவரை, நிதி குறித்த அமைச்சரவைக் குழுவில் சேர்க்கவில்லை. அதையும் ஒரு காரணமாக வைத்துத்தான் தன் பதவியை இராஜினாமா செய்தார். அப்போது அம்பேத்கர் சொன்னார், “இந்தியாவில், வெளிநாட்டில் சென்று முதன் முதலாக பிஎச்.டி - பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் படித்து வந்தவன் நான்தான். என்னை ஏன் சேர்க்கவில்லை?” என்று கேட்டார். ஒரு பொருளியல்வாதி, அரசியல் விற்பன்னர், சட்ட மேதை, இந்த சமூகத்தை பற்றி சாதியை பற்றி ஆய்வு செய்தவர் எல்லா தளங்களிலும் அவர் இருக்கிறார். ஆனால் அவர் பௌத்தத்தை தழுவினார். ஒன்றை அழித்துவிட்டு அந்த இடத்தில் வெறுமை கூடாது என்று இன்னொன்றை வைத்தார். அதனால் சமத்துவம் போதித்த, கடவுளைப் பற்றி அக்கறை கொள்ளாத பவுத்தம் தழுவினார் அம்பேத்கர். பெரியார் என்ன சொன்னார், “நீங்கள் பவுத்தம் செல்லுங்கள். ஆனால் ஒன்று, நீங்கள் தனியாக செல்லாதீர்கள்; பல லட்சம் பேரோடு செல்லுங்கள். எனக்கு இருக்கும் பிரச்சினை என்ன என்று கேட்டால், இந்த பிராமணிய மதம் என்பதும், இந்து மதம் என்பதும் உங்களையும் சேர்த்து சுவீகரித்துவிடும், செரித்துவிடும் என்கின்ற அச்சம் எனக்கு இருக்கிறது“ என்றார். 1948 அரசியல் நிர்ணய சபையில் இந்து சட்ட மசோதாவை அம்பேத்கர் கொண்டு வருகிறார். அதுவரையில் இந்துக்கு சட்டம் இல்லை. அதற்கு முன்பு இருந்த சட்டம் எல்லாம் சாஸ்திரம், சம்பிரதாயம், மனுஸ்மிருதி, உள்ளிட்ட தர்மங்கள் இருந்தன. அந்த தர்மங்கள்தான் இந்துக்களுக்கு பொருந்தும். இந்து சட்டம் என்று தனியாக ஒன்று இல்லை. அப்போது இந்து சட்ட மசோதாவை அம்பேத்கர் கொண்டு வருகிறபோது, சியாமளா பிரசாத் இந்து மகா சபையின் தலைவர், நேரு அமைச்சரவையில் ஒரு அமைச்சராக இருக்கிறார். அவரும் அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினராக இருக்கிறார். இந்த இந்து சட்ட மசோதா வரும்போது ஷியாமளா பிரசாத் பேசுகிறார், “நீங்கள் எதற்கு புதிதாக ஒரு சட்டத்தை கொண்டு வருகிறீர்கள். ஏற்கனவே நம்மிடம் சம்பிரதாயம் இருக்கிறது, சாஸ்திரம் இருக்கிறது. ஸ்மிருதி இருக்கிறது, சுருதி இருக்கிறது. அதிலே குறைபாடுகள் இருந்தால் திருத்திக் கொள்ளலாம். தேவை என்றால் நடைமுறையை மாற்றிக் கொள்ளலாம்; மாறிக் கொள்ளலாம்.

இந்து மதம் எல்லாவற்றையும் ஈர்த்துக் கொள்கின்ற தன்னகத்தே வாங்கிக் கொள்கின்ற சகிப்புத் தன்மை கொண்ட ஒரு அற்புதமான மதம். அந்த மதத்திற்கு புதிய சட்டம் தேவை இல்லை. நீங்கள் என்ன மாறுதலை விரும்புகிறீர்களோ அதை நடைமுறைப்படுத்திவிடலாம்” என்று சொல்கிறார். அம்பேத்கர் சொல்கிறார், “Yes, I do admit; இந்து மதம் எல்லாவற்றையும் சேர்த்துக் கொள்ளும். அதற்கு மாறுபட்ட இறையியல் கோட்பாடுகளைக் கூட உள்வாங்கி கொள்ளும். ஆனால் என்ன பிரச்சினை என்றால், பவுத்தத்தை ஏற்றுக் கொண்டீர்கள். புத்தரை 10 அவதாரங்களில் ஒரு அவதாரமாக மாற்றினீர்கள். எல்லாவற்றையும் இந்து மதம் எடுத்துக் கொண்டது. பெருந்தன்மையான மதம்தான். எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு சேர்த்துக் கொள்ளும் அந்த மதம் ஒன்றை மட்டும் ஒப்புக் கொள்ளாது. அது equality என்ற சமத்துவம். சமத்துவத்தை ஒருபோதும் உங்கள் மதம் ஏற்றுக் கொள்ளாது” என்று! நான் பேசவில்லை; அம்பேத்கர் அரசியல் நிர்ணய சபையில் பேசியது ஆவணமாக இருக்கிறது. அம்பேத்கர் மேலும் சொல்கிறார்.

பவுத்தத்தை ஏற்றுக் கொண்டீர்கள். பவுத்தத்தின் அகிம்சையை ஏற்றுக் கொண்டீர்கள். ஆனால் பௌத்தம் சொன்ன சமத்துவத்தை மட்டும் இன்றைய தேதி வரை நீங்கள் ஏற்றுக் கொள்ளாததற்கு என்ன காரணம்? எனவே உங்களுடைய மதம் எந்த மதத்தையும் ஏற்றுக் கொள்ளும், ஆனால் சமத்துவத்தை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது. புத்தர் சொன்ன அகிம்சை, கொல்லாமை எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்ட மதம் சமத்துவத்தை மட்டும் ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கு என்னக் காரணம். சமத்துவத்திற்கு எதிராக கட்டப்பட்ட சமூக அமைப்பை இந்து மதம் அடிப்படையாகக் கொண்டது. எனவேதான் இந்துக்களுக்கு சட்டம் தேவைப்படுகிறது என்று அம்பேத்கர் அந்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்தார். பின்னாளில் அவை சட்டங்களாக நேருவால் கொண்டு வரப்பட்டது.

### சுத்த சன்மார்க்க சங்கம்!

ஆக, பெரியார் என்ன செய்தாரோ, அம்பேத்கார் என்ன செய்தாரோ அவற்றை நீங்கள் வள்ளலாரோடு பொருத்திப் பார்த்தால், அறியாமையையும் வறுமையையும் அவர் எதிர்த்து நின்று போராடியபோது, அதற்கு இந்த மண்ணில் இருக்கின்ற எந்த தெய்வமும், எந்த மதமும், எந்த சடங்குகளும், எந்த பிரிவினைகளும், எந்த தத்துவமும், எந்த இறையியல் தத்துவமும் ஒத்து வராது. இந்த மண்ணில் அறியாமையும், வறுமையும் ஒழிய வேண்டும் என்றால், இங்கு இருக்கும் எந்த இறை தத்துவமும் இந்த மக்களை காப்பாற்றாது. ஒழிக்கப்படவேண்டும் என்பதில் உறுதியாக தெளிந்து தன் வழியை, மார்க்கத்தை கட்டமைத்து ‘சுத்த சன்மார்க்க சங்கத்தை’ ஏற்படுத்தினார் என்ற முடிவுக்கு நாம் வரமுடியும். இன்னும் சொல்லப்போனால், வள்ளலார் தொடாத துறையே இல்லை. திருக்குறளுக்கு மாநாடு நடத்தினார் பெரியார். ஆனால் பின்னாளில் திருக்குறளை பரப்ப வேண்டும் என்று முடிவு செய்து, திருக்குறளை பரப்பியவர். ஆனால் அதற்கு முன்பே தினந்தோறும் திருக்குறளை தனது சபையில் எழுதி வைத்தவர் வள்ளலார். அதைப் படிக்கச் சொன்னவர் வள்ளலார். அதை விட பெண்கள் படிக்க வேண்டும் என்று விரும்பியவர் வள்ளலார். இதெல்லாம் பெரியாருக்கு முன்பே செய்துவிட்டார். எல்லாவற்றையும் விட அரசாங்கத்தின் சர்வாதிகாரத்தை தட்டி கேட்டு எழுதியவர் வள்ளலார்.

### பொருளியல் தளத்தில் வள்ளலார்!

எனவே வள்ளலாரை சமூகத்தளத்தோடு நிறுத்தி விட முடியாது. பொருளியல் தளத்திலும் இருக்கிறார். ஏனென்றால் பசி ஒழிய வேண்டும், வறுமை ஒழிய வேண்டும் என்று விரும்பினார். அப்போது வறுமை ஒழிய வேண்டும், பசி ஒழிய வேண்டும் என்று விரும்பினால் இரண்டு தளம் ஒன்று சமூகத் தளம், இன்னொன்று பொருளியல் தளம். எல்லோருக்கும் எல்லாம் சென்று சேர வேண்டும் என்பதுதான் வள்ளலாரின் தத்துவமும். அதற்கான இறை தத்துவமாகத்தான் ஒரே ஒரு இறைவனைக் கொண்டு வருகிறார். அந்த சங்கத்திற்கு சபைக்கு தெளிவான கட்டுப்பாடுகள் எல்லாம் கொண்டு வருகிறார். எனக்கு தெரிந்து ஒரு ஆன்மிகவாதி ஒரு இயக்கம் கொண்டு வந்து, நெறி சொல்வது என்பது வேறு. அந்த நெறியை பரப்ப ஒரு சங்கத்தை நிறுவனமாக மாற்றியவர் நம்முடைய வள்ளலார். சங்கத்திற்கு ஒழுக்க விதிகளை கட்டமைத்து அதை கடைபிடிக்க வலியுறுத்திய ஆன்மிக செம்மலும் அவர்தான்.

தன்னுடைய கொள்கை, “ஜாதி சமய வழக்கை ஒழித்தேன், அருட்பெருஞ்ஜோதியை கண்டேன்” என்பது; ஜாதி வேண்டாம், மதம் வேண்டாம் என்று சொன்னவர்; எந்த ஆசாரமும் வேண்டாம் என்கிறார். எத்தனை ஆசாரங்கள்? அவர் சொல்கிற ஆசாரத்தை பாருங்கள். அவருக்கு வேண்டியதெல்லாம் அன்பு. அன்புக்கு அடிப்படை எது? தயை; தயைக்கு தடை என்று எதை சொல்கிறார்? ஆசாரங்களை சொல்கிறார் “ஜாதி ஆசாரம், குலாசாரம், ஆசிரம ஆசாரம், லோகாசாரம், தேசாசாரம், கிரியாசாரம், சமையாசாரம், மதாசாரம், மரபு ஆசாரம், சாதனா சாரம், அந்த சாரம், சாஸ்திரா சாரம் முதலிய ஆசாரங்கள்; ஆதலால் மேற்குறித்த ஆசாரங்கள் ஒழிந்து சுத்த சன்மார்க்க சத்ய ஞான ஆசிரமத்தை வணங்கி பொதுநோக்கம் வந்தால் ஒழிய தயவு விருத்தி ஆகாது. தயவு விருத்தி ஆகாவிட்டால் அன்பும், கருணையும் கிடைக்காது. அன்பும், கருணையும் இல்லாவிட்டால் நீ இறைவனை அடைய முடியாது” என்று சொல்கிறார் வள்ளலார். நாம் தவறு செய்தோம் என்றால் அதனை தவறு என்று ஒப்புக்கொள்ள வேண்டும். அது பெரியாரிடம் இருந்தது. பெரிய பெரிய தலைவர்களிடம் எல்லாம் இருந்தது. இந்து மௌடீகம் பேசுகின்ற மதவாதிகள் மட்டும்தான் எதையும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். புதிது புதிதாக விளக்கம் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். இத்தனை நாட்களாக ஏன் சைவத்தை தூக்கி பிடித்தீர்கள் என்று கேட்டபோது வள்ளலார் சொன்னார், “அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போது இருந்தது என்றால், அப்போது எனக்கு அவ்வளவு ‘சொற்ப அறிவு’ தான் இருந்தது என்று!.

நான் ஏன் சைவ மதத்தில் இருந்தேன் என்றால், நான் ஏன் சிவனைத் தூக்கி பிடித்தேன், நான் ஏன் விபூதி அணிந்து கொண்டேன் என்றால், ஏன் மெய் கண்ட தெய்வத்தின் சிந்தத்தை ஏற்றுக் கொண்டேன்? பசி, பதி, பாசமெல்லாம் ஏன் ஒரு காலத்தில் நம்பினேன்? என்ன காரணம் என்றால், அப்போது இருந்த அறிவு, ‘சொற்ப அறிவு’ என்று வெளிப்படையாக ஒப்புக் கொள்கிறார். அப்போது மனிதன் என்பவன் மாறுதலுக்கு உட்பட்டவன். அந்த மாறுதலை ஒப்புக் கொண்டு ஒரு பெரிய பொருளுக்கு வள்ளலார் வருகிறார். பரம்பொருள் என்றால் ஜோதி வடிவில் இருக்கிறது என்று கருதினார். அவர் ஒரு இலக்கியவாதி என்பதை தன் எழுத்தில் நிரூபித்திருக்கிறார் “மனு நீதி கண்ட முறை” என்ற நூலில் மனுநீதி சோழனின் தேர் காலில் இட்டுக் கொன்றப்பட்ட பசுவிற்காக அவன் பேசுவது மாதிரி அவர் எழுதிய மனுநீதி கண்ட முறை என்ற அந்த உரையில் என்ன சொல்கிறார் என்றால்,

**“தானம் கொடுப்போரை தடுத்து நின்றேனோ**

**தர்மம் பாராது தண்டம் செய்தேனோ**

**களவு செய்தவருக்கு உளவு சொன்னேனோ**

**கோள் சொல்லி குடும்பம் கலைத்தேனோ”**

என்று அன்றைக்கு அறமென கருதப்பட்டவையெல்லாம் பட்டியலிட்டு சொல்லிக் கொண்டே போகிறார். இதை சொல்லிக் கொண்டே போகும்போது, வள்ளலார் இடத்தில் இருக்கும் இந்த தமிழும், இலக்கியமும் வெளியே வந்து விழுகிறது. அப்போது அவர் சைவ சமயத்தில் இருந்தார். இப்படியெல்லாம் பேசிய, எழுதிய ஒருவர்தான் பிறகு அவற்றையெல்லாம் விட்டுவிட்டு சமூகத்தில் பொருளியலில் இப்படிப்பட்ட மாற்றங்களை செய்து இருக்கிறார் என்றால், இன்றைக்கு 200 வருடங்கள் ஆகிவிட்டது. அவருடைய பணியில் அன்றைக்கு இருந்த ஆட்சியாளரை கண்டித்தார். வறுமையை போக்க வேண்டும் என்று விரும்பினார். அறியாமையை போக்க வேண்டும் என்று விரும்பினார். அறியாமையையும், வறுமையையும் இங்கு நிலைப்படுத்திய விசைகள் இரண்டே இரண்டு. ஒன்று ஜாதி, மற்றொன்று மத ஆசாரங்கள். அதை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்று விரும்பினார். தனக்கென்று ஒரு தனி வழி என்றார். அந்த தனி வழிக்கு ஒரு நிறுவனத்தை கட்டமைத்தார். அந்த தனி வழிக்கு ஒரு சபையை உண்டாக்கினார். அந்த சபைக்கு ஒரு கொடியை கொண்டு வந்தார். தன்னுடைய நெறிக்கு ஆட்களை சேர்த்து ஒரு சங்கமாக மாற்றினார். கல்வியறிவு மறுக்கப்பட்டதை அவர் உணர்ந்து அனைவருக்குமான கல்வி பரப்பலை முன்னெடுத்தார்.

இப்போது நான் என்ன கேட்கிறேன், இவற்றையெல்லாம் ஏற்கனவே செய்தவர் பெரியார். இந்த உலகம் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று விரும்பியவர் மார்க்ஸ். இந்த சமூக அமைப்பு மாற வேண்டும் என்று விரும்பி பவுத்தத்திற்கு போனவர் அம்பேத்கர். இன்னும் ஒரு படி மேலே சொன்னால், அம்பேத்கர் ஆன்மிகத் தேடலுக்காக எல்லா மதத்திற்கு உள்ளும் சென்று ஆய்வு செய்தார்.

எம்.சி.சாக்லா சுதந்திர இந்தியாவின் முதல் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர். ஒரு இஸ்லாமியர். அவர் ஜின்னாவின் நண்பர். தனது நண்பரிடம் சென்று கேட்கிறார், “பாகிஸ்தானை பிரிக்க வேண்டாம். உனக்கும் எனக்கும் தேச பக்தி இருக்கிறது. நாம் இங்கேயே இருக்கலாம்” என்கிறார். அதற்கு ஜின்னா “இல்லை சாக்லா, நீ என்னோடு வந்துவிடு. நாமெல்லாம் முஸ்லிம். இந்த இந்து மதவாதிகளை நம்பி, காந்தியின் ராம ராஜ்ஜியத்தை ஏற்க முடியாது” என்று அவர் அழைக்கிறார். அவரிடம் கேட்டபோது, அவருடைய ‘ரோசஸ் இன் டிசம்பர்’ (Roses in December) என்ற புத்தகத்தில் எழுதினார்; இஸ்லாத்தில் இணைய கள ஆய்வுகளை கருத்தாய்வுகளை மேற்கொண்டவர் அம்பேத்கர் என்று. ஐநா சபை சென்று காஷ்மீர் எங்களோடு தான் இருக்க வேண்டும் என்று இந்திய அரசின் சார்பில் பேசிவிட்டு வெற்றி பெற்று வந்தவர் எம். சி. சாக்லா. அப்போது இந்தியாவோடு காஷ்மீர் இருக்க வேண்டும் என்று விரும்பிய எம்.சி.சாக்லா இஸ்லாத்திற்கு வருகிறீர்களா என்று எம்.சி.சாக்லா அம்பேத்கரிடம் கேட்டபோது, இஸ்லாம் மதத்தைப் பற்றி ஒரு மிகப்பெரிய சிலாகிப்பு, ஒரு உரையாடல் நடந்திருக்கிறது. பிறகு கிறிஸ்துவத்தை படித்திருக்கிறார். இவற்றையெல்லாம் தாண்டி அவர் பவுத்தத்தை தழுவினார். அதற்கு ஒரே காரணம் பெரியார் விரும்பிய வருண ஒழிப்பும், மார்க்ஸ் விரும்பிய வர்க்க ஒழிப்பும் கூடிய ஆன்மிகம் புத்தரிடத்தில் இருந்ததாக அவர் கண்டறிந்தார்.

### புத்தரை சுவீகரித்த இந்துமதம்!

எனவே, இருக்கிற அமைப்பு மதமாக இருந்தாலும், ஜாதியாக இருந்தாலும் அது மாற்றப்பட அல்லது அழிக்கப்பட வேண்டும் என்று அம்பேத்கர் விரும்பினார். மாற்றாக புத்தரிடம் சென்றார். புத்தரையும் சேர்த்து சுவீகரித்து கொண்டது இந்து மதம். பெரியார் எல்லாவற்றையும் உடைக்கிறேன் என்றார். ஆனால் அவரால் உடைக்கப்பட்ட வெற்றிடத்தில் ஒரு மாற்றம் கொண்டுவர அவர் பொது ஒழுக்கத்தை மட்டுமே முன் வைத்தார். கம்யூனிசம் இந்த உலகத்தை மாற்றுவோம் என்று சொன்னது. அந்த மாற்றம் நிலைக்கவில்லை. அப்படியானால் கம்யூனிசம் நிலையான வெற்றி பெற முடியாத சூழ்நிலையில் இன்றைக்கு இருக்கிறது. மார்க்சியம் நல்ல தத்துவம். ஆனால் அதற்கு கோர்ப்பசேவ் என்ற தவறான தலைவன் வந்ததால் ரஷ்யாவில் தோற்றுப்போய் விட்டது. பிடல் காஸ்ட்ரோ என்ற ஒரு நல்ல தலைவன் இருந்த காரணத்தினால் அந்த நாட்டில் இன்னும் அதே தத்துவம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அப்போது இப்படிப்பட்ட தத்துவங்களுக்கெல்லாம் குறைபாடு இருக்கிறது, அல்லது நிலைக்க முடியாது என்ற புறச்சூழல் வருகிறபோது நான் எப்படி பார்க்கிறேன் என்றால், பெரியார் இந்த மண்ணில் ஏற்படுத்திய புரட்சி தொடர வேண்டும். ஆனால் எல்லாவற்றையும் ஒழித்துவிட்டு அந்த இடத்தில் எதை வைப்பது என்று இன்னொரு மதத்தை அல்லது நெறியை அவர் சொல்லவில்லை. கம்யூனிசம் இந்த மண்ணில் மாற்றம் வேண்டும், வர்க்கம் ஒழிய வேண்டும் என்று விரும்பியது. அவர்களும் ஆன்மிக தேடலுக்கு மாற்று சொல்லவில்லை. பவுத்தத்திற்கு சென்றார் அம்பேத்கர். பவுத்தத்தையும் சேர்த்து தனதாக்கி கொண்டு சிதைத்தது இந்து மதம்.

எனவே கருப்பு, சிவப்பு, நீலம் எல்லாம் வெவ்வேறு வழிகளை கையாண்டு சமத்துவத்தை நிறுவ வேண்டும், அறியாமையை, வறுமையை போக்க வேண்டும் என்று விரும்பின. ஆனால் எல்லா இடத்திலும் ஏதோ ஒரு பூரணத்துவம் இல்லாத போதாமை இருக்கிறதோ என்று எண்ண இடமிருக்கிறது; அப்படி எண்ணுவதில் உண்மை இருக்குமானால், அந்த போதாமை நீக்கப்பட ஒரு வழி இருக்கிறது; அது வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்க நெறியாக இருக்கலாமா அந்த நெறியை நாம் இப்போது இந்த உணர்வோடு முன் எடுக்க வேண்டுமா என்கின்ற விவாதத்தை இந்த அரங்கம் மூலமாக இடது சாரி சிந்தனையாளர்களுக்கு நான் முன்வைக்கிறேன். நீலமும், சிவப்பும், கருப்பும், வள்ளலாரின் வெள்ளையோடு இணைந்தால் இந்திய அரசியல் தமிழக அரசியல் ஏற்றம் பெறும் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால் காவியை விரட்ட வேண்டும் என்று கருப்பு வந்தது. காவியை விரட்ட வேண்டும் என்று நீலம் வந்தது. காவியை சிவப்பு ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் சிவப்பும், நீலமும், கருப்பும் விடுதலைக்கான தத்துவமாக தேவைப்படுகிறது. அந்த தேவைகளில் போதாமை ஏதேனும் உள்ளதா என்று திறந்த மனதோடு தேடினால், வள்ளலாரின் வெண்மையையும் இணைத்தால் முழுமை பெறுமா என்கிற சிந்தனையை நான் முன் வைக்க விரும்புகிறேன்.

### நேர் எதிர் திசையில் இயங்கும் ஆன்மிகம்!

நாம் ஒரு இக்கட்டான சூழ்நிலை கொண்ட அரசியலில் இருக்கிறோம். ஒரு பேராபத்தில் இருக்கிறோம். ஒரு பெரிய விஷப்பாம்பு எதிரே வருகிறது. அந்தப் பாம்பை அடிப்பதற்கு அம்பேத்கர் தடி இருக்கிறது. பெரியாரின் தடியும் பயன்படுகிறது. மார்க்ஸின் தடியும் இருக்கிறது. ஆனாலும் அந்த பாம்பு வேறு ஒரு இடத்தில் சென்று ஒளிந்து கொண்டிருக்கிறது. ஆன்மிகத்தில் மதத்தில் அந்த பாம்பு ஒளிந்து கொண்டு, மக்களை மயக்குகிற இடமான பாசிச ஆன்மிகம், மக்களை பிளவுபடுத்துகிற ஆன்மிகம், சமத்துவத்தை தடுக்கிற ஆன்மிகம், பெண்களை இழிவுபடுத்துகிற ஆன்மிகம், ஒருவனின் தற்குறித்தனத்தை, வறுமையை கர்மாவின் பெயரால் நியாயப்படுத்தும் ஆன்மிகம் ஆகியவற்றில் தன்னை அது ஒளிந்து மறைத்துக் கொள்கிறது. வள்ளலார் முன்னெடுத்த ஆன்மிகம் இவைகளுக்கு நேர் எதிர் திசையில் இயங்குகின்ற ஆன்மிகம். அங்கே விஷப்பாம்பு குடியேறவோ, ஓடி ஒளியவோ வாய்ப்பில்லை.


எனவே, பாசிச ஆன்மிகத்திற்கும் ஒரு மாறுதல் வேண்டும் என்று கருதினால் - அந்த மாறுதல் மார்க்சோடும், அம்பேத்கரோடும், பெரியாரோடும் சேர்க்கப்பட வேண்டுமானால் நாம் வள்ளலாரை இந்த தலைவர்களோடு இணைத்து ஒரு புதிய உத்தியை பாசிச எதிர்ப்புக்கு பயன்படுத்த வேண்டும்.

எனவே, 200 ஆண்டுகளுக்கு பிறகும், பா.ஜ.கவின் பாசிசத்தை வீழ்த்த பெரியாரோடும் மார்க்சோடும், அம்பேத்கரோடும், வள்ளலாரையும் ஏற்றுக் கொண்டு சமத்துவ சமுதாயத்தை படைக்க உறுதி ஏற்போம்.

இவ்வாறு கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. உரையாற்றினார்.



நடப்போம் நலம் பெறுவோம்
Health Walk
8 கிலோ மீட்டர்
திட்டத்தினை தமிழ்நாட்டில் 38 மாவட்டங்களிலும் தொடங்கி வைத்திட வருகை தரும்
உடற்பயிற்சி விழிப்புணர்வு நாயகர்
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களை வருக! வருக!! என அன்புடன் வரவேற்கும்...
நாள்: 04.11.2023 சனிக்கிழமை காலை 6.00 மணி
இடம்: பெசன்ட் நகர் கடற்கரை சாலை, சென்னை
Santhosh Design
99401 80492
மா.சுப்பிரமணியன் B.A,LLB.,
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்


கலைஞர்
100
1924 - 2023
நீட் விலக்கு நம் இலக்கு
#BAN NEET
04.11.2023
ஆரூர் மாவட்டத்திற்கு
வருகைதரும்...
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணி செயலாளர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே
வருக..! வருக..!!
டி.ஆர்.பி.ராஜா Ph.D.,
மாநில தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர்
தமிழ்நாடு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர்
மின்னும் மன்னை
DMK
IT WING




வெற்றி முழக்கத்தோடு வரவேற்கும் : வி.ஜி.இராஜேந்திரன் M.L.A
திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதி – தலைமை செயற்குழு உறுப்பினர்





மாண்புமிகு கழகத்தின்

# தலைவரே!

மாண்புமிகு கழக இளைஞரணி

# செயலாளரே!

வருக..! வருக..!!

**திருத்தணி எஸ்.சந்திரன்** B.A., LLB., MLA.,

திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச்செயலாளர் – திருத்தணி சட்டமன்ற உறுப்பினர்

அன்புடன்

**Dr.VCR.குமரன்** BAMS.,

மாவட்ட கழக துணை செயலாளர்

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (2.11.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் சந்தித்து, ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரில் 26.10.2023 அன்று நடைபெற்ற 7வது ஜப்பான் சுற்றுலா விருது வழங்கும் விழாவில், ஜப்பான் சுற்றுலா கண்காட்சி செயற்குழுவின் தலைவர் ஹிரோயுகி தகாஹாஷி (Hiroyuki Takahashi) அவர்கள் தமிழ்நாட்டின் மன்னார் சுற்றுச்சூழல் சுற்றுலாத் திட்டத்திற்கு வழங்கிய Executive Committee Award விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன், முதன்மைச் செயலாளர் /சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் /மேலாண்மை இயக்குநர் திருமதி.காகர்லா உஷா ஆகியோர் உள்ளனர்.

# டெல்லி - நொய்டா பகுதிகளில் காற்று மாசு அதிகரிப்பு!

புதுடெல்லி, நவ. 4 - தலைநகர் டெல்லியில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வாகன பயன்பாடு, அண்டை மாநில எல்லைகளில் எரிக்கப்படும் விவசாய கழிவுகளில் இருந்து வெளியேறும் புகை, கட்டுமான பணிகளால் எழும் புழுதி ஆகியவற்றால் காற்று மாசு அதிகரித்துள்ளது. கடந்த சில நாள்களாக பாதிப்பு அளவு லேசாக மாசு குறைந்திருந்த நிலையில், நேற்று மீண்டும் அதிகரித்துள்ளது. டெல்லியில் நேற்று காலை, காற்றின் தரக்குறியீடு அளவு 346 புள்ளிகளாக பதிவாகியிருந்தது. இதனால், வாகன ஓட்டிகளும் அதிகாலையில் நடைபயிற்சி மற்றும் உடல்பயிற்சிக்கு சென்ற மக்களும் கடும் சிரமத்துக்கு ஆளாகினர். இதேபோல் நொய்டாவிலும் காற்று மாசு மிகவும் மோசமான நிலையில் உள்ளது. நொய்டாவின் பல்வேறு பகுதிகளிலும் காற்று தரக்குறியீடு 400 புள்ளிகளுக்கும் மேல் பதிவாகி இருந்தது.

இதனால் முச்சு விடவே பெரும் சிரமமாக இருப்பதாக நொய்டா வாசிகள் தெரிவித்துள்ளனர்.

டெல்லியில் அதிகரிக்கும் காற்று மாசை கட்டுப்படுத்த புழுதி பறக்கக்கூடும் என சந்தேகிக்கப்படும் பகுதியில் நீர் தளிப்பு கருவி மூலம் தண்ணீர் தெளிக்கப்பட்டு வருகிறது.

இதே போல் என்.சி.ஆர். எனப்படும் தேசிய தலைநகர பிராந்திய பகுதியில் அத்தியாவசியம் இல்லாத கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள அரசு நிர்வாகம் தடை விதித்துள்ளது.



சென்னை, எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் பேரிடர் காலங்களில் தேவையான அலுவலர்களை தொடர்பு கொள்ளும் வகையில் தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமையால் தயாரிக்கப்பட்ட தொலைபேசி கையேட்டை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே. பிரபாகர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் வே.ராஜாராமன், பேரிடர் மேலாண்மை இயக்குநர், சி. அ. ராமன், ஆகியோர் உள்ளனர்.



கடலூர் கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் கூட்டத்தில் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். இதில் தொகுதி பார்வையாளர் ச.அ.பெருநற்கிள்ளி, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### தேர்வுக் குழுக்களின் பரிந்துரைகளின்படி பல்கலைக் கழகங்களில்

# அரசு நியமித்த துணைவேந்தர்களை நியமிக்க ஆளுநருக்கு உத்தரவிடுக!

## உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மேலும் ஒரு வழக்கு!

புதுடெல்லி, நவ.4 - சென்னை பல்கலைக்கழகம், கல்வியியல் பல்கலைக்கழகம், கோவை பாரதியார் பல்கலைக்கழகம் ஆகிய 3 பல்கலைக்கழகங்களுக்கு துணை வேந்தர்களை தேர்வு செய்வதற்கான குழுக்களை அமைத்து தமிழ்நாடு ஆளுநர் ஆர். என்.ரவி சில மாதங்களுக்கு முன் உத்தரவிட்டிருந்தார்.

ஆளுநரின் இந்த செயலுக்கு தமிழ்நாடு அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்தது. ஆளுநரின் நடவடிக்கை சட்டரீதியாக எதிர்கொள்ளப்படும் என உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், அரசு நியமித்த தேர்வுக் குழுக்களின் பரிந்துரைகளின்படி பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களை நியமிக்க ஆளுநருக்கு உத்தரவிடக் கோரி தமிழநாடு அரசு உச்சநீதிமன்றத்தில் ரிட்மனு தாக்கல் செய்துள்ளது. தமிழ்நாட்டில் உயர்கல்வி துறையின் கீழ் 13 பல்கலைக்கழகங்கள் இயங்கி வருவதாகவும், இப்பல்கலைக்கழகங்களுக்கென தனித்தனியே சட்டம் மற்றும் விதிகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றின்படி துணைவேந்தர்களின் பதவிக்காலம் முடிந்தவுடன் அதனை நிரப்ப மாநில அரசு அமைக்கும் தேடுதல் குழுக்கள் மூலம் துணைவேந்தர்கள் தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்படுவார்கள் என்றும் மனுவில் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு அரசு, உயர்கல்வித் துறையின்கீழ் இயங்கும் பல்கலைக் கழக சட்டவிதிகளில், ஆளுநர், துணை வேந்தரை தேர்வு செய்யும் தேர்வுக்குழுக்களை அமைக்க வழிமுறை இல்லை என்றும் தெரிவித்துள்ளது.

இதுவரை தேடுதல் குழு உறுப்பினர்கள் அந்தந்த பல்கலைக்கழக சட்ட விதிகளின்படி நியமிக்கப்பட்டு அரசாணை வெளியிட்டு, அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளதாகவும், ஆனால் தற்போது ஆளுநர் நடைமுறையில் உள்ள பல்கலைக் கழக சட்ட விதிகளுக்கு எதிராக தேடுதல் குழுக்களை தன்னிச்சையாக முடிவு செய்து அறிவிக்கை வெளியிட்டுள்ளார் என்றும், ஆளுநரால் அமைக்கப்பட்டுள்ள இந்த தேடுதல் குழுக்கள் முழுக்க முழுக்க பல்கலைக்கழக சட்டம் மற்றும் விதிமுறைகளுக்கு மாறானது என்றும் தமிழ்நாடு அரசு தனது மனுவில் குறிப்பிட்டுள்ளது.

தமிழ்நாடு ஆளுநர் அமைத்துள்ள தேடுதல் குழுக்கள் விதிகளுக்கு எதிரானது என அறிவிக்க வேண்டும் என்றும், அரசு நியமித்த தேர்வுக்குழுகளின் பரிந்துரைகளின்படி பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களை நியமிக்க ஆளுநருக்கு உத்தரவிட வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ள மனுவில் வலியுறுத்தி உள்ளது.






நெல்லை மாவட்ட திராவிடர் கழகம் சார்பில் ஒன்றிய பா.ஜ.க அரசின் குலத் தொழிலை திணிக்கும் “மனுதர்ம யோஜனா” சதித்திட்டத்தை எதிர்த்து தொடர் பிரச்சாரப் பயண பொதுக்கூட்டம் பாளையங்கோட்டை தெற்கு பஜார் நூர்துநாதன் சிலை அருகில் திராவிடர் கழக மாவட்டச் செயலாளர் வேல்முருகன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பங்கேற்று உரையாற்றினார். உடன் நெல்லை கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்டம் தி.மு.க பொறுப்பாளர் மைதீன்கான், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் சு.ப.சீதாராமன், மேயர் சரவணன்,காங்கிரஸ் சங்கரபாண்டியன்,ம.தி.மு.க துணை பொதுச்செயலாளர் ராஜேந்திரன் உட்பட பலர் உள்ளனர்.



முதலமைச்சர் அவர்களின் மேலான வழிகாட்டுதலின்படி கல்விசாரா மற்றும் மன்ற செயல்பாடுகளில் மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுப் பள்ளி மாணவச் செல்வங்கள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஜப்பான் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளுக்கு கல்விச் சுற்றுலா செல்கின்றனர். அதனையொட்டி மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பேராசிரியர் அன்பழகனார் கல்வி வளாகம் வருகை புரிந்திருந்த 100 மாணவர்களை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வரவேற்றார். அம்மாணவர்களுடன் உரையாடி பயணத்திற்குத் தேவையான உபகரணங்களை வழங்கி வாழ்த்துகள் தெரிவித்துக்கொண்டார். இம்மாணவர்களை நவம்பர் 4 முதல் நவம்பர் 11 வரை ஜப்பான் மற்றும் தென்கொரியா நாடுகளில் உள்ள பல்வேறு இடங்களுக்கு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அழைத்துச் செல்கிறார். முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி ‘அரசுப் பள்ளி என்பது வறுமையின் அடையாளம் அல்ல! அது பெருமையின் அடையாளம்’ என்பதற்கு இப்பயணமும் ஒரு சாட்சியாக அமைந்திருக்கிறது.

### பாளையங்கோட்டையில் - ‘மனுதர்ம யோஜனா’ சதித் திட்டத்தை எதிர்த்து

# தொடர் பிரச்சாரப் பயணம் பொதுக்கூட்டம்!

## கி.வீரமணி - இரா.ஆவுடையப்பன் - டி.பி.எம்.மைதீன்கான் சிறப்புரை!

நெல்லை.நவ.4-

நெல்லை மாவட்ட திராவிட கழகம் சார்பில் ஒன்றிய பா.ஜ.க அரசின் குலத் தொழிலை திணிக்கும் “மனுதர்ம யோஜனா”சதித் திட்டத்தை எதிர்த்து தொடர் பிரச்சாரப் பயணம் பொதுக்கூட்டம் பாளை யங்கோட்டை தெற்கு பஜார் லூர்துநாதன் சிலை அருகில் திராவிடக் கழக மாவட்டச் செயலாளர் வேல்முருகன் தலைமையில் நடைபெற்றது. பாளை பகுதி தலைவர் தர்மராஜ் வரவேற்புரையாற்றினார். மாவட்டத் தலைவர் ராஜேந்திரன் நூல்கள் அறிமுக உரையாற்றினார். மாநில கிராம பிரச்சார அமைப்பாளர் அன்பழகன் தொடக்க உரையாற்றினார். இந்நிகழ்வில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

இந்நிகழ்வில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பேசியதாவது.

தமிழக இளைஞர்கள் படிக்கக் கூடாது என்ற நோக்கில் குலத்தொழில் திட்டத்தை திணிக்கும் ஒன்றிய அரசின் “விஸ்வ கர்மா யோஜனா” திட்டத்தை எதிர்த்து தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறோம். மீண்டும் குலத்தொழிலை திணிப்பது சமுதாயத்திற்கு பேராபத்தை ஏற்படுத்தும் 9 ஆண்டுகால பா.ஜ.க ஆட்சியில் நாடு வளர்ச்சிக்கு பதிலாக ஒவ்வொரு நாளும் வீழ்ச்சியை சந்தித்து வருகிறது.

இதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.விஸ்வ கர்மா யோஜனா திட்டம் சாதிய தொழிலை மீண்டும் உருவாக்கும்,ஒரு திட்டமாகும். இது மோடியின் சூழ்ச்சி திட்டம்.

நெல்லையில் சமீபத்தில் சாதி ரீதியாக இரண்டு பட்டியல் இன இளைஞர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.இது குறித்து காவல்துறை நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்ட நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.இதன் பின்னணியை நாம் பார்க்க வேண்டும். தமிழகத்தில் “திராவிட மாடல்” ஆட்சி சிறப்பாக நடக்கிறது. ஆட்சி மீது குறை சொல்ல முடியவில்லை. எனவே சாதிய தீண்டாமை பிரச்சினையை திட்டமிட்டு சிலர்தூண்டி விடுகின்றனர். 70 ஆண்டுகளுக்கு முன் திராவிட இயக்கம் போராடி குலக்கல்வி திட்டத்தை ஒழித்தது.அதனால் தான் இன்று நாம் கல்வி கற்க முடிகிறது.வேலைக்கு செல்லும் நிலை உள்ளது. தமிழகம் கல்வியில் அபார வளர்ச்சி அடைந்துள்ளது. இதனை பொறுத்துக் கொள்ள முடியாத ஒன்றிய அரசு விஸ்வகர்மா யோஜன திட்டம்,நீட் தேர்வு போன்றவைகளை கொண்டு வருகிறது. இதனை எதிர்த்து தமிழகத்தில் தொடர்ந்து போராட்டம் ஜனநாயகம் முறைப்படி நடந்து வருகிறது.

தமிழகம் அமைதி பூங்காவாக திகழ்ந்து வருகிறது. இதனை சீர்குலைக்கவே ஒன்றிய அரசு இதுபோன்ற திட்டங்களை கொண்டு வருகிறது. இன்னும் 6 மாதம் மட்டுமே அதன் பின்பு நாட்டில் எந்த மூலையிலும் பா.ஜ.க ஆட்சி இல்லாத நிலை ஏற்படும். 2024 தேர்தல் பா.ஜ.கவை வழியனுப்பும் தேர்தலாக இருக்கும்.

இவ்வாறு திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி பேசினார்.

நிகழ்வில் தி.மு.க. சட்ட திட்ட குழு உறுப்பினர் சுப.சீதாராமன், மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன்,மாநகர மாவட்ட காங்கிரஸ் தலைவர் சங்கர பாண்டியன், ம.தி.மு.க துணை பொது செயலாளர் தி.மு.ராஜேந்திரன் உள்பட திராவிடர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் திராவிடக் கழக பாளை பகுதி செயலாளர் பாலகிருட்டிணன் நன்றி உரையாற்றினார்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**வேதாரண்யம் செ.யூசுப்**
**நவம்பர் 4 (2013)**



பள்ளிப் பருவத்திலிருந்தே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு வேதாரண்யம் பகுதியில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

திருத்துறைப்பூண்டி வட்டக் கழக துணைச் செயலாளராகவும், 25 ஆண்டுகள் தொடர்ந்து வேதாரண்யம் ஒன்றியக் கழகச் செயலாளராகவும், தலைமை செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைக் கழக பேச்சாளராகவும் திறம்பட பணியாற்றியவர்.

இரண்டு முறை நாகை மாவட்ட ஊராட்சி மன்றத் துணைத் தலைவராகப் பணியாற்றி வேதாரண்யம் பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

1964ல் நடைபெற்ற மொழிப் போராட்டத்திலும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**




திருப்பத்தூரில் நடைபெற்ற சிவகங்கை மாவட்டக் கழக செயற்குழு கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் சிறப்புரையாற்றினார். உடன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்ட அவைத்தலைவர் அ.கணேசன், மாவட்டத் துணை செயலாளர்கள் த.சேங்கைமாறன் ,கே.எஸ்.எம்.மணிமுத்து ஆகியோர் உள்ளார்கள்.

### சுதந்திரப் போராட்ட வீரர் சங்கரய்யாவுக்கு முனைவர் பட்டம்! கையெழுத்து போட மறுத்த

# ஆளுநர் ரவிக்கு எதிராக கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம்!

## மதுரையில் மார்க்சிஸ்ட் கட்சியினர் நூற்றுக்கணக்கானோர் கைது!

மதுரை, நவ. 4-

மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவுக்கு நேற்று முன்தினம் வருகை தந்த தமிழக ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மார்க்சிஸ்ட் கட்சியினர் கருப்புக் கொடி ஏந்தியும், கருப்பு பலூன்களைப் பறக்கவிட்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதற்கு அனுமதி மறுத்ததால் போலீசாருக்கும், கட்சியினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. பின்னர் நூற்றுக்கணக்கானோரை போலீஸார் கைது செய்தனர்.

நீட் தேர்வு விலக்கு உள்ளிட்ட மசோதாக்களில் கையெழுத்திட மறுக்கும் தமிழக ஆளுநர் தமது பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும் என வலியுறுத்தியும், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் என்.சங்கரய்யாவுக்கு டாக்டர் பட்டம் வழங்கும் கோப்பில் கையெழுத்திட மறுக்கும் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி மதுரையில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமை அறிவித்தது.

அதன்படி, நேற்று முன்தினம் காமராசர் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவுக்கு வருகை தந்த ஆளுநருக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், மதுரை அருகே நாகமலை புதுக்கோட்டையில் நான்குவழிச் சாலை அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புறநகர் மாவட்டச் செயலாளர் கே.ராஜேந்திரன், மாநகர் மாவட்டச் செயலாளர் மா.கணேசன் ஆகியோர் தலைமை வகித்தனர். மூத்த தலைவர் சி.ராமகிருஷ்ணன், மாநிலக் குழு உறுப்பினர்கள் ரா.விஜயராஜன், எஸ்.கே.பொன்னுத் தாய், எஸ்.பாலா உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க மதுரை புறநகர் மாநகர் பகுதியிலிருந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் கட்சிக் கொடிகளுடனும், கருப்புக் கொடிகளுடனும் காலை 7.30 மணிக்கே திரண்டனர். மதுரை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் ரா.சிவபிரசாத் தலைமையில் ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர். காலை 9 மணிக்கு துவங்கிய ஆர்ப்பாட்டத்தில் ஆளுநருக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தைச் சேர்ந்த மாணவர்கள், இளைஞர்கள் கருப்புப் பலூன்களை வானில் பறக்கவிட்டதை போலீசார் உடைத்தனர். மாதர் சங்க பெண்கள் கருப்பு உடை அணிந்தும் வந்திருந்தனர்.



கருப்புக் கொடி காட்டியதால் தடுக்க முயன்ற போலீசாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே தள்ளு முள்ளு, வாக்குவாதம் ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கானோரை போலீசார் கைது செய்து நாகமலை புதுக்கோட்டை என். ஜி.ஓ காலனியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் அடைத்தனர்.

## தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

### ஒன்றியம்/பகுதி, நகரம், மற்றும் பேரூர்க் கழக அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்பது குறித்து

### அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக விளையாட்டு மேம்பாட்டு அணியில் ஒன்றியம்/ பகுதி நகரம், மற்றும் பேரூர்க் கழக அமைப்பாளர் மற்றும் பொறுப்புக்களுக்கு துணை விண்ணப்பிக்க அமைப்பாளர்களுக்கான ஆர்வம் உள்ள நபர்கள் அதற்கான விண்ணப்பப் படிவங்களை www.dmksportswing.in என்கிற இணையத் தளத்தின் வாயிலாக தரவிறக்கம் செய்தோ அல்லது முரசொலி நாளிதழில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தை பூர்த்தி செய்தோ, வருகின்ற 20.11.2023க்குள் சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர்களிடம் ஒப்படைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா அறிவாலயம்,
நாள்: 02.11.2023

**தயாநிதி மாறன்**, எம்.பி.
செயலாளர், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி

**தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி**

**ஒன்றியம் - பகுதி - நகரம் - பேரூர்க் கழக அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் சுயவிவரப் படிவம்**

மாவட்டம் : ..........
சட்டமன்றத் தொகுதி : ..........
ஒன்றியம் : ..........
பகுதி : ..........
நகரம் : ..........
பேரூர் : ..........

புகைப்படம்

விண்ணப்பிக்கும் பொறுப்பு :

☐ ஒன்றியம்/பகுதி அமைப்பாளர் ☐ ஒன்றியம்/பகுதி துணை அமைப்பாளர் ☐ ஒன்றியம்/பகுதி துணை அமைப்பாளர் (சமூக வலைதளப் பொறுப்பாளர்) ☐ ஒன்றியம்/பகுதி துணை அமைப்பாளர் (மகளிர்)

☐ நகரம் அமைப்பாளர் ☐ நகரம் துணை அமைப்பாளர் ☐ நகரம் துணை அமைப்பாளர் (சமூக வலைதளப் பொறுப்பாளர்) ☐ நகரம் துணை அமைப்பாளர் (மகளிர்)

☐ பேரூர் அமைப்பாளர் ☐ பேரூர் துணை அமைப்பாளர் ☐ பேரூர் துணை அமைப்பாளர் (சமூக வலைதளப் பொறுப்பாளர்) ☐ பேரூர் துணை அமைப்பாளர் (மகளிர்)

பெயர் : ..........
தந்தை / கணவர் பெயர் : ..........
பிறந்த தேதி : .......... வயது : .......... கல்வித் தகுதி : ..........
முகவரி : ..........
..........
மாநில/மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்கேற்று இருப்பின் அதன் விவரங்கள் : ..........
விருப்பமான விளையாட்டு : ..........
தொடர்பு எண் : ..........
மின்னஞ்சல் : ..........

இப்படிவத்தில் குறிப்பிட்ட எனது விவரங்கள் அனைத்தும் உண்மை என உறுதியளிக்கிறேன்

நாள் : (கையொப்பம்)

குறிப்பு 1) புகைப்படம், வாக்காளர் அடையாள அட்டை மற்றும் ஆதார் அட்டையின் நகல் கண்டிப்பாக இணைக்க வேண்டும்.
2) பூர்த்தி செய்த விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்களிடம் வருகின்ற 20.11.2023-க்குள் ஒப்படைத்திட வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### தேனி தெற்கு மாவட்டம்

## கம்பம் தெற்கு நகரக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

தேனி தெற்கு மாவட்டம், கம்பம் தெற்கு நகரச் செயலாளர் சூர்யா ஆர்.கே.செல்வகுமார், தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விலகிக் கொண்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **சி.பால்பாண்டிய ராஜா**, (15, பாரதியார் நகர் வடக்கு 7வது தெரு, கம்பம் 625 516. தேனி மாவட்டம்.) அவர்கள் கம்பம் தெற்கு நகர கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட நகரக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 02.11.2023

**துரைமுருகன்,**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



நெல்லை மாநகராட்சி சீர்மிகு நகர் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள டவுன் நேதாஜி போஸ் சந்தையினை மாநகராட்சி மேயர் பி.எம்.சரவணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் துணை ஆணையாளர் தாணுமூர்த்தி, உதவி செயற்பொறியாளர் பேரின்பம், உதவி வருவாய் அலுவலர் சிவனையா உட்பட பலர் உள்ளனர்.




தமிழ்நாடு முதலமைச்சர். மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (2.11.2023) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (TIDCO) 2022 –2023 ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத்தொகையாக 204 கோடியே 1 இலட்சத்து 19 ஆயிரத்து 409 ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன், தலைமைச் செயலாளர் . சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலாளர் வி.அருண் ராய், 'டிட்கோ' நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, ஆகியோர் உள்ளனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (2.11.2023) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் (TIIC) 2022–2023 ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத்தொகையாக 15 கோடியே 17 இலட்சத்து 61 ஆயிரத்து 400 ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், . ஹன்ஸ் ராஜ் வர்மா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலாளர் வி.அருண் ராய், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இந்திய விடுதலைப் போராட்ட தியாகிகளை அவமதித்த

# ஆளுநர் கையால் முனைவர் பட்டம் பெற மறுத்த பேராசிரியர்களுக்கு வாழ்த்து!

## பொதுப்பள்ளிக்கான மாநில மேடை பொதுச்செயலாளர் பு.பா.பிரின்ஸ் கஜேந்திரபாபு அறிக்கை!

சென்னை, நவ. 4 -

இந்திய விடுதலைப் போராட்ட தியாகிகளை அவமதித்த ஆளுநர் ஆர்.என். ரவி கையால் முனைவர் பட்டம் வழங்கப்பட இருந்த பட்டமளிப்பு விழாவை புறக்கணித்த பேராசிரியர் சுரேஷ் மற்றும் பேராசிரியர் சி. ரமேஷ் ராஜ் ஆகியோருக்கு வாழ்த்துகள் என்றும், பட்டமளிப்பு விழாவை புறக்கணித்த TNGCTA, MUTA, MUFA ஆகிய ஆசிரியர் அமைப்புகளுக்கு பாராட்டுகள் என்றும் பொதுப்பள்ளிக்கான மாநில மேடை பொதுச்செயலாளர் பு.பா.பிரின்ஸ் கஜேந்திரபாபு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

இந்திய விடுதலைப் போராட்டத் தியாகியை அவமதிக்கும், பல்கலைக்கழகம் சுதந்திரமாக செயல்படுவதை அனுமதிக்க மறுக்கும், பல்கலைக் கழகத்தின் வேந்தராக பொறுப்பு வகிக்கும் ஆளுநர் கையால் முனைவர் பட்டம் பெற மறுத்த தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் சுரேஷ், மூட்டா முதலாம் மண்டலத்தின் தலைவர் பேராசிரியர் சி. ரமேஷ் ராஜ் ஆகியோருக்கு வாழ்த்துகள்.

ஆசிரியருக்கு உண்டான முழு இலக்கணத்துடன் நடந்துக் கொண்டுள்ள பேராசிரியர் சுரேஷ், பேராசிரியர் ரமேஷ் ராஜ் ஆகியோர் வாழ்க.



மதுரை காமராசர் பல்கலைக்கழக ஒருங்கிணைப்புக் குழுவில் இருக்கும் TNGCTA, MUTA, MUFA ஆகிய அமைப்பின் Senate மற்றும் Syndicate உறுப்பினர்கள் பட்டமளிப்பு விழாவை புறக்கணித்து ஆசிரியர்களின் கண்ணியத்தையும், பல்கலைக் கழகத்தின் மாண்புகளையும் காத்துள்ளனர்.

இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில், விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற மாணவர்களுக்கு மிகப் பெரும் ஊக்க சக்தியாக விளங்கியவர்கள் ஆசிரியர்கள். பிரிட்டிஷ் அரசுக் கல்லூரிப் பணியில் இருந்து விலகி ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றவர்கள் அன்றைய ஆசிரியர் பெருமக்கள்.

விடுதலைப் போராட்ட உணர்வுகளுடன் இந்திய மக்களின் இறையாண்மை, கூட்டாட்சித் தத்துவம், மக்களாட்சியின் மாண்புகள், பல்கலைக்கழகத்தின் தன்னாட்சி அதிகாரம் ஆகியவற்றை காத்திட இன்று (நவம்பர் 2, 2023) மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவை புறக்கணித்துள்ள ஆசிரியர் அமைப்புகளுக்கும், தங்களின் நேரத்தை செலவிட்டு, கடும் உழைப்பின் பயனால் தாங்கள் பெற இருந்த முனைவர் பட்டம் வழங்கிடும் விழாவை புறக்க ணித்துள்ள பேராசிரியர் பெருமக்களுக்கும் பொதுப் பள்ளிக்கான மாநில மேடை தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

மெக்கார்த்திசத்தை (McCarthyism) எதிர்த்துப் போராடுங்கள் என்று ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் நோபல் பரிசு பெற்ற இயற்பியல் பேராசிரியர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் அன்று அறைகூவல் விடுத்தார்.

விடுதலை இந்தியாவில், மக்களின் இறையாண்மையை உறுதிப்படுத்தும் இந்திய அரசமைப்புச் சட்டத்தை காத்திட எத்தகையத் தியாகத்தையும் செய்ய இந்திய மக்கள் தயாராக இருக்க வேண்டும் என்று அண்ணல் அம்பேத்கர் அவர்கள் அரசியல் சாசன நிர்ணய சபையில் இருந்தே அறைகூவல் விடுத்தார்.

இன்றைய பட்டமளிப்பு விழாவை புறக்கணித்துள்ள TNGCTA, MUTA, MUFA ஆகிய அமைப்புகளின் பேராசிரியர் பெருமக்கள் இந்திய நாட்டின் அரசமைப்புச் சட்டம் முன்வைக்கும் மக்களிடம் இறுதி இறையாண்மைக் கொண்ட, சோஷலிச, சமயச் சார்பற்ற, ஜனநாயக குடியரசான இந்தியாவை காத்திட உழைக்கும் வர்க்கமாக ஆசிரியர்கள் அணித்திரள்வார்கள் என்ற பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளனர். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் காத்திட வர்க்க ஒற்றுமை ஓங்கட்டும்!

இவ்வாறு பொதுப் பள்ளிக்கான மாநில மேடை பொதுச் செயலாளர் பு. பா. பிரின்ஸ் கஜேந்திர பாபு அறிக்கையில் குறிப்பிட் டுள்ளார்.

# சிவகங்கை நகரத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல்!

## சி.எம்.துரைஆனந்த் வேண்டுகோள்!

சிவகங்கை, நவ. 4 -

சிவகங்கை நகரக் கழகச் செயலாளர் சி.எம்.துரை ஆனந்த் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

கழக தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆனைக்கினங்க மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் ஆலோசனையின்படி இன்று (4.11.2023) மற்றும் (5.11.2023 ) அன்று சிறப்பு வாக்காளர் சேர்த்தல்,நீக்கல்,திருத்தம் ஆகிய பணிகள் மேற்கொள்ள சிவகங்கை நகரத்தில் 1முதல் 27 வார்டு வரையிலான வார்டு பொறுப்பாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் முகாம் நடைபெற உள்ளதால் அனைத்து வார்டு பொறுப்பாளர்கள் இன்று மாலை 5 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர் கழக செயலாளர், நகர்மன்ற தலைவரிடம் தங்கள் வார்டுக்கான புதிய வாக்காளர் பட்டியல் பெற்று இன்று நடைபெற உள்ள முகாமில் கலந்து கொண்டு அதிகப்படியான புதிய இளம் வாக்காளர்களை சேர்த்திட அன்போடு வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தெலுங்கானா சட்டப் பேரவைத் தேர்தல் : காங்கிரசுக்கு

# ஜெகன்மோகன் ரெட்டியின் சகோதரியின் கட்சி ஆதரவு!

ஹைதராபாத், நவ. 4 -

ஆந்திர முதலமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டியின் சகோதரி ஒய்.எஸ். ஷர்மிளா ரெட்டி, ஒய்.எஸ்.ஆர்.டி.பி. என்ற புதிய அரசியல் கட்சியை தொடங்கி நடத்தி வருகிறார்.

அண்மையில் டெல்லி சென்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களை ஷர்மிளா ரெட்டி நேரில் சந்தித்து பேசினார்.

இந்நிலையில் விரைவில் நடைபெறவுள்ள தெலுங்கானா சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியை தனது கட்சி முழுமையாக ஆதரிப்பதாக ஒய்.எஸ். ஷர்மிளா ரெட்டி தெரிவித்துள்ளார்.

தெலுங்கானா சட்டப் பேரவைத் தேர்தலில் தனது கட்சி போட்டியிடாது என்றும், அனைத்து தொகுதிகளிலும் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரிக்கும் என்றும் ஷர்மிளா அறிவித்துள்ளார்.

### நெல்லை மாவட்டம் – களக்காடு அருகே

# கொடுமுடியாறு அணையில் இருந்து பிசான சாகுபடிக்கு தண்ணீர்!

## சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு திறந்து வைத்தார்!

நெல்லை, நவ. 4 -

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க நெல்லை மாவட்டம் களக்காடு அருகே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள கொடுமுடியாறு அணையில் இருந்து பிசான சாகுபடிக்காக தண்ணீரை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு அவர்கள் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் முன்னிலையில் திறந்து வைத்தார்.

நெல்லை மாவட்டம் நாங்குநேரி கொடு முடியாறு அணையில் 52.25 அடி கொள்ளளவு கொண்ட அணையில் தற்போது நீர் இருப்பு 50.50 அடி ஆகும். விவசாயிகள் பிசான சாகுபடிக்காக இந்த அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடக் கோரிக்கை விடுத்த நிலையில் கோரிக்கையினை ஏற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தண்ணீரை திறந்து விட உத்தரவிட்டார் கள்.

அதன்படி சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு கொடுமுடி ஆற்றில் இருந்து பிசான சாகுபடிக்காக தண்ணீரை திறந்து வைத்து செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி கொடுமுடி ஆறு அணையில் இருந்து தண்ணீர் திறக்க ப்பட்டுள்ளது.இதன் மூலம் நாங்குநேரி மற்றும் இராதாபுரம் வட்டங்களில் உள்ள வள்ளியூரான்கால், படலையார்கால், ஆத்துக்கால் ஆகியவற்றின் மூலம் 5,780 ஏக்கர் விவசாய நிலம் பயன்பெறும் இன்று 03 11 2023 முதல் 31032024 வரை 150 நாட்களுக்கு 100 கன அடி வீதம் நீர் இருப்பை பொறுத்து தண்ணீர் திறக்கப்படும்.விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக சட்டமன்றம், அமைச்சரவை கூட்டங்களில் நிறைவேற்றப்படும் மசோதாக்கள் ஆளுநர் உடனடியாக அனுமதி அளிக்க வேண்டும்.ஆனால் நமது ஆளுநர் அதனை படித்துப் பார்ப்பது கூட கிடையாது. கிடப்பில் போடப்படுகிறது.அந்த மசோதாக்கள் செத்துவிட்டதாக ஆளுநர் கூறுவது தவறானது.சட்டமன்றம்,அமைச்சரவை நிறைவேற்றப்பட்ட மசோதா இறையாண்மை உள்ளது,என்பதை ஆளுநர் புரிந்து கொள்ள வேண்டும். மக்களுக்கு என்ன தேவை, என்பதை உணர்ந்து தான் சட்ட மசோதாக்கள் நிறைவேற் றப்படுகிறது.

சிம்லாவில் நடைபெற்ற சபாநாயகர் மாநாட்டில் இதுபோன்று ஆளுநருக்கு அனுப்பப்படும் சட்ட மசோதாக்களுக்கு, கால நிர்ணயம் செய்ய வேண்டுமென அதாவது குறிப்பாக ஒரு மாத காலம் காலக்கெடு கொடுக்க வேண்டுமென பேசியுள்ளேன்.இது வரை அவர்கள் எந்த முடிவும் எடுக்காத நிலையில்,நமது முதலமைச்சர் உச்சநீதிமன்றத்தை நாடியுள்ளார். இதுபோன்று அண்டை மாநிலமான கேரளாவும் நீதிமன்றம் சென்றுள்ளது. இப்படி செயல்படும் ஆளுனர்களை தற்போது ஒன்றிய அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது விநோதமாக உள்ளது.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு அவர்கள் தெரிவித்தார்.

நிகழ்வில் களக்காடு நகர்மன்ற துணை தலைவர் பி.சி.ராஜன்,தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக் உள்பட கழகத்தினர், அரசு அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில்

# நெல்லை மாநகரக் கழக இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் அறிவிப்பு!

நெல்லை, நவ. 4 -

நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நெல்லை மாநகர இளைஞரணி ஆலோசனைக் கூட்டம் நெல்லை மாநகர அலுவலகத்தில் வைத்து நாளை 5 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் தலைமையில் மத்திய மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை,மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன்,மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அன்பழகன் என்ற ரவி, வழக்கறிஞர் இனியன்,குரு ஜெஸி ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அலிப்மீரான் வரவேற்புரையாற்றுகிறார்.

நிகழ்வில் மாநகர துணைச் செயலாளர்கள் அப்துல்கையூம், சுதா மூர்த்தி, பகுதி செயலாளர்கள் தச்சை சுப்பிரமணியன், பாளை அண்டன் செல்லதுரை, நெல்லை நமச்சிவாயம் என்ற கோபி, மேலப்பாளையம் துபாய் சாகுல் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் செல்வம் நன்றி உரையாற்றுகிறார்.

பொருள்: டிசம்பர் 17 .12.2023 அன்று சேலத்தில் நடைபெற உள்ள கழக இளைஞர் அணி இரண்டாவது மாநாடு சம்பந்தமாக. கழக இளைஞர் அணி ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு

விழுப்புரம் வடக்கு மாவட்டம், மரக்காணம் ஒன்றியம், நல்லூரைச் சேர்ந்த எஸ்.கண்ணன் அவர்கள், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப் பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 02.11.2023

**துரைமுருகன்,**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## கரூர் மாவட்டம்

# கரூர் மத்திய பகுதி - கரூர் மத்திய மேற்கு பகுதி மற்றும் அரவக்குறிச்சி பேரூர்க் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

கழக சட்டதிட்ட விதிகளின்படி, 'ஒருவருக்கு ஒரு பொறுப்பு' என்ற அடிப்படையில்;

கரூர் மாவட்டம், கரூர் மாநகரம், கரூர் மத்திய பகுதிச் செயலாளர் எஸ்.பி.கனகராஜ் அவர்களை, கரூர் மத்திய பகுதிச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, திரு.**வி.ஜி.எஸ்.குமார்** *(47, பாரதிதாசன் தெரு, கோவை ரோடு, கரூர், கரூர் மாவட்டம்)* அவர்கள் கரூர் மத்திய பகுதிக் கழகப் பொறுப்பாளராகவும்;

அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றியம், அரவக்குறிச்சி பேரூர்க் கழகச் செயலாளர் என்.மணிகண்டன் அவர்களை, அரவக்குறிச்சி பேரூர்க் கழகச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக திரு. **பி.பாலசுப்பிரமணி (எ) பி.எஸ்.மணி** (11/1, பொன் நகர், அரவக்குறிச்சி & அஞ்சல், கரூர் மாவட்டம்) அவர்கள் அரவக்குறிச்சி பேரூர்க் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுவதுடன்,

கரூர் மத்திய மேற்கு பகுதிச் செயலாளர் கா.அன்பரசன் அவர்களை, அவர் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக திரு. **ஆர்.ஜோதிபாசு** *(4, திருநகர் 3வது கிராஸ், காமராஜபுரம் வடக்கு, செங்குந்தபுரம் அஞ்சல், கரூர் வட்டம் & மாவட்டம்)* அவர்கள் கரூர் மத்திய மேற்கு பகுதிக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த பகுதி மற்றும் பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள், இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 02.11.2023

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.



கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க, கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி மதுரை தெற்கு மாவட்டத்தில் மாணவர் அணி சார்பாக நடைபெற்ற பள்ளி, கல்லூரி மாணவ –மாணவியருக்கு நடத்தப்பட்ட கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சுமார் ரூபாய் 6 லட்சம் மதிப்பிலான பரிசுகள் மற்றும் நிதி உதவிகள் வழங்கி மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் பாராட்டினர். உடன் மாணவர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், கழகத்தினர், பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள், நடுவர்கள் மற்றும் மாணவ – மாணவியர் உள்ளனர்.




நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் முகாம் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ. மகேஷ் தலைமையில் நடைபெற்றது.

### வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணி!

# இராமநாதபுரம் மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

இராமநாதபுரம், நவ. 4 - தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி இராம நாதபுரம் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரி பார்ப்பு பணியில் முழு கவனத்துடன் ஈடுபடுவீர் என இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம். எம்.எல்.ஏ. கழக நிர்வாகி களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது:- 01.01.2024ம் தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு தமிழகத்தில் உள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை கடந்த 27.10.2023 அன்று தமிழக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது அதனைத் தொடர்ந்து 27.10.2023, 09.12.2023 வரை புதிய வாக் காளர்களை சேர்க்கவும், மற் றும் பெயர்கள் நீக்கம் செய்ய வும், மனு செய்ய தேர்தல் ஆணையத்தால் கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இது தவிர 04.11.2023, சனி 5.11.2023, ஞாயிறு, 18.11.2023 சனி மற்றும் 19.11.2023, ஞாயிறு ஆகிய 4 நாட்களில் நிர்ணயிக் கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம் கள் நடத்தபட உள்ளது. இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும் இடம் மாறிய வாக்காளர்களும் 01 0124,அன்று 18 வயது நிரம் பக்கூடிய புதிய வாக்காளர்க ளும் தங்களது பெயர்களை சேர்க்க நீக்க திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படி வங்களை பூர்த்தி செய்து பூர்த்தி செய்த படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும் இதன் அடிப்படையில் 01.01.2024 அன்று 18 வயது நிரம்பியவர் கள், பெயர்களையும் வாக்கா ளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களை யும் புதிதாக குடி பெயர்ந் துள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும்

தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தீவிர பணி கள் மேற்கொள்ள வேண் டும். இராமநாதபுரம் மாவட் டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர்ச் செயலாளர் கள், வார்டு கிளைக் கழகச் செயலாளர்கள், சார்பு அணி கள் நிர்வாகிகள், வாக்குச்சா வடியில் நிலை முகவர்கள், ஆகியோர் தங்களை பணி யில் முழுமையாக ஈடுபடுத்தி தங்கள் ஆற்றிய பணிகளின் விவரங்களை மாவட்டக் கழகத்திற்கு அவ்வப்போது தெரிவித்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிவிப்பில் தெரிவித் துள்ளார்.

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணி!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!



கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைப்படி 01.01.2024 ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட்டுள்ளது. அதன்படி திருச்சி தெற்குமாவட்டத்திற்கு உட்பட்ட திருச்சிகிழக்கு, திருவெறும்பூர், மணப்பாறை ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளுக்கு புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்ய 04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை), 18.11.2023 (சனிக்கிழமை), 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை சிறப்பு முகாம்களும் நடைபெறவுள்ளது. அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர் பட்டியலில் உள்ள தங்களது விபரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 01.01.2024 அன்று 18வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த முகாம் மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை தற்போதுள்ள பட்டியலிலிருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேர்தல் ஆணையம் 27.10.23 அன்று வெளியிட்டுள்ள வாக்காளர் பட்டியலை பெற்றுச் சென்ற அனைத்து பகுதி,ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் உடனடியாக அனைத்து வாக்குச்சாவடி பாக முகவர்களுக்கு அளித்து, மேற்கண்டவாறு அறிவித்துள்ள சிறப்பு முகாம் நடைபெறவிருக்கும் திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட கீழ்க்கண்ட பட்டியலில் உள்ள பொறுப்பாளர்கள், அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாக்காளர் முகாம்களுக்கு பகுதி,ஒன்றிய, நகர,பேரூர், வட்ட, வார்டு கிளை கழக செயலாளர்களுடன்சென்று கண்காணிக்கவும், வாக்குச்சாவடி முகவர்கள்,வாக்குச்சாவடி உறுப்பினர்கள் ஆகியோர்முகாமில்உள்ளார்களா என உறுதி செய்தும் இவ்வாய்ப்பினை வாக்காளர்கள் பட்டியலில் பெயர் சேர்க்க, வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்குதல், திருத்தம், முகவரி மாற்றம், ஆதார் எண் இணைப்பு போன்ற பணிகளை BLA2 பொறுப்பாளர் கள்இதைசரிபார்த்து,இப்பணிகள் குறித்து கழக நிர்வாகிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை மாவட்டக் கழகத்திற்கு அவ்வப்போது தெரியப்படுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

| வ. எண் | பகுதி / ஒன்றிய / நகர / பேரூர் | பகுதி / ஒன்றிய / நகர / செயலாளர்கள் | பொறுப்பாளர்கள் |
|---|---|---|---|
| 1. | திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் | கே.எஸ்.எம். கருணாநிதி ஒன்றிய கழக செயலாளர் | கே.என்.சேகரன், தலைமை செயற்குழு உறுப்பினர்<br>பி.கிருஷ்ணகோபால், மாவட்ட அமைப்பாளர் |
| 2. | திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம் | சி.கங்காதரன் ஒன்றிய கழக செயலாளர் | அ.த.த.செங்குட்டுவன், மாவட்ட துணை செயலாளர்<br>கேபிள் தினகரன், மாநகர அமைப்பாளர் |
| 3. | வையம்பட்டி தெற்கு ஒன்றியம் | வி.ஏ.ராஜேந்திரன் ஒன்றிய கழக செயலாளர் | என்.கோவிந்தராஜ், மாவட்ட அவை தலைவர்<br>ஆர்.பி.சுந்தர்ராஜ், மாவட்ட அமைப்பாளர் |
| 4. | வையம்பட்டி வடக்கு ஒன்றியம் | ஆர்.ஸ்ரீரங்கன் ஒன்றிய கழக செயலாளர் | இரா.மூக்கன், மாவட்ட துணை செயலாளர்<br>ஜெ.ஜெ.மகேஸ், மாவட்ட அமைப்பாளர் |
| 5. | மருங்காபுரி வடக்கு ஒன்றியம் | சி.செல்வராஜ் ஒன்றிய கழக செயலாளர் | பி.எம்.சபியுல்லா, தலைமை செயற்குழு உறுப்பினர்<br>பா.சரவணன், மாநகர அமைப்பாளர் |
| 6. | மருங்காபுரி தெற்கு ஒன்றியம் | சி.சின்ன அடைக்கண் ஒன்றிய கழக செயலாளர் | லீலாவேலு, மாவட்ட துணை செயலாளர்<br>பி.ஏ.நூர்கான், மாநகர அவை தலைவர் |
| 7. | மருங்காபுரி மத்திய ஒன்றியம் | எம்.பழனியாண்டி ஒன்றிய கழக செயலாளர் | பி.அருள்சுந்தர்ராஜ், மாவட்ட அமைப்பாளர்<br>எம்.ஜியாவுதீன், மாவட்ட அமைப்பாளர் |
| 8. | மணப்பாறை ஒன்றியம் | சி.ராமசாமி ஒன்றிய கழக செயலாளர் | டால்பின் சாலமன், மாவட்ட அணி அமைப்பாளர்<br>எம்.பன்னீர்செல்வம், மாநகர அமைப்பாளர் |
| 9. | மலைக்கோட்டை பகுதி | மருந்துக்கடை ஆர்.மோகன் பகுதி கழக செயலாளர் | ஆறு.சந்திரமோகன், மாநகர துணை செயலாளர்<br>பி.எம்.குறிஞ்சி மன்னன், மாநகர அமைப்பாளர் |
| 10. | மார்க்கெட் பகுதி | ஆர்.ஜி.பாபு பகுதி கழக செயலாளர் | பொன்.செல்லையா, மாநகர துணை செயலாளர்<br>ஏ.எம்.அசாருதீன், மாநகர அமைப்பாளர் |
| 11. | பாலக்கரை பகுதி | டி.பி.எஸ்.எஸ்.ராஜ்முகமது பகுதி கழக செயலாளர் | கே.கே.கே.கார்த்தி, பொதுக்குழு உறுப்பினர்<br>டி.செந்தில், மாநகர அமைப்பாளர் |
| 12. | கலைஞர் நகர் பகுதி | ஜி.மணிவேல் பகுதி கழக செயலாளர் | எம்.தமிழ்செல்வம், மாநகர பொருளாளர்<br>கே.லோகநாதன், மாநகர அமைப்பாளர் |
| 13. | அரியமங்கலம் பகுதி | ஏ.எம்.ஜி.விஜயகுமார் பகுதி கழக செயலாளர் | யு.ராஜேஸ்வரன், பொதுக்குழு உறுப்பினர்<br>கோவி.நாகராஜ், மாநகர அமைப்பாளர் |
| 14. | பொன்மலை பகுதி | இ.எம்.தர்மராஜ் பகுதி கழக செயலாளர் | கே.ஏ.வி. தினகரன், மாவட்ட அமைப்பாளர்<br>எஸ்.அடைக்கலராஜா, மாவட்ட அமைப்பாளர் |
| 15. | காட்டூர் பகுதி | ஒ.நீலமேகம் பகுதி கழக செயலாளர் | என்.செந்தமிழ் செல்வன், மாவட்ட அமைப்பாளர்<br>ஏ.பி.ரகுநாதன், மாநகர அமைப்பாளர் |
| 16. | திருவெறும்பூர் பகுதி | எஸ்.சிவக்குமார் பகுதி கழக செயலாளர் | கோ.ரமேஷ், மாவட்ட அமைப்பாளர்<br>எஸ்.இப்ராஹிம், மாநகர அமைப்பாளர் |
| 17. | துவாக்குடி நகரம் | இ.காயாம்பு நகர கழக செயலாளர் | எம்.சி.சிவக்குமார், மாவட்ட அமைப்பாளர்<br>என்.ரமேஷ், மாநகர அமைப்பாளர் |
| 18. | மணப்பாறை நகரம் | மு.ம.செல்வம் நகர கழக செயலாளர் | முத்தமிழ் கருணாநிதி, மாவட்ட அமைப்பாளர்<br>நவல்பட்டு கே.சண்முகம், பொதுக்குழு உறுப்பினர் |
| 19. | கூத்தைப்பார் பேரூர் | எம்.ஆர்.டி.பி.கே.தங்கவேலு பேரூர் கழக செயலாளர் | ஆ.சோழமாதேவி ஜெகதீசன், மாவட்ட அமைப்பாளர்<br>புலவர் ந.ப.மனோகரன், மாவட்ட அமைப்பாளர் |
| 20. | பொன்னம்பட்டி பேரூர் | கே.ஏ.நகராஜ் பேரூர் கழக செயலாளர் | இரா.குணசேகரன், மாவட்ட பொருளாளர்<br>எம்.முகமது இலியாஸ், மாவட்ட அமைப்பாளர் |

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
செயலாளர், திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

# பதிகத்துப் பொருளே, வருக!
# பழந்தமிழர் புறப்பாட்டே, வருக! வருக!



ஒன்றிய அளவில் ஒரு இக்கட்டான சூழலில், நாட்டின் நலம், பரந்துபட்ட இந்திய துணைக் கண்டத்தில், வேறுபட்ட இன, மத, மொழி, கலாச்சாரம் கொண்ட கோடிக்கணக்கான மக்களின் உணர்வுகள், உரிமைகள் நசுக்கப்பட்டுவரும் நாட் களில், இதோ வந்து விட்டது நாடாளுமன்றத் தேர்தல் என்ற நிலையில், தமிழ்நாடு மட்டுமின்றி, இந்தியாவிற்கே மக்கள் இன்னலகற்றும் ஆட்சி அமைந்திட ஒல்லும் வகை யெல்லாம் ஓயாது உழைத்து வியூகம் வகுத்திடும் நமது உயரனைய தலைவர், உத்தமத் தலைவர் தளபதியவர்கள் கட்சி, ஆட்சி, எனும் இரட்டை குதிரைகள் பூட்டிய ஜனநாயகத் தேரினை லாவகமாக செலுத்துவதை ஊரும், ஊடகமும், நாடும், நல்லோரும் பாராட்டிடும் வண்ணம் செயல்பட்டுவருகிறார்.

“எத்தனை பக்கம் எதிரிகள் சூழ்ந்தாலும், அத்தனை பக்கமும் தாக்குங்கள்!” என்பது அடால்ப் ஹிட்லரின் யுத்த வியூகம். அதைப்போல பாசிச பா.ஜ.க.வை, மதவாத மத்திய அரசை, சனாதன இழிவு சங்கி கும்பலை, வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்த, தனது அம்பறாதுணியில் இருக்கும் அத்தனை அஸ்திரங்களையும் பிரயோகிக்கத் துவங்கி விட்டார் நமது தலைவர், முதல்வர் தளபதியவர்கள்.

தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்விற்காக அவர் தீட்டிய திட்டங்கள், நடைமுறைப் படுத்திய சட்டங்கள், தமிழ்நாட்டு மாதர்தம்மை தனை ஈன்ற அன்னையராய், அருமைச் சகோதரியராய், ஆசை மகள்களாய் போற்றி அவர் செய்த நலத்திட்டங்கள் மலைபோல், மழைபோல் ஆதரவு பெருகி நிற்கிறது என்றாலும், அவற்றை ஒருமுகப்படுத்தி, நாடாளு மன்றத் தேர்தலில் நமதணிகளுக்கு சிந்தாமல், சிதறாமல் பெற்றிட, நாளும் உழைத்து வருகிறார்.

அந்த வகையில் தேர்தல் வாக்குச் சாவடி மையங்களில் கவனமாய் இருத்தல் மிகமிக அவசியமாகிறது. அதற்காகத் தான் இந்தியாவிலேயே எந்த அரசியல் கட்சியும் இப்படி யொரு அரண் போன்ற அமைப்பை ஏற்படுத்தியதில்லை என மாற்றார் மலைக்க, அரசியல் நோக்கர்கள் அதிசயிக்கும் வண்ணம் அமைத்திட்டார் தேர்தல் வாக்குச் சாவடி பாக முகவர்கள் குழுக்களை.

இதில் வழக்கறிஞர்கள், பட்டதாரிகள் ஆண் பெண், வலைத்தள அனுபவம்மிக்கவர்கள், இளைஞர்கள், மாண வர்கள் என இலட்சக்கணக்கான முகவர்கள் இராணுவ அமைப்புடன் வார்ரூம்களையும் அமைத்து வாக்குப் பதிவேடு களில் உள்ள தவறான தகவல்களைக் களைந்து செயல்பட்டு வருகின்றனர்.

நாட்டையாளும் மன்னவன், நல்லாட்சி புரியும் அரசன் மாற்றார் வசம் மண்டியிடாத மக்களாட்சிக் காவலன், தனது படைகளின் வலிமையை அறிய போர்க்காலங்களில் சென்று தனது ஆயுதக்கிடக்கு, கொல்லர் பட்டறை, காலாட்படை, தேர் படை, யானைப்படை, குதிரைப்படை என எல்லாவற்றையும் தனது அரசின் கீர்த்தி நிலைத்திட நேர்த்தியுடன் சோதித்தறி வதுபோல் நமது தலைவர் தளபதியவர்களும், வலைத்தள களப்பணியாளர்கள், வாக்குச் சாவடி பாகமுகவர்கள் என அனைவரையும் சந்தித்து, அறி வுரை, ஆலோசனைகள் வழங் கப் புறப்பட்டார்.



வழக்கறிஞர் **வெ.அன்புவாணன்**
கொள்கை பரப்பு
துணைச் செயலாளர்.

கழக அமைப்பு ரீதியான நிர்வாக வசதிக்காக பிரிக்கப் பட்ட 74 மாவட்டங்களையும், அதற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளையும் ஐந்து மண்டலங்களாகப் பிரித்துக் கொண்டு, தீரர்கோட்டமாம் திருச்சி, கொங்கு சீமையில் கோவை, கே.வி.கே.சாமி, ஏ.வி.பி.ஆசைத்தம்பி போன்ற அந்நாள் திராவிட இயக்க அடலேறுகளைத் தந்த நெல்லை, தி.மு. கழகத்திற்கு முதல் தேர்தல் வெற்றியைத் தந்த திருப்புமுனை திருவண்ணா மலை என நான்கு மண்டலங்களுக்குட்பட்ட பாகமுகவர்கள், சட்டமன்ற பொறுப்பாளர்கள் என அனைவ ரையும் அவரவர் பகுதிகளுக்கே சென்று சந்தித்த தலைவர் தளபதியவர்கள் இறுதியாக எங்கள் திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களின் பாகமுகவர்கள் மண்டல மாநாட்டிற்கு வரும் நவம்பர் 5ஆம் தேதி திருவள்ளூருக்கு வருகிறார்.

அறிவுலகமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சியை உள்ளடக்கிய தொண்டை மண்டலப் பகுதியான திருவள்ளூருக்கு வருகிறார்!

திராவிட இயக்க முன்னோடித் தலைவர்கள் சர்.பிட்டி. தியாகராயர், நடேசனார், கழக அமைப்புச் செயலாளர் என்.வி. நடராஜன் (ஞாயிறு சோழவரம் ஒன்றியம்) போன்ற தியாகத் தலைவர்களின் பிறப்பிடமான மாநெல்லூர் (கும்மிடிப்பூண்டி) சின்னக்காணவனம் (பொன்னேரி) பகுதிகளை உள்ளடக் கிய மண்டல மாநாட்டிற்கு வருகிறார் நமது ஆற்றலாளர் அருமைத் தளபதி!

கோவில் கூடாதென்பதல்ல! அது கொடியவரின் கூடார மாக ஆகிவிடக்கூடாது என்று 52 லேயே பகுத்தறிவு தீ பரப் பிய ‘அதிரடி’ வசனங்களின் பிதாமகன் தலைவர் கலைஞரின் வார்ப்பு, நகரெங்கும் கோயில், நகரேஷு காஞ்சி என காளிதாசப் பெரும்புலவனால் புகழப்பட்ட திருத்தலம் காஞ்சி மாநகரையும், சமயத்தில், சன்மார்க்க நெறிகளில் புரட்சி புரிந்த இராமானுசர் தோன்றிய திருபெரும்புதூர் நகரங்கள் சேர்ந்திணைந்த திருவள்ளூர் மாநாட்டிற்கு வருகிறார்!

இவற்றோடு தனது சட்டமன்றத் தொகுதியான கொளத் தூர் தொகுதியையும் உள்ளடக்கிய சென்னை மண்டல மாநாட்டிற்கு வருகிறார்.

ஒடுக்கப்பட்ட மக்களின் இடுக்கண் களைய ஓங்கிக் குரல் கொடுத்த அயோத்திதாசப் பண்டிதர், வட்டமேசை மாநாடு வரை சென்று முழங்கிய இரட்டை மலை சீனிவாசன் போன் றோர் உலவிய செங்கற்பட்டோடு இணைந்த சென்னை மண் டல மாநாட்டிற்கு வருகிறார் மாசற்ற முதல்வர்! மாண்புநிறை தலைவர்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்! என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் அடியொற்றி ஆட்சி புரிந்து, 1989 ல் பெண்களுக்கும் சொத்துரிமை உண்டு என்று சட்ட மியற்ற தலைவர் கலைஞரின் சிந்தையில் உதித்திட காரண மான தந்தை பெரியாரின் சுயமரியாதை சமத்துவ மாநாடு 1929 ல் நடைபெற்ற செங்கல்பட்டு பெருநகரை ஒருகாலத்தில் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு, இன்று தனிக் குடித்தனம் போன தனையனாய் திகழும் திருவள்ளூருக்கு வருகிறார் நமது திராவிட மாடல் நாயகர் தளபதியவர்கள்.

“திருவள்ளூருக்கு நான் எத்தனையோ முறை வந்திருக் கிறேன். இளைஞரணிச் செயலாளராக, சட்டமன்ற உறுப் பினராக, மேயராக, எதிர்கட்சி தலைவராக! ஆனால் கழக ஏற்றத்திற்காக உழைத்து, களைத்து, தளர்ந்த கழக முன் னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி, கௌரவப்படுத்தும் இந்த நிகழ்வே எனக்கு எனது வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்வு “ என்று 2009 ல் மாவட்ட திமுகழகத்தின் சார்பில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கிய தலைவர் இதே திருவள்ளூருக்கு முதல்வராகவும் வந்து விட்டார் பலமுறை!

இந்த ஆண்டின் துவக்கத்திலேயே இந்தித் திணிப்பை எதிர்த்து தங்கள் இன்னுயிரை தியாகம் செய்த மாவீரர்க ளுக்கு வீரவணக்கம் செலுத்த ஜனவரி 25 வீரவணக்க நாள் அன்று ஆதிக்க இந்தியை எதிர்த்து, போர் முழக்கம் செய்த வர். அடுத்து பல நிர்வாக வசதிகளுக்காக நீர்நிலைகள், சாலை மேம்பாட்டு பணிகளை ஆய்வு செய்திடவும் பலமுறை வந்திருக்கிறார் எங்கள் தொண்டை மண்டலத்திற்கு.

“பதவியென்பது நான் தோளில் போடும் துண்டு. கொள் கையோ நான் இடுப்பில் அணியும் வேட்டி!” என, பற்றற்ற அரசியலுக்கு இலக்கணம் வகுத்த பேரறிஞர் அண்ணாவின் பொன்மொழியை அணுவளவும் மறவாமல், இயக்கத்திற் காக உழைத்து, சர்வபரி தியாகங்கள் செய்து, தனது இளமை வசந்தங்களை ஓராண்டு சிறையில் கழித்த சிறைப்பறவை, தலைவர் கலைஞர், தமிழினத்தளபதி ஆகியோர் மீது மாறாத, பிடிவாத முரட்டு பக்தி கொண்டிருந்த முன்னாள் மாவட்டச் செயலாளர் மறைந்த அண்ணன் கும்மிடிப்பூண்டி மிசா. கி.வேணு அவர்களின் இறப்புச் செய்தி கேட்டு, துடிது டித்து அறிக்கைவிட்டு, துன் பமுறு முகத்துடன் அவர் இல்லம் வந்து இறுதியஞ் சலி செலுத்தினார். இயக்கத் திற்காக உழைத்தோரை இமைப்பொழுதும் மறவாத நமது இதயம் நிறைந்த தலைவர்.

ஒரு மிகப்பெரிய ஜன நாயக காவலரின் மகன், குடியரசுத் தலைவர்களையும், பிரதமர்களையும் அடையாளங்கண்டு, உருவாக்கிய அகில இந்திய அரசியல் ராஜதந்திரியின் வளர்ப்பு! வார்ப்பு!

டில்லி ஆதிக்கபுரியின் அரசியல் தலைவரையெல்லாம் அவசரநிலையின்போது அபயம் பெற, தர தனது கோபால புரத்து இல்லத்தின் படிகளில் காலடித்தடம் பதியச் செய்த கம்பீரத் தலைவர் கலைஞரின் வாரிசு!

தமிழ்நாட்டில் ஐந்து முறை நல்லாட்சி புரிந்து, 13 முறை போட்டியிட்டு தேர்தல் களத்திலெல்லாம் புறங்காணாத வெற்றிவீரரின் மகன்! இன்னும், இன்னும் எத்தனையோ பெருமைகள் உண்டு அவருக்கு!

இத்துடன் ஆருடங்கள் பல கணித்து, அவருக்கு கட்டம் சரியில்லை. வாஸ்து வசதியில்லை என்ற ஆசாடபூதிகளின் ஆசையை, அரிப்பைத் தகர்த்து, தரைமட்டமாக்கி இன்று தமிழ்நாட்டின் மக்கள் சக்தி வாய்ந்த முதலமைச்சர்!

ஆனால் ஏன் இப்படி ஓய்வின்றி உழைக்கிறார்?

ஊரார் கண்களை உறுத்துகிறார்? ஊடகங்களில் தினம், தினம் தலைப்புச் செய்தியாகிறார்?

பதில் ஒன்று தான்!

பேரறிஞர் அண்ணா அவர்கள் தனது அரசியலை தமிழ் நாடு, தமிழர் சுயமரியாதை, தன்மானம், மொழியுரிமை யென தனது ஐம்பத்தொன்பது ஆண்டுகளில் இயற்கையின் கோர முடிவால் திராவிட நாட்டினைக் கடந்து செயலாற்ற முடியாமல் போனது.

தலைவர் கலைஞர் பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைகளை இதயத்திலேந்தி மாநில சுயாட்சியை வற்பு றுத்தி, ஆளும் ஒன்றிய அரசுகளுக்கு சிம்ம சொப்பனாய், ஜனநாயகம் காக்கும் போர்வீரனாய் தனது சிந்தனைகளை செதுக்கிக் கொண்டார்.

பேரறிஞர் அண்ணா அவர்களையும் தலைவர் கலை ஞர் அவர்களையும் உள்வாங்கி, அரசியல் உலைகள நெருப் பில் வளர்த்தெடுக்கப்பட்ட நமது தளபதியவர்கள் நாளைய இந்திய துணைக் கண்டத்தின் விடியலுக்காய், நாசகர மத வாத தீய சக்திகளுக்கு முடிவுரை எழுதி, முறையான சமத் துவ சமுதாயம் மலர தனது அடிகளை அளந்தே வைக்கிறார். ஆபத்துகள், மிரட்டல்கள், பழிபாவ, விஷமப் பொய் பிரச்சா ரங்களுக்கு அஞ்சிடாமல்!


பெருங்கடலில் புரண்டோடும் பேரலைகளைப் போல உறுதியான இளைஞர் படைநாயகர் உதயநிதி என்னும் இதயநிதியையும் களத்தில் இறங்கி ஜனநாயக கடமையாற் றும் நோக்கோடு!

அந்தத் தலைவர் வருகிறார் திருவள்ளூரில் நடைபெறும் சென்னை மண்டல மாநாட்டிற்கு!


அவரை;

பதிகத்துப் பொருளே, வருக!

பழந்தமிழர் புறப்பாட்டே, வருக! வருக! என வரவேற்கி றோம். வாருங்கள் எங்கள் அய்யா துரையே!




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (2.11.2023) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் (SIPCOT) 2022–2023 ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத்தொகையாக 75 கோடியே 81 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலாளர் வி.அருண் ராய், “சிப்காட்” நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே.செந்தில் ராஜ் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (2.11.2023) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் (TNPL) 2022–2023 ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத்தொகையாக 12 கோடியே 22 இலட்சத்து 24 ஆயிரத்து 500 ரூபாய்க்கான வங்கி வரைவோலையை வழங்கினார். உடன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் மு.சாய் குமார், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலாளர் வி.அருண் ராய், ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.11.2023) மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் அயலக தொடர்பு குழு தலைவர் பெ. இராஜேந்திரன் எழுதிய “மந்திரக் கணங்கள்” நூலினை வெளியிட, தமிழறிஞர்கள் பெற்றுக் கொண்டனர். முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் இவ்வேளையில் 2004 ஆம் ஆண்டு அயலக எழுத்தாளர்களை தமிழ்நாட்டிற்கு அழைத்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அன்புடன் வரவேற்று அங்கீகாரத்தை கொடுத்த தருணங்களையும், மலேசிய மக்களுக்கு செய்துள்ள மகத்தான தமிழ்ப் பணிகள் குறித்தும் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்நிகழ்வின்போது, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆர்.எஸ். பாரதி மற்றும் டி.கே.எஸ். இளங்கோவன், மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (2.11.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் (ம) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் சென்னை தீவுத்திடல் மைதானத்தில் ஃபார்முலா ரேசிங் சர்க்யூட்டின் இந்திய பந்தய விழாவை நடத்துவதற்காக சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து ரூ.15 கோடி நிதியை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# உடன்பிறப்பே... 30

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த மா.பா.சாரதி அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

## மா.பா.சாரதி : வேலூர் கழகத்தின் சாரதி!

ஓவியம் : ரவி பேலட்



**2006**-ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின்போது, முத்தமிழறிஞர் கலைஞர் கழக வேட்பாளர்களையும், கூட்டணிக் கட்சி வேட்பாளர்களையும் ஆதரித்துப் பிரச்சாரப் பயணம் செய்தார். தேர்தல் நேரங்களில் வழக்கம்போல அவர் சூறாவளிப் பயணம் கிளம்பினால், எந்த ஊரில், எப்போது இருப்பார் என்பது அவராலேயே முடிவு செய்ய முடியாதது.

தலைவரைச் சந்திக்கும் உற்சாகத்தால், அவரது காரை நகரமுடியாத நிலைக்குக் கொண்டு செல்வார்கள், தொண்டர்கள். அன்றும் அப்படியான நிலைமைதான். வேலூரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டத்துக்கு அவர் வந்து சேர்ந்தபோது மணி இரவு 9.55. அடுத்த 5 நிமிடங்களில் கூட்டத்தை முடிக்கவேண்டும் என்கிறபோது, அவர் பேசமாட்டார் என தொண்டர்கள் நினைத்திருந்த நேரத்தில், ஒலிவாங்கியை வாங்கியவர், **"என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே..." என உயிர்நாதத்தை முழங்கிவிட்டு, "இன்று வேலூர் கோட்டையில்... நாளை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில்"** என ஒரு வரியில், 2 நிமிடங்களில் முழங்கிவிட்டு, உணர்ச்சிப் பெருக்கை உசுப்பினார்.

அது உணர்ச்சிப் பெருக்கை உசுப்பும் பேச்சல்ல, உரிமையைப் பெருக்கும் நோக்கம் கொண்டது என கலைஞர் அறிவார். ஆம், கலைஞர் பேசிய அந்த இடத்தில் இருந்துதான் கழகத்தின் விதை ஊன்றப்பட்டது. சென்னையில், பவழக்காரத் தெருவில் கூடும் முன்னரே, தி.மு.க.வைத் தொடங்குவதற்கான நோக்கம் குறித்து, 1949-ஆம் ஆண்டில் வேலூர் கோட்டை மைதானத்தில்தான் விளக்கக் கூட்டம் நடத்தினார் பேரறிஞர் அண்ணா. அன்று, வேலூர் கோட்டையைக் கழகத்தின் கோட்டையாக உருவாக்கிய முன்னோடிகளில் ஒருவர்தான் மா.பா.சாரதி.

### 15 பேரில் ஒருவர்

அன்றைய வடஆற்காடு மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவராகவும், கழகத்தின் வட ஆற்காடு மாவட்ட அவைத் தலைவராகவும் பணியாற்றியவர். 1957-ஆம் ஆண்டில் கழகம் முதன்முதலில் தேர்தலில் போட்டியிட்டு, 15 பேர் வெற்றிவாகை சூடி, சட்டமன்றத்தில் நுழைந்த நிகழ்வை கழகத்தின் வரலாறு அறிந்தோர் அறிவர். அதில் பெரும்பான்மை உறுப்பினர்கள் வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே. அவர்களில் வேலூரில் வெற்றி கண்ட மா.பா.சாரதியும் ஒருவர்.

1919-ஆம் ஆண்டில் பிறந்தவர் மா.பா.சாரதி. முழுப்பெயர் பார்த்தசாரதி. பின்னாட்களில் மா.பா.சாரதியாக நிலைக்கப்பெற்றது. அவரது அரசியல் வாழ்க்கையின் தொடக்கக் காலங்கள் இந்திய தேசிய காங்கிரஸ் செயல்பாடுகளாக இருந்தன. சுதந்திரப் போராட்டம் நடைபெற்ற காலம் என்பதால், எல்லா இளைஞர்களையும் போல அதில் ஈர்க்கப்பட்டு, காங்கிரஸ் உறுப்பினரானார். 1940-ஆம் ஆண்டு அவர் காங்கிரஸில் செயல்பட்டதாகக் குறிப்புகள் உள்ளன.

அரசியல் சமூக மாற்றத்தில் நாட்டம் கொண்ட அவர், திராவிட இயக்கக் கருத்துகளால் ஈர்க்கப்பட்டு, 1945-ஆம் ஆண்டிலிருந்து திராவிடர் கழகத்தில் செயல்படலானார். பின்னர் கழகம் தொடங்கப்பட்ட போது, அண்ணாவின் வழிகாட்டலில் தன்னையும் இணைத்துக் கொண்டு கழக உறுப்பினராக களச் செயல்பாடுகளில் ஈடுபடுத்திக் கொண்டார்.

### அரசியல் ஆசாபாசம் இல்லாதவர்

கழகம், பொதுத் தேர்தல்களில் அரசியல் பயிற்சி பெறுவதற்கு முன்பே நகர்மன்றத் தேர்தல்களில் நுழைந்தது. அதில் முன்னோடியானவர் மா.பா.சாரதி. 1952-ஆம் ஆண்டில் வேலூர் நகராட்சி உறுப்பினராகவும் தேர்வு பெற்று மக்கள் பணியாற்றியவர் சாரதி. கழகத்தின் மாநாடுகள், போராட்டங்கள், சிறை அனுபவங்கள் என எல்லாவற்றிலும் கழகத்தின் வேலூர் படையணியின் சிப்பாய்களில் சிப்பாயாக நின்ற தளபதி அவர். அந்த நம்பிக்கையால்தான் மக்கள் அவரை, 1957-ஆம் ஆண்டில் சட்டமன்றத்துக்கு அனுப்பினர். அந்த ஐந்து ஆண்டுகளில் சட்டமன்றத்தில் கழக உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் அரசினை செயல்படத் தூண்டியவர்கள் என்றால், அதில் அதிக அழுத்தம் கொடுத்தவராக மா.பா.சாரதி இருந்தார்.

1962-ஆம் ஆண்டு தேர்தலின்போது வேலூரில் போட்டியிட்ட மா.பா.சாரதிக்காக பிப்ரவரி 2 -ஆம் தேதி நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய அண்ணா, "மா.பா.சாரதி, அடக்கமுள்ளவர்" எனச் சான்றளித்தார். மேலும் அவர், "தி.மு. கழகச் சார்பில் சட்டமன்றத் தேர்தலுக்குப் போட்டியிடும் நண்பர் மா.பா.சாரதி அவர்கள், போலீசு நிலையத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்துவதில்லை, அலுவலகங்களில் அபாயத்தை ஏற்படுத்துவதில்லை, மக்களிடத்தில் பீதியைக் கிளப்புவதில்லை, அடக்கமான சுபாவமும் எளிய தோற்றமும், யாரையும் வீணாகப் பகைத்துக் கொள்ளாத தன்மையும், நல்ல வியாபாரம் செய்ததால் ஏற்பட்ட பொறையுடைமையும் கொண்டவர்.

**அரசியல் ஆசாபாசங்களில் ஈடுபாடு கொள்ளாமல், கொண்ட கொள்கையைக் கைவிடாமல் தொடர்ந்து அவர் பணியாற்றுவது பெருமைக்குரியது. அவர், சட்டமன்றம் செல்வதால், நாட்டுக்கும் நன்மை – நம் கொள்கைக்கும் வலிவு!**

நண்பர் சாரதி, நீங்கள் சொல்வதைக் கேட்டு உங்களுக்காக அவற்றை சட்டமன்றத்தில் எடுத்துக் கூறி வாதாடுபவர். சென்ற ஐந்து ஆண்டுகளின் சட்டசபை நிகழ்ச்சிப் புத்தகத்தை நீங்கள் படித்துப் பார்த்தால், சாரதி அவர்கள் எத்தனை கேள்விகள் கேட்டார்-எத்தனை குறுக்குக் கேள்விகள் போட்டார்- என்பதை நீங்கள் அறிவீர்கள்.

நண்பர் சாரதி அவர்கள் 30 ஆண்டுகளாக ஒரே கொள்கையில் பற்று கொண்டிருக்கிறார். அரசியல் ஆசாபாசங்களில் ஈடுபாடு கொள்ளாமல், கொண்ட கொள்கையைக் கைவிடாமல் தொடர்ந்து அவர் பணியாற்றுவது பெருமைக்குரியது. அவர், சட்டமன்றம் செல்வதால், நாட்டுக்கும் நன்மை- நம் கொள்கைக்கும் வலிவு!

சட்டமன்றம் செல்வதற்கு வேண்டிய எல்லா தகுதிகளும் சாரதிக்கு இருக்கின்றன. இதை அறிந்துதான், சென்றமுறை அவரை சட்டமன்றத்திற்கு அனுப்பினீர்கள். இந்த முறையும் அனுப்புவீர்கள் என்ற திடமான நம்பிக்கை உங்களுக்கு இருப்பது போலவே எனக்கும் இருக்கிறது" என மக்களிடம் வேண்டுகோள் வைத்தார். ஆனால், அண்ணா எச்சரித்தது போல, எதிர்க்கட்சி வேட்பாளர் வெற்றிபெற்றது, வேலூருக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டுக்கும் கேடாகத்தான் அமைந்தது.

### வேலூர் வழித்தோன்றல்களை உருவாக்கியவர்

சட்டமன்றத் தேர்தலில் தோல்வி என்றாலும், வேலூர் மக்களின் அன்பு, சாரதியை 1964-ஆம் ஆண்டில் நகர்மன்றத் தலைவராகத் தேர்வு செய்தது. அவர் பொறுப்பில் இருந்தபோதுதான் வேலூர் கோட்டை அருகில் அமைந்துள்ள மகாத்மா காந்தி சிலை திறக்கப்பட்டது. அண்ணா தலைமையில் நடந்த அந்த விழாவுக்கு, அப்போதைய எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அதன் பின்னர் கழகம் ஆட்சி அமைத்த 1967-ஆம் ஆண்டில் வேலூர் சட்டமன்ற உறுப்பினராக அவைக்குச் சென்றார் சாரதி. 1971-ஆம் ஆண்டிலும் மா.பா.சாரதி உதயசூரியன் சின்னத்தை அங்கு உதிக்க வைத்தார்.

இப்படி வேலூர் மண்டலத்தை, கழகத்தின் கோட்டையாகக் கட்டி எழுப்பியவர் சாரதி. தனக்கு அடுத்தும் வேலூரில் கழகமே வெற்றிக்கொடி நாட்ட வேண்டும் என பல இளைஞர்களுக்கு அரசியல் பயிற்சியையும், கொள்கைத் திறனையும் ஊட்டி வளர்த்த முன்னோடியாகத் திகழ்ந்தவர். அவரால் வளர்க்கப்பட்டவர்களில் ஒருவர்தான் கழகத்தின் தற்போதைய பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள்.

### அங்குசத்துக்கு அடங்கிய யானை

வேலூர் நகர் மன்றத்தில் 20 ஆண்டு காலம் உறுப்பினராகவும், மூன்று முறை நகராட்சித் தலைவராகவும் இருந்தார். தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வல்லவர் என்றும் மக்கள் மத்தியில் மா.பா.சாரதிக்குப் பெயர் இருந்தது. வேலூர் தொகுதியை கழகம் வெல்லும், அல்லது கழகத்தின் கூட்டணி வேட்பாளர் வெல்வார்கள் என்கிற நிலையை உருவாக்கிய முன்னோடியாகத் திகழ்ந்த மா.பா.சாரதி 1976-ஆம் ஆண்டு மிசா காலத்தில் மறைந்தார்.

'பெயரால், புகழால், வல்லமையால், செல்வாக்கால், உருவத்தால் யானையென அவர் இருந்தாலும், கழகத்தின் கட்டளையெனும் அங்குசத்துக்கு அடங்கியன்றோ பணி குவித்தார்' என கலைஞர் புகழ்மாலை சூட்டினார். வேலூரில் கழகக் கொடி உயரே பறப்பதற்குப் பின்னால், இந்தப் புகழ்மாலையை நினைவுக்குக் கொண்டு வருவதே உடன்பிறப்பாகும் சிறப்பு.

**...துடிக்கும்**

---

## கலைஞரைக் கொண்டாடும் சென்னைப் பல்கலை!




கலைஞர் நூற்றாண்டைக் கொண்டாடுவதில் அறிவுச் சமூகத்தின் பங்களிப்பு வியப்பளிக்கும் வகையில் அமைந்துள்ளது. சமூகச் செயற்பாட்டாளர்களும், கல்வியாளர்களும் கலைஞரின் சிந்தனைகளை, தமிழ்நாட்டுக்கு அவர் அளித்துள்ள அளப்பரிய பங்களிப்பை மாணவர்கள், இளைஞர்கள் மத்தியில் கொண்டு சேர்த்து வருகின்றனர்.

அந்த வகையில், சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்மொழித் துறை, 'முத்தமிழறிஞர் கலைஞர்-100' என்கிற தலைப்பின் கீழ், வாரம்தோறும் சிறப்பு உரையரங்கினை 10 வாரங்களுக்குத் தொடர்ந்து நடத்த உள்ளது. தமிழ்மொழித்துறை தலைவர் முன்னெடுப்பில் நடக்க உள்ள இந்த நிகழ்வுகளில், நவம்பர் 6-ஆம் தேதி, 'கலைஞரும் தமிழும்' என்கிற பொருளில் தமிழ்நாடு மாநிலத் திட்டகுழு முன்னாள் துணைத் தலைவர் பேராசிரியர் மு. நாகநாதன் உரை நிகழ்த்த உள்ளார்.

சென்னை மெரினா வளாகத்தில் அமைந்துள்ள பவள விழா கலையரங்கில் இந்த நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

---

## :ப்ளாஷ்பேக்





கதிரவன்

### கழக மேடையில் குடும்பம்!

என் அப்பா கொ.மு.கணேசன், நாமக்கல் மேற்கு மாவட்டம், திருச்செங்கோடு தொகுதி, மல்லசமுத்திரம் பேரூர்க் கழகத்தின் கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாவட்ட முன்னாள் துணை அமைப்பாளராக இருந்தவர். 1999-ஆம் ஆண்டு ஜூன் மாதம் நாமக்கல்லில் நடைபெற்ற தலைவரின் 76-வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில், மூன்று மாதக் கைக்குழந்தைகளாக இருந்த இரட்டையர்களான எனக்கும் என் உடன்பிறப்புக்கும் கதிரவன், ஆதவன் என்று பெயர் சூட்டினார், தலைவர் கலைஞர். மேடையில், என் அத்தையின் கையில் நானும், என் அம்மாவின் கையில் என் சகோதரனும், என் அப்பா, அக்கா என குடும்பத்துடன் தலைவர் அருகில் இருந்தோம் என்பதைப் பார்க்கும்போது இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் மனம் பூரிப்படைகின்றது.

**-க.கதிரவன், மல்லசமுத்திரம், நாமக்கல் மேற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---


## கருவூலம்

### ஆதாரமற்ற செய்திகள்!

**1955-ஆம் ஆண்டிலேயே தி.மு. கழகத்தின் மீது தீய எண்ணத்துடன் போலிச் செய்திகள் பரப்பப்பட்டன. கழகத் தின் செய்திகளையும், கழகப் பேச்சா ளர்களின் பேச்சுகளையும் உள்ளது உள்ளவாறு வெளிப்படுத்தாமல், அவற்றை மறைத்தும் மாற்றியும், திரித்தும், புனைந்தும் சில ஏடுகள் செய்திகள் வெளியிட்டன. அவற்றைக் கண்டித்தும், 'அந்த ஏடுகளுக்கு கழகத் தோழர்களும், பேச்சாளர்களும் பேட்டி, செய்திகள் கொடுக்க வேண்டாம்' என்றும் கழகத்தின் சார்பில் அறிவிப்பு கள் வெளியிடப்பட்டன.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 290




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.